௳

சங்கச்செய்யுள்.

விளம்பிநாகனர் செய்த

# நான்மணிக்கடிகை

## மூலமும்,

மஹாவித்வான் கா. இராமசாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

## விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1910.

Copyright] விலை அணா 5. [Registered.

உ

கடவுட்டுணை.

# நான்மணிக்கடிகை

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

#### கடவுள் வாழ்த்து.

ஐந்தடியான் வந்த பஃறொடை வெண்பா.

மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

(பதவுரை.) மதி - பூர்ண சந்திரன், மன்னும்-அழியாத, மாயவன்-விசித்திர சக்தியையுடைய இறைவனது, வாள் முகம் ஒக்கும் - விளக்கமாகிய முகத்தைஒத்திருக்கும்; கதிர்சேர்ந்த ஞாயிறு-கிரணங்கள் நிரம்பிய சூரியன், சக்கரம் ஒக்கும் - அவனது சுதரிசனமென்னும் சக்கரத்தை ஒத்திருக்கும்; முதுநீர்-நிலையாயுள்ள நீரையுடைய, பழனத்து-வயலில் முளைத்த, தாளின்-தாளிலிருந்து, எதிர் - மேலெழுந்த, தாமரை மலர்-தாமரைப்பூவானது, அவன் கண் ஒக்கும்-அவ

னது கண்களை யொத்திருக்கும்; பூவைப் பூவாகிய-காயாவினது புதிய மலர், நிறம் ஒக்கும் - அவனது திருமேனியை ஒத்திருக்கும்; என்றவாறு.

(விருந்தியுரை.) கவி தாம் திருமாலினது திருவுருவைச் சிந்தித்துப் பழித் தோன்றின திருமுகமண்டல முதலியவற்றின் காட்சியை யாவருங் காணுமாறுரிய பூர்ண சந்திரன் முதலானவற்றைக் கொண்டு நிரூபித்தார். சந்திரன் முதலானவை உபமானமாகவும் சாமான்ய பதந் தோன்ற அவற்றை உபமேயமாகக் கூறினார். இக்காப்பு தியானமாகையால் மனவணக்கமாம்.

சக்கரத்தோடு மாயவன் என்பதையும், பிறந்தோறு ஏவன் என்பதையுங் காட்டுக. 'மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்' என்றமையால் நிறைவு குறைவின்றி யென்றும் பூர்ணமாயிருந்தால் சந்திரன் முகத்திற்கு நிகராமெனவும், 'கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்' என்றமையால் இருவகை வேறுபாட்டால் ஒளி குறைந்து மறைந்துபோகாத சூரியன் சக்கரம் ஒக்குமெனவும், 'முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின் எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும்' என்றமையால் நீர் நிறைந்த வயல்களிற் பறிக்கப்படாமல் நாளத்தோடிருக்கிற தாமரைமலர் திருக்கண்களை யொக்குமெனவும், நேற்று முந்தாநாள் பூத்து வாடிப்போகாமல் அப்போது பூத்த காயாம்பூ நிறத்தை 'பூவைப் புதுமலரொக்கு நிறம்' எனவும் சொன்னார். மன் என்னும் இடையடியாகப் பிறந்த மன்னும் என்னும் பெயரெச்சம் "தாய்முலை தழுவிய குழவிபோலவும்" என்கிறவிடத்திற் சொன்னதுபோல் தகுதிபற்றிப் பெயர்க்குமுன் கொள்ளப்பட்டது. மன்னும்வாள் = நிலைபெற்ற காந்தியுள்ள, மதி என்று கூட்டுவதும் என்றதனால் சிறப்பே. 'ஒக்கும்' என்பது ஒத்திருக்குந் தன்மையதென இயல்பைக் காட்டியதே யல்லது எதிர்காலங் காட்டியதன்று. ஒ - பகுதி, உம் - விகுதி, கு - சாரியை, க் - சந்தி. (க)

படியை மடியகத் திட்டா னடியினான்
முக்காற் கடந்தான் முழுநில—மக்காலத்
தாப்பனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்.

(ப-ரை.) அக்காலத்து - பூர்வகாலத்தில், படியை - பூமியை மடியகத்து - வயிற்றினுள்ளே, இட்டான் - வைத்தவனும்; அடியினால் - தனது சீர்பாதங்களினால், முழுநிலம் - எல்லாவுலகங்களையும், முக்கால் - மூன்றுமுறை, கடந்தான் - தாவியளந்தவனும், ஆப்பனி - பசுக்களினது நடுக்கத்தை, தாங்கிய - ஏற்றுக்கொள்ள, குன்று எடுத்தான் - கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்தவனும்; சோவின் - அரண்களினுடைய, அருமை - அருமையை, அழித்த - அழித்தவனுமாகிய, மகன் - புருஷனும் (முன் சொன்ன மாயவனே), எ - று.

(வி-ரை.) பிரளயகாலத்தில் உலகங்களைத் தனக்குள் அடக்கினதனால் 'படியை மடியகத் திட்டான்' என்றது. இங்கே படி என்றது "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்ற விதியால் எல்லாவுலகங்களையும் உணர்த்தும். "மடியகத்திட்டான்மகவை" என்னும் களத்திற முரைத்த காதைக்கண், மடி - வயிறென்பதற்கு இதனையே எடுத்துக் காட்டினர் அடியார்க்கு நல்லார். 'படையை மடியகத் திட்டான்' என்றும் பாடம். இதற்கு: படையை - (அவ்விறைவன்) தனது சுதரிசனமென்னும் ஆயுதத்தை, மடியகத்து - பாரதப் போரில், இட்டான் - (ஒளியின் சிறுமையில்) வைத்தவன் என்பது பொருள்.

மூவுலகங்களையும் தன்வசமாக்கிக்கொண்டு தேவர்களைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்த பலிச்சக்கிரவர்த்தியிடத்தில் மாணியாய்ச் சென்று தன்னடியால் மூவடி மண்கேட்டு, கொடுத்தே னென்றவுடனே மிகவுயர்ந்து மூவுலகங்களையும் மூவடியாக அளந்து கவர்ந்த

கொண்டு அவனைச் சிறைப்படுத்தினதனால் 'அடியினான், முக்காற் கடந்தான முழுநிலம்' என்றது. முழுநிலம் என்றது உலகங்களை யெல்லாம். அக்காலத்து என்பதை எல்லாவற்றோடும் கூட்டிக் கொள்க.

ஆயர்கள் மழை முதலான க்ஷேமத்தைக் குறித்து வருடந்தோறும் இந்திரனுக்கு ஒரு வேள்வி செய்வதுண்டு. கிருஷ்ணன் ஒருகால் அவர்களுக்கு ஒருவகையாய்த் தத்துவம் போதித்து அவ்வேள்வியைக் கோவர்த்தனகிரிக்குச் செய்விக்க, அதனால் இந்திரன் கோவமூண்டு ஆய்ப்பாடி முற்றும் அழிந்துபோகும்படி பெருமழை பெய்விக்க, அதைத் தாபகமாட்டாமல் வருந்திய மாடுகளையும் மேய்ப்பர்களையும் காப்பதற்காக அந்த மலையைக் கொடைபோல் மேலெடுத்துக் காத்து இந்திரன் செருக்கை அடக்கினான். இதைத்தான் 'ஆப்பனி தாங்கிய குன்றெடுத்தான்' என்றது. 'ஆனிரை தாங்கிய' என்றும் பாடம்; இதற்கு : பசுக்கூட்டத்தைக் காப்பாற்றும்பொருட்டு என்பது பொருள். தாங்கிய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; தாங்கு - பகுதி, இய - விகுதி, எதிர்காலம் காட்டும்; நன்னூல் உயிரீற்றுப்புணரியல் சூ - கள-ன் விதியால் தாங்கிய குன்று என்னுமிடத்து வலி இயல்பாயிற்று. தாங்கிய என்பதைப் பெயரெச்சமாகக் கொள்ளின் அந்த அடை பொருந்தாமையேயன்றிப் பயனும் தோன்றாது சிறப்பில்லையாம்.

சாளுவராசன் கண்ணனை வெல்லவேண்டி வேண்டியபடி வானத்திற் பறக்கத்தக்க சவும்பமென்னும் ஒரு இருப்புப் பட்டணத்தைச் சிவனிடத்து வரமாகப் பெற்றுக்கொண்டு சண்டைக்கு வந்தபோது, அப்பட்டணத்தைக் கண்ணன் அழித்ததனால் 'சோவின் அருமை அழித்த மகன்' என்றது. காசிராசனுடைய சுதக்ஷிணன் சிவபெருமானை நோக்கி ஒரு யாகஞ் செய்து, சிவாநுக்கிரகத்தால் அதில் தோன்றிய ஒரு மகாபூதத்தைக் கண்ணன்மேலேவ, அதைச் சக்

கரத்தால் அவர் துரத்தினபோது, அது அப்பூதத்தைக் கொன்று காசிப்பட்டணத்தையும் சுட்டெரித்தது. இதனாலும்: மலையரண், ஆயுதவரண், நீரரண், நெருப்பரண், காற்றரண், முரன் என்கிற அவன் மந்திரியினுடைய பாசமாகிய அரண், இந்த ஆறு அரண்களுள்ள நரகாசுரனுடைய நகரத்தை அழித்ததனாலும், அக்கினிதேவனே தன் சுவாலைகளினால் அரணாகக் காத்துக்கொண்டிருந்த பாணாசுரன் பட்டணத்தை யழித்ததனாலும், சோவின் அருமை அழித்த என்பது ஒக்குமென அறிக. இங்கு 'மகன்' என்றது ஆண்மையைக் குறித்தது.

'கோவின்' எனவும் பாடமுண்டு. அதில் எருதுகளுடைய அருமை அழித்தவன் என்பது பொருள்; அல்லது சொர்க்கத்தின் அருமை யழித்தவன் எனவுமுரைக்கலாம். சயிப்பியராசன் மகளாகிய சத்தியை யென்பவளை அவ்வரசன் * சுற்கமாக வைத்திருந்த யார்க்கு மடங்காத எழெருதுகளை யடக்கிக் கிருஷ்ணசுவாமி கலியாணஞ் செய்துகொண்டார். நரகாசுரனைக் கொன்றபின் இந்திரனுடைய நந்தவனத்திலிருந்த பாரிஜாத மரத்தைக் கருடன்மேலெடுப்பித்து வந்து தம் மனைவியாகிய சத்தியபாமையின் தோட்டத்தில் நாட்டினார்; இதனால் சொர்க்கத்திற்கிருந்த மகிமை குறைந்ததன்றே. இவைதாம் 'கோவின் அருமை யழித்த' என்பதின் கருத்து.

எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கன. முற்பாட்டிலுள்ள 'மாயவன்' என்பதை வருவித்து இப்பாட்டு முடிக்கப்பட்டது. 'மகன்' என்பதை எழுவாயாகக்கொள்ளின் நான்கு விஷயம் ஏற்படாமற் போவதுமன்றி (சுவிசேஷ்ய விதேயாம்ஸம்) கருதிய துள்ளடங்கல் என்கிற குற்றமுமாம். 'சோவின் அருமை யழித்தமகன் என்பது எழுவாயாகும்போது அத்தன்மை சித்தமேயா யிருப்பதனு

---

* சுற்கம்=பரியம்.

லென உணர்க. தான் முன் றியானித்த கடவுளின் மகிமைகளைக் கூறியதனால் இது வாயாற்செய்த வணக்கமாம்.

இக்காப்புகளில் நந்நான்கு பொருளைக் கூறியதனால் இனி ஒவ்வொரு பாட்டிலும் நந்நான்கு விஷயம் கூறப்படுமெனக் குறிப்பித்தாரென்றறிக. (௨)

## நூல்.

எள்ளற்க வென்று மெளியரென் றென்பெறினுங்
கொள்ளற்க கொள்ளார்கை மேற்பட — உள்கடினுஞ்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

(ப-ரை.) என்றும்-நட்பாக வருங்காலத்திலும், எளியர் என்று-(வலி முதலியன) குறைந்தவரென்று நினைத்து, எள்ளற்க - (பகைவரை ஒருவன்) இகழாதிருக்கக்கடவன்; என் பெறினும் - சிறந்த பொருளைப்பெறுவதாயிருந்தாலும், கொள்ளார் கை-கொள்ளத்தகாதவருடைய கைகள், மேற்பட-(தன்கைகளுக்கு) மேற்பட்டன ஆகும்படி, கொள்ளற்க-(அப்பொருளை) இரவாதிருக்கக்கடவன்; உள் கடினும்-(வறியகுடியிற் பிறந்தார் செய்கை) மனத்தை வருத்துவதாயிருந்தாலும், சிறு இல் பிறந்தாரை-அவ்வறிய குடியிற் பிறந்தவரை, சீறற்க - சீறாதிருக்கக்கடவன்; கூறு அல்லவற்றை - சொல்லத்தகாத சொற்களை, விரைந்து கூறற்க - (சொல்வதில்) விரைந்து சொல்லாதிருக்கக்கடவன், எ-று.

(வி-ரை.) கொள்ளார் - பகைவர் எனினும் ஒக்கும். தான் எவ்வளவு விசேஷமுள்ளவனா யிருந்தாலும் பொருள் முதலிய இல்லாதவர்களை எப்பொழுதும் இகழாமலிருக்கவேண்டும். எப்படிப்பட்ட பொருள் கிடைப்பதாயிருந்தாலும் தகாதவர் கையில் வாங்காதிருக்கவேண்டும். அற்பமனிதர் மனஞ் சுடத்தக்க துன்பஞ் செய்தாலும்

பேதைகளாகிய அவர்களுக்கு இயல்பென்று நினைத்து அவர்மேல் கோபங்கொள்ளாதிருக்கவேண்டும். சொல்லக்கூடாத பேச்சுக்களைக் காலமும் இடமும் அறியாமல் பதறிப்பேசாதிருக்கவேண்டும் என்பது கருத்து.

'என்பெறினும்' என்பதை மத்திமதீபமாக வைத்து இருபுறமுங் கூட்டுக. 'எள்ளற்க' முதலியன எதிர்மறை வியங்கோள் வினைமுற்று; எள்-பகுதி, அல்-பண்படி, இங்கு எதிர்மறை விகுதி; இவ்விரண்டுஞ் சேர்ந்து ஒருபகுதி, க - வியங்கோள் விகுதி. ல் ற் ஆனதும் ளகர மிரட்டித்ததும் சந்தி. கொள், சீறு, கூறு இப்பகுதிகளின் மேலும் இவ்வாறே அமைத்துக்கொள்க. 'கொள்ளார்கை மேல்வர' என்றும், 'கொள்ளார்கை மேலவா' என்றும் பாடம். கூறப்படுவது கூறு, செயப்படுபொருளைக்காட்டும் ஐ விகுதி புணர்ந்து கெட்டது. என்-குறிப்பு வினையாலணையும் பெயர். (௪)

பறைபட வாழா வசுணமா வுள்ளங்
குறைபட வாழா ருரவோர் — நிறைவனத்து
நெற்பட்டக் கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாது சால்பு.

(ப-ரை.) அசுணமா - கேகயப்பறவைகள், பறைபட - பறையினொலி (செவியில்) பட்டால், வாழா - உயிர் வாழா; உரவோர் - அறிவுடையோர், உள்ளம் குறைபட - (மானக்கேட்டால்) தமது ஊக்கம் சுருங்கும்படி, வாழார் - உயிர்வாழார்; நிறை வனத்து - (மரங்கள்) அடர்ந்த வனத்தில், வெதிர் - மூங்கில்கள், நெற்பட்டக்கண்ணே - நெல்லுண்டானபோதே, சாம் - அழியும்; சால்பு - (பலநற்குணங்களாலும்) நிறைந்தவன், தனக்கு ஒவ்வா - தன்னிறைவுக்குத் தகாத, சொல்பட வாழாது - சொல்லுண்டாக உயிர் வாழான், எ-று.

(வி-ரை.) வீணை முதலிய மெத்தென்ற வாத்தியங்களின் ஓசையே யன்றிக் கொடுமையான தம்பட்ட முதலியவற்றின் ஓசைகேட்

டால் அதைப்பொறுக்கமாட்டாமல் அசுணமென்னும் பறவை சாவது போல், மனம் நல்வழியிற் செலுத்த இடையூறு நேரிட்டால் விவேகிகள் உயிரிழப்பார்கள். மூங்கிலில் மணிபிடித்து முதிர்ந்தவுடனே அம்மூங்கில் வெடித்து அழிவதுபோல், பெருமையுள்ள ஒருவனுக்கு அவமானமான பழிச்சொல் சேர்ந்தால் அவன் பெருமைகெடும். இப்படிச் சொன்னதனால் மனக்குறைப்பட்டவன் பிழைத்திருப்பது வீணென்றும், பெருமையுள்ளவன் பழிச்சொல்வாராமல் தன்னைக்காத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லியதாயிற்று.

அசுணம்-இசையறிவதோர் விலங்கு (சிந்தாமணியுரை-பதுமை-௨௩௭) ஒருவன் முதற்கண் யாழிசையைக் கேட்பித்து, இஃது அவ்விசையின்பத்தே யின்புற்று மூழ்கியவளவில் வலியதோர் பறையை ஒலிக்க, அதன் வல்லோசையைக் கேட்கலாற்றாது இவ்விலங்கினரிய உயிர் விட்டு நீங்கும் என்ப. அசுணமா என்கிற பால்பகா அஃறிணைப்பெயர் வாழா என்னும் குறிப்பினால் பன்மையாக் கொள்ளப் பட்டது. பட என்பது செயினென் வாய்பாட்டின் திரிபாம். "உரவோ ரெனினு மட்வோ ரெனினும்" என்றார் பதிற்றுப்பத்தினும் (௮ - ௩). உரம்-அறிவு; "உரமொருவற்குள்ள வெறுக்கை" என்னுந் திருக்குறளா னுணர்க. உரவோர் என்பதற்குப் பதில் 'பெரியோர்' என்றும் பாடம்; இதற்கு: மிக்க மானமுடையோர் என்பது பொருள். ஒவ்வா-ஈறுகெட்ட பெயரெச்சம்; ஒ - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, வகரம்-சந்தி, தகர எழுத்துப்பேறோடு சேர்ந்த அகர விகுதி கெட்டது விகாரம். 'பட்டகண்' இதுவும் ஒருவகை எதிர் கால வினையெச்சம்; படு என்னும் பகுதி பட்ட என விகாரப்பட்டு, கண் விகுதி பெற்றது. சாகும் ஆகும் என்பவை ஈற்றுயிர்மெய் கெட்டு சாம் ஆம் என்றாயின. 'தனக்கொவ்வாச் சொற்பட்டாற் சாவ தாம் சால்பு' என்றும்பாடம்; இதற்கு: ஒருவனுக்கு அடுக்காதசொல் நேர்ந்தால் அவனது பெருமை கெட்டுப்போம் என்பது பொருள். ()

மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் கெட்டறிப
கேளிரா னாய பயன்.

(ப-ரை.) மணி நலம்(காண்பார்)-இரத்தினத்தினது குணத்தை (அறியுமியல்பினர்), மண்ணி அறிப-சுத்திசெய்து அறிவார்கள்; மா நலம் (காண்பார்)-குதிரையினது குணத்தை(அறியுமியல்பினர்),பண் அமைத்து - சேணத்தை (அதன்மேல்) பொருந்த வைத்து, ஏறிய பின் - ஏறினபின், அறிப - அறிவார்கள், பொன்னின் நலம் காண்பார்-பொன்னினது குணத்தை அறியுமியல்பினர், மாசு அற-குற்றம் நீங்கும்படி, சுட்டு அறிப-தீயிற் சுட்டு அறிவார்கள்; கேளிரான்-உறவினரால், ஆய பயன் (காண்பார்)-உண்டாகும் பயனை (அறியும் இயல்பினர்), கெட்டு அறிப-(தமது செல்வம்) கெட வறுமை முதலியவற்றால் தாழ்ந்தபோது அறிவார்கள், எ-று.

(வி-ரை.) மணிகளைச் சுத்திசெய்து அவற்றின் குணங்களைக் காண்பது போலவும், குதிரைமேலேறி நடத்தியபின் அதன் யோக்கியதையைக் காண்பதுபோலவும், பொன்னைக் காய்ச்சியபின் அதன் ஏற்றத்தை யறிவதுபோலவும், தாம் துன்பமடைந்த காலத்தில் உதவி செய்வதனால் இவர்கள்தாம் நமக்குச் சரியான சுற்றத்தார் என்று அறியலாம் என்பதாம். "கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை, நீட்டி யளப்பதோர் கோல்" என்னுந் திருக்குறளை நோக்குக. மண் - பகுதி, இ - இறந்தகால வினையெச்ச விகுதி. அறி - பகுதி, ப - பலர்பால் விகுதி. ஆய, ஆ - பகுதி, ய்-இடைநிலை, அ - விகுதி, இதனை இடைக்குறையெனக் கொள்வாரு முண்டு. 'கேளிரா லாய பயன்' என்றும் பாடம். கெட்டு அறியவேண்டியது விதியன்மையால் இவ்வினையெச்சம் கெட்டால் என்பதன் திரிபென அறிக. அறிப நான்கும் உயர்திணைப் பலர்பால் வினைமுற்றுக்கள். சேணம்-குதிரை

முதுகின்மேலிடும் தவிசு. மா-எல்லா விலங்குகட்கும் பொதுப்பெய ராயினும் 'பண்ணமைத்து, எறியபின் அறிப மாநலம்' என்ற குறிப் பால் குதிரையை யுணர்த்திற்று; அங்ஙனமாயின், யானை ஒட்டகம் முதலியவற்றைக் கொள்ளலாகாதோவெனின், அவை இதுபோலப் பெரும்பாலும் மக்கட்குபயோகப்படாமையால் அவற்றை யொழித்து குதிரையென்றே பொருளுரைக்கப்பட்டது. (ரு)

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி.

(பதவுரை.) அகில்-அகிற்கட்டையானது, கள்ளி வயிற்றின் பிறக் கும்-கள்ளிமரத்தினுள்ளே பிறக்கும்; ஒள் அரிதாரம் - சுத்தமான கோரோசனை யென்கிற மருந்து, மான் வயிறு பிறக்கும்-மானின் வயிற் றிற் பிறக்கும், பல் விலைய முத்தம் - மிக்க விலையுள்ள முத்துக்கள், பெருங்கடலுள் பிறக்கும் - பெருமையாகிய கடலிற் பிறக்கும்; நல் ஆள் - நற்குண நற்செய்கைகளை ஆளுதலுடையான், பிறக்கும் குடி - பிறக்குங்குடியை, அறிவார் யார் - முன் அறியவல்லவர் யாவர் (ஒரு வருமிலர்), எ - று.

(விசேஷவுரை.) மரங்களில் இழிந்த கள்ளியிலே சுகந்தமுள்ள அகி லும், இழிவான பசுவின் வயிற்றில் தேவர்களுக்குந் திலகமிடத் தக்க கோரோசனையும், உவர் நீரும் புலானாற்றமுமுடைய கடலிலே விலையுயர்ந்த முத்தும் பிறப்பதுபோல், ஒரிழிகுலத்திலும் மேன்மை யான பிள்ளை பிறக்கும்; ஆதலால், தாழ்ந்திருக்கிறதென்று நினை த்து ஒரு குலத்தையும் அவமதிக்கலாகாது என்பதாம். கள்ளிக் கட்டை மிகவும் முதிர்ந்தால் அது அகிற்கட்டைக்குச் சமானமான வாசனையுளதாம் என்பது இதனாற் பெறப்பட்டது. ஆன்வயிற்று

என்று பிரித்து பசுவின் வயிற்றிலே என்று பொருள் கொள்ளினு மமையும். நல்லாள் பிறக்குங்குடி என்பதற்கு "நல்லா ளிலாத குடி" என்னுந் திருக்குறளுரையையும் (1030) நோக்குக. (௪)

கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மதம்—மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.

(ப-ரை.) கதிர் மணி-கிரணங்களையுடைய இரத்தினம், கல்லில் பிறக்கும்-மலையில் பிறக்கும்; உயர் மதம்-மிக்க காமமயக்கம், காதலி-விரும்பப்பட்ட நாயகியினது, சொல்லில் பிறக்கும்-இன்சொல்லிலே பிறக்கும்; அறநெறி - அறம் நடக்கும் வழி, மெல் என்ற - மென்மை யான, அருளில் பிறக்கும்-கருணையில் பிறக்கும்; எல்லாம் அற(முன் சொல்லியவும் சொல்லப்படாதவையுமான) முதலிய எல்லாம், பொரு ளில் பிறந்துவிடும் - செல்வப்பொருளில் பிறந்துவிடும், எ - று.

(வி-ரை.) சாதாரணமான கல்மலையில் மணிகள் பிறப்பதுபோல் தனக்குப் பிரியமான பெண்ணின் பேச்சில் ஒரு ஆனந்தம் விளையும்; அருளொன்றிருந்தால் கொலை வஞ்சனை முதலிய பாவச்செய்கைகள் சிறிது முளைவாகாமையால் எல்லாத் தருமவழிகளும் அருளிலே யுண் டாகும்; முன் சொன்ன பொருளும் போகமும் பின்சொன்ன தரும வழிகளும் யாவும் பொருளினு லுண்டாகு மாதலால் பொருளைத் தேடவேண்டு மென்பதாம்.

'கல்லில்' என்பதில் இல் ஏழனுருபு. அருளில், பொருளில் இவை ஐந்தாம்வேற்றுமை, ஏதுப்பொருளில் வந்தன. மெல்லென்ற அருள் என்பதில் அகரம் தொகுத்தல் விகாரம். 'மெல்லெ, னரு ளிற் பிறக்கும்' என்றும் பாடம். "அறனும் அருளுடையான் கண் ணதே யாகும்" என்பது சிறுபஞ்சமூலம். "பொருளானு மெல்லாம்"

என்பது திருக்குறள்-1002. பிறந்துவிடும் என்பதில் விடு துணிவுப் பொருளது, அசைநிலை; துணைவினை யெனினுமாம். (ரு)

திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
வறனொக்கு மாற்றி னொழுகல்—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

(ப-ரை.) தீது இல் ஒழுக்கம் - (தம் வருணத்துக்கு) குற்றம் உண்டாகாத ஒழுக்கம், திரு ஒக்கும் - (அக்குலத்துக்கு) செல்வத்தோடு சமானமாகும்; ஆற்றின் - இல்லறவழியில், ஒழுகல் - (தவறாமல்) நடத்தல், பெரிய அறன் ஒக்கும் - சிறந்த துறவறத்தை ஒக்கும்; பிறனை கொண்டு-(ஆராயாமல்) பிறனொருவனை நட்புக்கொண்டு, கண் மாறல்-பராமுகமாயிருப்பது, கொலை ஒக்கும்-அவனைக்கொல்லுதலை ஒக்கும்; போற்றாதார் முன்னர்-ஆதரித்தலையாதவரிடத்தில், செலவு - (ஒருபயன் பெறவேண்டி) செல்லுதல், புலை ஒக்கும் - (தன்னை யறுத்தெடுத்த) மாமிசத்தை ஒக்கும், எ-று.

(வி-ரை) ஒருவன் தன் குலாசாரங்களை நடத்தி வருவதே செல்வம்போல் சிறந்திருப்பதன்றிப் பிறர் குலாசாரங்களைக் கைக்கோடல் சிறப்பன்று; உலகத்துக்கு ஒத்த வழியில் நடப்பது தருமமேயன்றி, சாத்திரஞ் சொன்னதானாலும் உலகத்துக் கொவ்வாவழி நடப்பது தருமமன்று. முன்பு ஒருவனைச் சிநேகிதனாகக் கொண்டிருந்து பின்பு அவனைப் பராமுகமாய்ப் பார்ப்பதும் பகைப்பதும் அவனைக் கொலைசெய்வதுபோன்ற கெட்ட காரியமாகும். உபசரிக்காதாரிடத்திற்போவது தன் சதையைத் தானே அறுத்தெடுப்பது போல அருவருத்த தொழிலாம் என்றபடி.

தீது—தீமை - பகுதி, து - விகுதி, இதுவும் பண்புப் பெயரேயாம். தீமை செய்யுந் தன்மையையுடையதெனப் பொருட்பெய

மாக்கினும். கடைசியில் இக்கருத்தே யாகவேண்டும். பெரிய அறன் ஒக்கும் - பெரிய தருமத்தை ஒக்கும் எனினுமாம். கண்மாறல் - புறங்கூறல் கண் - தாக்ஷிணியம், அது மாறுதல் - உபேக்ஷை அல்லது பகை, எழுவாய்த்தொடர். போற்றுதார் - பகைவர் எனினுமாம். அறம் அறன் ஆனது போலி. புலை - நீசத்துவம் (இழிவு). ஆறு - வழி; பெரிய அறன் ஒக்கும் என மேல் வருதலால் இது நல்வழியைக் குறித்தது. புலை ஒக்கும்-(கீழாயினோரது) இழி தன்மையை ஒக்கும் எனினுமாம். கொலை—கொல் - பகுதி, ஐ - தொழிற்பெயர் விகுதி. செலவு—செல் - பகுதி, உ - விகுதி, அ - சாரியை, வ் - உடம்படுமெய். (ரு)

கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லைத் துயில்.

(ப-ரை.) கள்வம் என்பார்க்கும் - (பிறர்பொருளைக்) களவு செய்வோமென்று சோர்வு பார்ப்பவருக்கும், துயில் இல்லை - நித்திரையில்லை; காதலிமாட்டு - (விரும்பப்பட்ட) நாயகியினிடத்து, உள்ளம் வைப்பார்க்கும் - உள்ளத்தை (இடைவிடாது) வைப்பவருக்கும், துயில் இல்லை - (அவளைக் கூடுமட்டும்) துயிலில்லை; ஒள் பொருள்-ஒள்ளிய பொருளை, செய்வம் என்பார்க்கும் - சம்பாதித்துச் சேர்க்கக்கடவோமென்று கருதுவார்க்கும், துயில் இல்லை - (அப்பொருள் கூடுமளவும்) துயிலில்லை; அப்பொருள் காப்பார்க்கும் - அப்படித் தேடிய பொருளைக் (கள்ளர் கொள்ளாமல்)காப்பவர்க்கும், துயில் இல்லை—, எ - று.

(வி-ரை.) திருட நினைப்பவர்க்கும், ஒருத்தியை இச்சித்து அவள்மேலேயே மனம் வைத்தவர்க்கும், பொருளீட்ட நினைத்து அலைபவர்களுக்கும், பொருளை உபயோகித்தற்குரிய வழியையறிந்

துபயோகிக்காமல் பூதம்போல் காத்துக்கொண் டிருப்பவருக்கும், நித்திரைமுதலியனவுமில்லையாம்; ஆதலால், அப்படியல்லாமல் பொருளையும் காலத்தையும் நல்வழியில் அடைந்து அளவிட்டு அனுபவிக்க வேண்டுமென்பது கருத்து.

கள்வம் - தன்மைப்பன்மை யெதிர்கால வினைமுற்று; கள் - பகுதி; அம் - விகுதி; வகரம் இடைநிலை. செய்வம் என்பது பிறபாடமே. 'ஒண்பொருள் சேர்ப்பார் செல்வார்க்கு' என்றும் பாடம். ஒள் பொருள் எனபது விகாரப்பட்டு மெலிந்தது. '[illegible]' என்றும் பாடம். (௯)

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறாமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும்.

(ப-ரை) கற்றார் முன் - (ஞானநூல்களைக்) கற்றறிந்தவரிடத்து, கழிவு இரக்கம் - கழிந்த பொருளுக்கு இரங்குதல், தோன்றா - உண்டாகமாட்டா, காதலித்த ஒன்று - விரும்பப்பட்ட ஒருபொருளை, உற்றார்முன் - தேடத் தொடங்கினோரிடத்து, உறாமுதல் - (அப்பொருள்) கிடையாத காரணங்கள், தோன்றா—; தெற்றென - தெளிவாக, அல்ல புரிந்தார்க்கு - தீவினைகளை விரும்பிச் செய்தவரிடத்து, அறம் - அறச்செய்கைகள், தோன்றா—; வெகுண்டார் முன் - கோபித்தவரிடத்து, எல்லாம் - (பிறர் கூறும்) நன்மைக சொல்லாம், தோன்றா கெடும் - தோன்றாதனவாகக் கெடும், எ-று.

(வி-ரை.) கற்றவர்கள், எல்லாம் கடவுள் திருவுள்ளப்படியே நடக்குமென்கிற நிச்சயமுள்ளவர்களாதலால் எதற்கும் விசனப்படமாட்டார்கள்; ஒன்றின்மேல் மிகுவிருப்பம்வைத்தவர்கள் அப்பொருள் தமக்குக் கிடைக்குமென்று நம்புவார்களேயன்றி கிடையாதென்று நினைக்க

ட்டார்கள், இளமைக்கண்ணே செய்யப்பயின்றவர்கள் தருமத்தை நினையாட்டார்கள்; கோபம் மிகுந்த போது இது நன்று, இது தீது, இது நியாயம், இது அநியாயம் என்று ஒன்றும் தோன்றாது ஆதலால் ஒருவன் கற்றுணர்ந்திருக்கவேண்டுமென்பதும், வீணாகச் சொல்லலாகாதென்பதும், தீச்செயல்களைச் செய்யலாகாதென்பதும், கோபங்கொள்ளக்கூடாதென்பதும் கூறியதாயிற்று.

முன் - ஏழனுருபு. கழிவிரக்கம் - கழிவினைக்குறித்த இரக்கமென்றனுருபும்பயனு முடன்தொக்கதொகை. இரக்கம் - "இரங்கல் கழிந்த பொருட்டாகும்" என்பது தொல்காப்பியம் (உரி-௩-௩) உறுமுதல் - பெயரெச்சத்தொடர். உறு - ஈறுகெட்ட பெயரெச்சம், முதலையின் காரணம் என்பது திரண்டபொருள். உறுமுதலென்பதை 'உறுமது' என்னும் 'உசாவுதல்' என்னும் பாடம் ஓதுவாருமுளர். தோன்று - பலவின்பால் முற்று, ஆசையால் இரக்க முதலிய பலபொருள் அஃறிணைப் பெயர்களும் பன்மையாம் கடையில் இருக்கும் தோன்று என்பது பல் என்னும் விகுதிகெட்ட வினையெச்சம். வெகுண்டார் - வெகுள் - பகுதி, ஆர் - விகுதி, ட் - இடைநிலை, ள் ண ஆனது சந்தி. (௭)

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி
தான்செல் உலகத் தறம்.

(ப-ரை.) நிலத்துக்கு - மருதநிலத்துக்கு, நெல்லும் கரும்பும் - நெற்பயிரையும் கரும்பின் பயிரையும், அணி என்ப - அழகென்று சொல்லுவர் (அறிஞர்கள்); குளத்துக்கு - குளத்தினுக்கு, தாமரை - தாமரைமலரை, அணி என்ப—; (அவைபோல) பெண்மை நலத்துக்கு - பெண்தன்மைக்குரிய கற்டாகிய நன்மைக்கு, நாணம் - நாண

முடைமை, அணி என்ப—; தனக்கு அணி-(அக் கற்புடையாளோடு கூடிய) ஒருவனுக்கு அழகாவது, தான் செல் உலகத்து அறம் (என்ப) - தான் இனிச் செல்லும் மேலுலகத்துக்குத் துணையாகிய தருமமென்று சொல்லுவர், எ - று.

(வி-ரை.) விளைநிலத்தை நெல்லும் கரும்பும், குளத்தைத் தாமரையும் விளங்கச்செய்வதுபோல், நல்ல பெண்ணுக்கு நாணமும், ஒருவனுக்குத் தான் நற்கதி யடைதற்குக் காரணமான தருமமும் இருந்தால் அவர்களை விளங்கச்செய்யு மெனபதாம்.

'தாமரைப்பன்மை' என்றும் பாடம்; தாமரைகளின் பன்மை, அதாவது, பல தாமரைமலர்கள் என்பது பொருள். தாமரை - ஆகு பெயர். பெரும்பாலும் பயிர் செய்வோர் நிலத்தில் நெல்லையும் கரும்பையுமே பயிர்செய்வது வழக்கம். பெண்மை நலத்துக்கு - பெண்டிரழகிற்கு எனினுமாம். செல்-வினைத்தொகை. உலகத்து அறம்-உலகத்துக்கு ஏற்ற என நான்கனுருபும்பயனு முடன்தொக்க தொகையாகவேனும், உலகத்தை யடைவிக்குமென இரண்டனுருபும் பயனுமுடன்தொக்க தொகையாகவேனுங் கொள்க. நிலத்துக்கு - குளத்துக்கு - நலத்துக்கு என்பவற்றிற்குப் பதில் நிலத்திற்கு - குளத்திற்கு - நலத்திற்கு எனவும் பாடம். தனக்கு அணியென்பதனீற்றில் என்பவென்னும் பயனிலை சேர்க்கப்பட்டது. என்பவென்னும் பயனிலைகள் நான்கிற்கும் தோன்றா வெழுவாயாகிய அறிஞர் என்பது வருவித் துரைக்கப்பட்டது. (௬)

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத்தி னாற்பிணிப்பர் மாநாகங்—கொந்தி
யிரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

(ப-ரை.) களிற்றை-யானையை, கந்தின் பிணிப்பர் - (பாகர்கள்) கட்டுத்தறியினாலே தம்வசப்படுத்துவார்; மா நாகம் - சிறந்த சர்ப்

பத்தை, கதம் தவிர - அதன் கோபம் நீங்கும்படி, மந்திரத்தினல்- (மாந்திரியர் தேவதாஸ்தோத்திரமான) மந்திரத்தினல், பிணிப்பர்—; கயத்தை-கீழ்மக்களை, கோந்தி-'அரசர் ஆயுதங்களால் அவருடலைக்) கொத்தி, இரும்பின் - இருப்பு விலங்கால், பிணிப்பர்—; சான்றோரை - (கல்வியறிவு ஒழுக்கங்களால்) நிறைந்தவரை, நயத்தின் பிணித்துவிடல் - (அறிவுடையோர்) தம் இன்சொற்களால் வசப்படுத்திவிடக்கடவர், எ - று.

(வி-ரை.) யானையைக் கட்டுத்தறியிற் பூட்டி யடக்கிச் சுவாதீனஞ் செயவதுபோல் மூடனை விலங்கிடல் சிறையிடல் முதலியவற்றால் அவன் கர்வத்தை அடக்கிச் சுவாதீனஞ் செய்யவேண்டும்; சிறந்த சர்ப்பங்களை மந்திரங்களால் (மறைமொழிகளால்) சுவாதீனஞ் செய்வதுபோல யோக்கியர்களை வணங்கி நயம்பேசி சுவாதீனம் செய்துகொள்ளவேண்டு மென்பதாம்.

இதில் உபமான வாக்கியங்களையும் உபமேய வாக்கியங்களையும் நேர்வரிசையில் வைத்துப் பொருள்கொண்டபடியால் நேர்நிரனிறைப் பொருள்கோள்; 'கதந்தவிர' என்பதை எல்லாவிடத்துங் கூட்டிக்கொள்க. மந்திரம் - மறைமொழி; ''மறைமொழி தானே மந்திர மென்ப" என்பது தொல்காப்பியம் - செய் - கஎக. 'பிணித்துவிடல்' வியங்கோள் வினைமுற்று; அல்-விகுதி. விடு என்பதை 'பிறந்துவிடும்' என்பதற்குரைத்தாங் குரைக்க. கயம்-கஜம் என்னும் வடசொற்றிரிபு. கந்து - கட்டுத்தறி. மந்திரத்தினற் பிணிப்பர் என்றதனல், மாநாகம் நல்ல பாம்பை யுணர்த்திற்று. கொந்தி யென்றது அங்குசத்தாற் கொத்தி யென்றபடி; கொந்துதல் எறிதல்: "கொந்தழல்" என்ப(சிந்-கேம - அஅ) : ஈண்டுச் சுடச்சொல்லுதலின் மேற்று எனினுமாம். இரும்பு - ஆகுபெயர். சான்றோர்-கல்வி கேள்வி அறிவொழுக்கங்களாற் சிறந்தவர். நயம் - தாழவுரைத்தல் (இன்சொல்). (௧௦)

கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை கொல்லாக் கொளல்வேண்டும்—என்றும்
விடல்வேண்டுந் தங்கள் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.

(ப-ரை.) (பிறர்செய்த) கடிய-(ஒருவர் தமக்கு) மற்றவர் செய்த அஞ்சத்தக்க தீச்செயல்களில், கன்றாமை வேண்டும் - வயிரங்கொள்ளா திருத்தலே தகுதி; பிறர்செய்த நன்றியை-(தமக்குப்)பிறர்செய்த உபகாரத்தை, கொல்லா-சிதைக்காமல், கொளல்வேண்டும் - மறவா திருத்தலே தகுதி; என்றும் - (பிறர்) பொறுக்கக்கூடாத தீங்கு செய்த காலத்தும், தங்கள் வெகுளி - தம்மிடத்துண்டாகும் கோபத்தை, விடல்வேண்டும்-ஒழித்தலே தகுதி; ஆக்கம் - (தமது)செல்வத்தை, சிதைக்கும் வினை-கெடுக்குந் தொழிலை, அடல்வேண்டும்-கெடுத்தலே தகுதி, எ - று.

(வி-ரை.) பிறர் தனக்குச் செய்த தீமைக்குக் கோபியாமையும், அவர் செய்த நன்றியை விசேஷமாகக்கொண்டு பாராட்டுதலும்,யாரிடமும் கோபங்கொள்ளாமலிருப்பதும், தன் நன்மையைக் கெடுக்குங் காரியத்தை விடுவதும் அவசியமான காரியங்கள் என்பதாம்.

கன்றாமை-எதிர்மறைத் தொழிற்பெயர். 'வேண்டும்' என்பது ஒருவகை வியங்கோள்வினை, தொழிற்பெயர் எனினுமாம். கடிய இது பலவின்பால் வினையாலணையும்பெயர், நான்காம் வேற்றுமைத் தொகை, எதுப்பொருள்; மூன்றாம் வேற்றுமைத்தொகை யெனினும் பொருந்தும். 'நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்' என்றும் பாடம் - இதற்கு: (பிறர் தனக்குச் செய்த அற்ப) உபகாரங்களையும் விசேஷ வுபகாரமாக மனதிற்கொள்ளவேண்டும் எனினுமாம். 'தன் கண்' என்றும் பாடம். ஆக்கம் சிதைக்கும் வினை - (தனக்கு) மேன்

மையைக் கெடுக்கும்படியான செய்கை எனினுமமையும். கடி - அச்சம். (கக)

பல்லினா னோய்செய்யும் பாம்பெல்லாங் கொல்லேறு
கோட்டானோய் செய்யுங் குறித்தாரை யூடி
முகத்தானோய் செய்வர் மகளிர் முனிவர்
தவத்தாற் றருகுவர் நோய்.

(ப-ரை.) பாம்பு எல்லாம் - எல்லாச்சாதிப் பாம்புகளும், பல்லினால்-(தீங்கு செய்த பிறரை) விஷப்பல்லினால், நோய் செய்யும்-துன்பஞ்செய்யும்; கொல் ஏறு - கொல்லுமியல்புடைய எருதுகள், குறித்தாரை - (நோய் செய்ய) குறிக்கப்பட்டவரை, கோட்டால் - தம் கொம்புகளால், நோய்செய்யும்—; மகளிர் - பெண்கள், ஊடி - பிணங்கி, முகத்தால்-(தம் கணவரைக் கோட்டமுள்ள தமது) முகக்குறியால், நோய் செய்வர் - துன்பஞ் செய்வர்; முனிவர் - முனிவர்கள், தவத்தால் - (தங்களுடைய) தவத்தின் வல்லமையால், நோய் தருகுவர்-(தம்மை அவமதித்தவருக்குத்) துன்பத்தைக் கொடுப்பார், எ-று.

(வி-ரை.) மகிமையால் சொன்னபயன்படச் சபிப்பர் என்பதாம். பாம்பும் எருதும், பல்லும் கொம்புமாகிய அவயவங்களைக் கருவியாகக்கொண்டு நோய்செய்கின்றன; அதிலுமேலாய்ப் பெண்கள் முகத்தி லொன்றிநின்ற செய்கையாலேயே நோய் செய்கின்றனர்; முனிவரோ அங்ஙனமு மின்றித் தவமகிமையாலேயே நோய் செய்கின்றனர் என்பதாம்.

'கொல்களிறு' என்றும் பாடம்; இதற்கு: கொல்லுமியல்புடைய யானை என்பது பொருள். தருகுவர்—தா - பகுதி, குறுகல், ரு-விரித்தல், கு - சாரியை, வ் - இடைநிலை, அர் - விகுதி, சாரியை விகற்பமாதலின் தருவர் எனவும் வரும். 'தருக்குவர் நோய்' என்றும் பாடம்;

இதற்கு: (தம்மை யிகழ்ந்தார்க்குத்) துன்பத்தை மிகுவிப்பர் என்பது பொருள். தருக்கும் செருக்கும் மிகுதியையுங் குறித்துவரும்; "மிகுதியான் மிக்கவை செய்தாரை" (திருக்குறள் - ௧௫௮), "கவறுங் கழகமுங் கையுந் தருக்கி" (ஷை-௯௩௫), "மிகுதி யிறுவாய செல்வங்கள்" (நான்மணி - ௧௭.) என்பவற்றுரைகளான் உய்த்துணர்க. ()

பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரிற்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
௭ றீர்தலிற் றீப்புகுத னன்று.

(ப-ரை.) பண் அமையா - (நல்ல நரம்பினால்) கட்டுதல் அமையாத, அல்லது நல்லாரகங்களுக்கு இசையாத, யாழின் - யாழிசையினும், பறை - (காதுக்கு வெறுப்பான ஓசையுள்ள) பறை (தம்பட்ட) ஓசை, நன்று - நன்மையுடையது; பீடு இலா-பெருங்குணமில்லாத, மாந்தரின்-ஆடவர் தன்மையினும், நிறை நின்ற - மனத்தைக் கற்பு வழியில் நிறுத்தலமைந்த, பெண் - பெண்தன்மை, நன்று—; பண் அழிந்து - குணம் அழியும்படி, ஆர்தலின் - உண்ணுதலினும், பசித்தல்-பசியால் வருந்துதல், நன்று—; பசைந்தாரின்-உள்ளன்பு உடையாரினின்றும், தீர்தலின் - நீங்கி உயிர்வாழ்வதினும், தீ புகுதல் நன்று - தீயில் நுழைதல் நன்மையுடையது, எ - று.

(வி-ரை.) இசைநன்றுயிராத வீணையைக் கேட்பதைக்காட்டிலும் தம்பட்டவோசை கேட்கலாம் என்றது, வீணைக்கு உரியகுணம் இன்மையாலும் தம்பட்டத்துக்கு உரியகுணம் உண்மையாலுமென்க. இது உபமானம். இப்படியே வீரதீரமில்லாத ஆண்மக்களைக்காட்டிலும் தமக்கு உரிய கற்புநிலையில் நிற்கும் பெண்மக்கள் சிறந்தோராவர். எந்த அன்னத்தைத் தின்பதினால் தன் ஒழுக்கங்கெட்டுத் தாழ்மை யடைவாரோ அதைத் தின்பதிலும் பசித்திருப்பதில் தாழ்

மை வாராதாகையால் அது மேன்மை; நல்ல அன்புள்ள சிநேகித்தரை விட்டு நீங்கினால் தகுந்த துணையில்லாமைபற்றிப் பல துன்பங்களால் வருந்த நேரிடுமாகையால் தீயிற்குதித்துச் சாதல் நலமாம் என்றபடி.

'யாழின்' முதலியவற்றுள் ஐந்தனுருபு எல்லைப்பொருளில் வந்தது; நீக்கப்பொருள் என்றது பொருந்தாது. 'பசைந்தாரில்' இது நீக்கம். பண் அழிந்த எனப்பிரித்துப் பதனழிந்த உணவுகளை என்றுரைப்பினுமாம். அழிய என்னும் எச்சம் அழிந்து எனத் திரிந்து நின்றது. இதனால் அழிதல் நிச்சயம் என்பது பெறப்பட்டது. (கரு)

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழா
மின்சொற் குழியி னினிதெழூஉம்—வன்சொற்
கரவெழூஉங் கண்ணில் குழியி னிரவெழூஉ
மின்மைக் குழியில் விரைந்து.

(ப-ரை) வண்மை - ஈகையாகிய பயிர், வளப்பாத்தியுள் - (நல்லோருடைய) செல்வமாகிய பாத்தியில், வளரும் - விருத்தியாகும்; கிளைக்குழாம்-சுற்றத்தின் கூட்டமாகிய பயிர், இன்சொல் குழியில் - மதுரமான சொல்லாகிய பாத்தியில், இனிது - (இடையூறில்லாமல்) நன்றாக, எழூஉம் - வளரும்; வன் சொல் கரவு - கடினச் சொற்களோடு கூடிய லோபகுணமானது, கண் இல் குழியில்-கண்ணோட்டமின்மையாகிய விளைநிலத்தில், எழூஉம்—; இரவு - யாசித்தலாகிய பயிர், இன்மைக் குழியில் - வறுமையாகிய பாத்தியில், விரைந்து எழூஉம் - விரைவாக வளரும், எ - று.

(வி-ரை.) செல்வ மிகுந்திருந்தால் இஷ்டமானமட்டுங் கொடுக்கக்கூடும், அப்படியில்லாதவன் கொடுக்கத்தலைப்படுதல் கூடாது; இனிய சொற்களைப் பேசி யுபசரித்தால் சுற்றத்தார் சேருவார்களாதலால் அப்படிச் செய்யவேண்டும்; தாக்ஷிணிய மில்லாதவன் கடின

மான சொற்களைப் பேசி நீக்குவதேயன்றி யாருக்குமொன்றுங் கொடான்; தரித்திரம் மிகுந்திருப்பவன் இரப்பது குற்றமன்று என்பதாம்.

'வளப்பாத்தி' இருபெயரொட்டுப் பண்புத்தொகை. எழூஉம் என்பது இன்னிசை யளபெடை (நன் - எழுத்து-சூ-௯௧). 'வன் சொற்கரவு' என்பதற்குப் பதில் 'வன்சொலாம்கா' என்றும் பாடம்; இதற்கு: கடுஞ்சொல்லாகிய சோலை என்பது பொருள். குழியில் என்பதற்குப் பதில் குழியுள் என்றும் பாடம். 'இல்குழி' (நன்-மெய்யீறு-சூ-௩0) விதியால் இயல்பாயிற்று, பண்புத்தொகை. (௧௪)

இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

(ப-ரை.) இன்னாமை வேண்டின் - (ஒருவன் தனக்கு) இழிவை விரும்புவானானால், இரவு எழுக - (மானங்கெடவரும்) யாசித்தலை மேற்கொண்டு தோன்றக்கடவன்; இந்நிலத்து - இவ்வுலகில்கண், மன்னுதல் வேண்டின்-என்றும் தான் நிலைபெற்றிருத்தலை விரும்புவானானால், இசை நடுக - புகழை நாட்டக்கடவன்; தன்னொடு செல்வது - (மரணமடைந்து போங்காலத்து மறுமைக்குத்) தன்னுடனே செல்லுந் துணையாவதனை, வேண்டின் - விரும்புவானானால், அறம் செய்க - தருமஞ்செய்யக்கடவன்; வெல்வது வேண்டின் - (தீயசிந்தைகளை) வெல்லுங் கருவியை விரும்புவானானால், வெகுளி விடல் - சினத்தை விடக்கடவன், எ - று.

(வி-ரை.) இரப்பது மிகவும் பிரியமாகாத காரியம்; கீர்த்தியிலையாயிருந்தால் அவனிறந்திருந்தும் உயிரோடிருப்பவன் போலாம்; செல்வமுதலாயவொன்றும் பரலோகத்துக்கு உதவியன்று, தருமமே

யுதவி; கோபமில்லாதவனுக்கு எவனும் பகையாகமாட்டானுகையால் அவன் எல்லாரையும் ஜயித்தவன்போலாம் என்பதாம்.

வேண்டின் என்பது பொருணடையில் ஓரழகே யல்லது வேண்டாவிட்டால் அப்படிச் செய்யற்க என்று கூறியதன்று. இந் நிலத்தில் என்றும் பாடம். வெல்வது வேண்டின் என்பதற்கு (யாவரோடும்) ஜயத்தை விரும்புவானுனல் என்று பொருள் கூறினுமாம். (கரு)

கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்.

(ப-ரை.) கலவர்-மரக்கலமுடையார், கடல் - கடலினது, குட்டம் - ஆழமாகிய நீரை, போழ்வார் - ஊடறுத்துச்செல்வர் (ஜயிப்பார்கள்); பாய் மா உடையான் - (போர்முகத்தில் அஞ்சாமல்) பாயுமியல் புள்ள (நல்ல) குதிரையையுடையவீரன்,படைக்குட்டம்-(பகைவரது) சேனையாகிய கடற்கரையை,உடைக்கிற்கும் - உடைக்கமாட்டுவான்; தன் உடையான் - (ஐம்புலன்களிற் செல்லவிடாமல்) மனத்தைத் தன்வசப்படுத்தினவன், தோம் இல் - குற்றமில்லாத, தவக்குட்டம்- தவமாகிய கடலை, நீந்தும் - நீந்துவான்; கற்றான் - (நூல்களை ஐயமறக்) கற்றுணர்ந்தவன், அவைக்குட்டம் - (கற்றவர்கூடிய) சபையாகிய கடலை, கடந்துவிடும் - தாண்டி (ஜயித்து) விடுவான், எ - று.

(வி-ரை.) கப்பலுள்ளவற்குக் கடலைக் கடப்பதும், நல்ல குதிரைச்சேனை யுள்ளவனுக்குச் சத்துருவின் படையைக் கடப்பதும் சாதாரணமாவதுபோல், இந்திரிய வசப்படாதவனுக்குத் தவத்தை நிறைவேற்றுவதும், கல்வியுடையானுக்குச் சபையிற் சென்று மேன்மையடைவதும் சாதாரண மென்பதாம்.

கலவர்—கலம் - பகுதி, அர் - விகுதி, மகரங்கெட்டு வகரவுடம்படுமெய் தோன்றியது. பாய்மா என்பது பிறகுறிப்பிலொன்று. உடைக்கிற்கும்—உடை - பகுதி, கில் - ஆற்றலைக் காட்டுவதோர் விகுதி, கு - சாரியை, உம் - விகுதி. (கசு)

பொய்த்த விறுவாய நட்புக்கண் மெய்த்தாக
மூத்த விறுவாய்த் திளநலம்—தூக்கின்
மிகுதி யிறுவாய செல்வங்க டத்தந்
தகுதி யிறுவாய்த் துயிர்.

(ப-ரை.) நட்பு - நட்புக்கள், பொய்த்தல் - பொய்யாக ஒழுகுதலாகிய (வஞ்சித்தலாகிய), இறுவாய - இறுதியுடையன ; இளநலம்- இளமைப்பருவத்தினழகு, கண் மெய்த்து ஆக - (காண்போர்)கண்களுக்கு மெய்ம்மையுடையதாக, மூத்தல் இறுவாய்த்து - மூப்பாகிய இறுதியையுடையது; செல்வங்கள் - சம்பத்துகள், தூக்குஇல்-(இம்மை மறுமைப் பயன்களை) ஆராய்தலில்லாத, மிகுதி இறுவாய-வேண்டாத செய்கையாகிய இறுதியையுடையன; உயிர் - உயிர்வாழ்தலானது, தத்தம் - தங்கள் தங்களது இருவினைக்கும், தகுதி இறுவாய்த்து - தகுந்த வாழ்நாளாகிய இறுதியையுடையது, எ - று.

(வி-ரை.) சினேகிதனோடு பொய்பேசினால் சினேகம் போய்விடும்; அதிக ஜம்பங்காட்டி நடந்தால் செல்வம் போய்விடும்; யோக்கியதை போய்விட்டால் பிழைத்திருப்பதும் போய்விட்டதுபோலாம்; இவையெல்லாம் எதைப்போலென்றால் வயதுமுதிர்ந்தால் யவ்வனத்தினாலுண்டாகிய அழகு முதலியவை கெடுவதுபோலென்பதாம்.

இறுவாய இறு-முதனிலைத் தொழிற்பெயர், ஆ-என்னும் பகுதியோடு யகர இடைநிலையும், அகர விகுதியும் புணர்ந்து வந்த ஆய

என்பதோடு சேர்ந்து இறுதியுடையன என்னும் பொருளைத்தந்தது; பலவின்பால் குறிப்பு வினைமுற்று. இறுவாய்த்து என்பது ஒருமை முற்று. து-ஒன்றன்பால் விகுதி. இறுவாய்-பகுதி, து அ-விகுதிகள் என்பது நேர்வழி. மூத்தல்—மூ - பகுதி, தல் - தொழிற்பெயர் விகுதி. மெய்த்து—மெய் - பண்படி, பகுதி, து - ஒன்றன்விகுதி, மெய்மையுடையது என்பது பொருள். மூன்றிடத்தும் தகரம் சந்தி. 'இளநலம்' இளமையில் மை கெட்டது "ஈறுபோதல்"; இளமையாகிய நலமென்னுமமையும். மிகுதி, தகுதி - தொழிற்பெயர்கள். இளைநலம் என்றும் பாடம். தகுதி இறுவாய்த்து என்பதற்குக் குணத்தையிறுதியாகவுடையது என்று பொருள் கூறினுமாம். நட்புக்கண் என்பதிலுள்ள கண் என்பதை மெய்த்தாக என்பதனோடு சேர்க்காமல் நட்புக்கள் என்று ஒரே பதமாகக்கொண்டு சினேகங்கள் என்றும் பொருள்கொள்ளலாம். தூக்கின் என்பதை ஒரேபதமாகக்கொண்டு ஆராயுமிடத்து என்றும் பொருள் கூறலமையும். 'செல்வங்கள் மிகுதி இறுவாய' என்னும் தொடருக்குச் சம்பத்துகள் வரம்பு கடத்தலாகிய அல்லது செருக்கினை யிறுதியாக வுடையன என்றுரைப்பினுமாம். (கஎ)

மனைக்காக்கம் மாண்ட மகளி ரொருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னாதல்—சினச்செவ்வேல்
நாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கங்
கேளி ரொரீஇ விடல்.

(ப-ரை.) மாண்ட மகளிர்-நற்குண நற்செய்கையுடைய பெண்டிரிருத்தல், மனைக்கு - (கொண்டவனுடைய) மனைக்கு, ஆக்கம் - உயர்ச்சியைத் தருவதாகும்; சினம் - கோபமமைந்த, செம் வேல் - (பகைவருதிரத்தில் தோய்ந்ததினால்) செந்நிறமாகிய படைத்தொழிலில், ஒருவன் செவ்வியன் ஆதல் - ஒருவன் தேர்ச்சியுடையவனாகுதல், வினைக்கு - போருக்கு, ஆக்கம் - உயர்வைத்தருவதாகும்; இவ்வேந்து - இவ்வரசன், நல்லன் என்றல் - நல்லவனென்று (குடிகளால்) சொல்லப்படுதல், நாடு ஆக்கம் - (அவனுடைய) நாட்டிக்கு உயர்

வைத் தருவதாகும்; கேளிர் - சுற்றத்தாரை, ஒரீஇ விடல் - (ஒருவன்) நீக்கிவிடுதல், கேடு ஆக்கம் - (அவனுக்கு வரும்) கேட்டுக்கு உயர்வைத்தரும் (மிக்க கேட்டை விளைக்கும்), எ - று.

(வி-ரை.) யோக்கியமான மனைவியிருப்பது குடித்தனத்துக்குச் செல்வமேயாம்; ஒருவன் நற்குணமுடையவனுயிருந்தால் அவன் செய்யுங் காரியங்கள் செல்வத்திற்குக் காரணமாம்; அரசன் நல்லவன் என்ற சொற்பெறுவது ஒரு ராச்சியத்திற்குச் செல்வம் வளரக் காரணமாம்; இஷ்டபந்துக்களை நீக்கி விடுவதனுல் கேடுவரும் என்பதாம்.

கேட்டின் விளைவை ஆக்கம் என்றது எதிர்மறையிலக்கணை, இதுவோரழகு. மாண்ட—மாண் - பகுதி, பண்படி, ட் - இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி, மாள் என்னும் வினைப்பகுதி மேலும் இப்படியே வரும். செவ்வியன் - செம்மையில் மை கெட்டு மகரம் வகரமாய் இகரச்சாரியையோடு அன் விகுதி பெற்று வகரம் இரட்டி வந்தது. சினச்செவ்வேல் - ஈரடை யடுத்த வேல் என்பதின்மேல் பிறந்த அன்மொழித்தொகை. 'கேடு' கெடு என்னு முதனிலை நீண்டு தொழிற்பெயராயிற்று. ஒருவன் வினைக்கு செவ்வியனுதல் ஆக்கம் என்பதுவரையில் ஒரு தொடராகக்கொண்டு, ஒருவன் தான் செய்யும் காரியத்திற்குக் குணமுள்ளவனுயிருத்தல் உயர்வைத் தருவதாகும் என்று பொருள் கூறினுமாம். 'சினச்செவ்வேல் நாடு' என்னும் தொடருக்கு, உக்கிரமாகிய செவ்விய வேலாயுதமுள்ள அரசனுடைய இராச்சியத்திற்கு என்று பொருள் கூறினுமமையும். கேளிர் - சினேகிதர் என்றும் பொருள் கூறலாம். (கஅ)

பெற்ற னதிர்ப்பிற் பிணையன்ன டானதிர்க்கும்
கற்ற னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்—பாரிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்
பாட லதிர்ந்து விடும். [ப்பின்

(ப-ரை.) பெற்றான் - கொண்டகணவன், அதிர்ப்பின் - (இல்லறத்துக்குரிய ஒழுக்கத்தினின்று) கலங்குவானாயின், பிணை அன்னாள் - பெண்மானை ஒத்த அவன் மனையாளும் (அவன் வழியினளாகலான்), அதிர்க்கும் - அவ்வொழுக்கத்தினின்று கலங்குவாள்; கற்றான் - (நூல்களைக்) கற்றுணர்ந்தவன், அதிர்ப்பின் - அறிவுகலங்குவானாயின், பொருள் அதிர்க்கும் - (அந்நூலா லுணர்த்தப்பட்ட) பொருள்களும் கலங்கும்; பாரிய மண் அதிர்ப்பின் - தன் பெரிய நாட்டிலுள்ளார் (தன் ஆளுகைக்குள் அமையாமல்) கலங்குவாரானால், மன்னவன் கோல் அதிர்க்கும் - அரசனுடைய ஆளுமுறையுங் கலங்கும்; பண் அதிர்ப்பின் - யாழின் கட்டுநிலை கலங்குமானால், பாடல் அதிர்ந்துவிடும் - பாடுதற்றொழிலும் கலங்கிவிடும், எ - று.

(வி-ரை.) புருஷன் தவறாய் நடந்தால் அதைக்கண்டு பெண்சாதியும் தவறி நடப்பாளாதலால் புருஷன் தவறாமல் நடக்கவேண்டும்; வித்துவான் மதிமயங்கினால் நூற்பொருள் தாறுமாறாய்ப் போமாதலால் அவன் மதிமயக்கமின்றித் தெளிந்து பொருள்கூறவேண்டும்; நாட்டிலுள்ளவர்கள் அரசனால் கொடுமைசெய்யப்பட்டு மனநொந்தால் அவன் செங்கோல் நிலைப்படாதாகையால் அரசன் குடிகள் சௌக்கியத்தையே முக்கியமா யோசிக்கவேண்டும்; இவையெல்லாம், வீணையின் நரம்புகள் ஒழுங்காய்த் திருத்திவைக்காமல் வாசித்தால் இசைகள் சிதைந்துபோவதுபோலாம் என்றபடி.

அதிர்ப்பின் - எதிர்காலவினையெச்சம், அதிர் - பகுதி, இன் - விகுதி, இதுவே காலங்காட்டும், பகரம் எழுத்துப்பேறு, இடைநிலையன்று; 'அதிரின்' எனவும் வருதலாமெனை அறிக. பெற்றான் - கொழுநன்; "பெற்றாற் பிழையாத பெண்டிரும்" என்றார் "மாநிலந்தோன்றாமை" என்னும் பரிபாடலினும். தான் என்பதை அதிர்க்கும் என்பதனோடு சேர்த்துத் தானும் தன்னிலையில் கலங்குவாள் என்று பொருள்கூறினுமாம். பாரிய என்பதற்குப் பதில் பற்றிய என்றும்

பாடம். பற்றிய மண் அதிர்ப்பின் கோல் அதிர்க்கும் என்னுந் தொடருக்குத் தான் கைப்பற்றி யாளுகிற தேசமானது கலங்குமாயின் செங்கோலும் கலங்கும் என்றும் கூறலாம். (கக)

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை—யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

(ப-ரை.) மனைக்கு பாழ் - வீட்டுக்குப் பொலிவின்மையாவது, வாள் நுதல் இன்மை - (நற்குண நற்செய்கையுடைய) ஒளிபொருந்திய நெற்றியுள்ள மனையாளையுடையதாயிராமை; தான் செல்லும திசைக்கு பாழ் - (ஒருவன்) தான் சென்ற இடத்துக்குப் பொலிவின்மையாவது, நட்டோரை இன்மை - (தன்னுடன்) நட்புக்கொண்டவரை உடையனுயிராமை; இருந்த அவைக்கு பாழ் - (பலர்) கூடின சபைக்குப் பொலிவின்மையாவது, மூத்தோரை இன்மை - (கல்வியறிவு கேள்விகளால்) முதிர்ந்தவரை உடையதாயிராமை; தனக்கு பாழ் - தனக்குப் பொலிவின்மையாவது, கற்று அறிவு இல்லா உடம்பு - (பல நூல்களையும்) கற்று அறிதலில்லாத உடம்பினனுயிருத்தல், எ - று.

(வி-ரை.) 'வாணுதல்' என்பது இங்கு விவேகத்துக்குங் குறிப்பாதலால் நல்ல அறிவுடைய பெண் இல்லையாயின் இல்லறம் பயன்படாது; தான்போகிற விடத்தில் தனக்கு ஒருவர் துணைசெய்பவரில்லையாயின் அவ்விடத்துச் சென்ற காரியம் கைகூடாது; வயதும் விவேகமும் முதிர்ந்தவரில்லாத சபையில் யாதொரு காரியமும் நிறைவேறாது; படிப்பில்லாமல் உடம்பைச் சுமந்துகொண்டிருப்பது பாரமேயன்றிப் பயனில்லையாம் என்றபடி.

'வாள்நுதல்' என்பதில் வருமொழி நகரம் ணகரமாகி (நன் - மெய்யீறு-சூ - நஎ), ளகரம் கெட்டது (ஷை சூ-உசு) அன்மொழித்

தொகை. நட்டோர்-வினையாலணையும் பெயர்; நடு-பகுதி, டகரமிரட்டிக் காலங்காட்டியது, ஆர் விகுதியின் ஆகாரம் ஒகாரமாயிற்று (பொது-சூ-உ). கற்றதனாலாகிய அறிவு கற்றறிவு, பெயரெச்சத்தின் ஈறுதொக்கது; கற்று என வினையெச்சமாகவே கொண்டால் கற்றும் விவேகமடையாத எனக் கருத்துக்கொள்க. (உஉ)

மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின்.

(ப-ரை.) ஒற்றுமை இன்மை - (தகுந்தவரோடு) ஒருமைப்பாடில்லாமையானது, மொய்-தன்வலியை (அல்லது ஒருகூட்டத்தின்) பலத்தை, சிதைக்கும்-அழிக்கும்; ஒருவனை பொன்போலும் மேனியை - (தன்னைக்கூறிய) ஒருவனது பொன்னை ஒக்கும் (உடலினது) நிறத்தை, பொய்-(அவன் பேசும்) பொய்யானது, சிதைக்கும்-அழிக்கும்; பெய்த கலம்-பாலைவார்த்த (கெட்ட) பாத்திரமானது, பாலின் சுவையை - பாலினது மதுரத்தை, சிதைக்கும்—; கூடார்கண் - நட்புச்செய்யத் தகாதவரிடத்து அல்லது தனக்கு இனமல்லாதாரிடத்து, கூடிவிடின்-நட்புச் செய்துவிட்டால், குலம் சிதைக்கும் - (அந் நட்பானது) தன்குலத்தினது பெருமையை அழிக்கும், எ - று.

(வி-ரை) ஒரு பயனைப்பற்றிக் கூடியிருப்பவர்களில் அல்லது ஒரு குடும்பத்தில் ஐக்கிய மில்லாமற்போனால் அக்கூட்டத்தின் காரியம் கைகூடாது; ஒருவன் அழகாயிருந்தும் பொய் பேசுகிறவனாயிருந்தால் அவனைப்பார்க்க உலகத்தார் அருவருப்பார்கள்; ஈயப்பாத்திரம் எண்ணெய்ப்பாத்திரம் முதலியவற்றுள் ஊற்றப்பட்ட பாலின் மதுரம் அப்பாத்திரச் சேர்க்கையாற் கெட்டுப்போவதுபோல், தகாதவரோடு கூடுவதினால் குலத்தின் மேன்மை கெட்டுப்போம் என்றபடி.

ஒற்றுமையின்மை - எழுவாய்த்தொடர். ஒற்றுமை - பண்புப் பெயர் என்னவேண்டும். ஒன்று என்பது வலிந்து மை விகுதிபெற்ற தொழிற்பெயர் என்னலாம். மை விகுதி உடன்பாட்டுத் தொழிற் பெயருக்கு வருவது கண்டிலம். 'ஒருவனை' ஐ யுருபை அது வுருபாக் கொள்க. (பெயர்-கூ-நூ அ). சிதைக்கும் என்பது இரண்டு செயப்படு பொருளுள்ளதன்று. பொய்சிதைக்கும்—"பொய்த்தபிற் றன்னெஞ் சே தன்னைச் சுடும்" ஆதலால் இவ்வாறு கூறினர். (உகூ)

புகழ்செய்யும் பொய்யா விளக்க மிகழ்ந்தொருவர்
பேணுமை செய்வது பேதைமை—காணுக்
குருடனுச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு.

(ப-ரை.) பொய்யா விளக்கம்-பொய் சொல்லாமையாகிய விளக்கமானது, புகழ் செய்யும் - புகழை உண்டாக்கும்; பேதைமை - யாதும் அறியாமை, ஒருவர் பேணுது - பெரியாரொருவரை (துணையாக) விரும்பாமல், இகழ்ந்து - (அறத்தினெல்லை) கடந்து, செய்வது-(தீங்கினை) செய்யவல்லது; மம்மர் - (கல்லாமையால் அல்லது செல்வமுதலியவற்றால் வரும்) மயக்கமானது, காணு - (தன்னையுடையவர்களைச் செல்லும் வழியினியல்பை) அறியாத, குருடன் ஆ செய்வது - (ஒருவனைக்) குருடனுகச் செய்யவல்லது; கற்பு - கல்வியறிவு, இருள் தீர்ந்த - மயக்கத்தினின்று நீங்கிய, கண்ணர் ஆ செய்வது - கண்களுடையராகச் செய்யவல்லது, எ - று.

வி-ரை. சத்தியம் பேசுதலே ஒருவனுக்குக் கீர்த்தியாம்; புத்தியில்லாமற்போனுல் எதையும் அலக்ஷியஞ்செய்து காத்துக்கொள்ள மாட்டான்; குடித்தல் முதலானவற்றால் மயங்கினவனுக்கு ஒன்றுந் தெரியாது; கல்வி இந்தக் கண்ணுற் காணக் கூடாததையும் காணும்படியான கண்போலாம் என்பதாம்.

பொய்யாமையாகிய விளக்கம் பொய்யாவிளக்கம்,மை-கெட்டது. புகழப்படுவது புகழ், செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டது. கற்பு—தொழிற்பெயர்; கல்-பகுதி, பு - விகுதி. கண்ணர்—வினையடியாகப்பிறந்த குறிப்புமுற்று; ஆ-க என்னும் ஈறுகெட்ட வினையெச்சம்இங்குவினையுரியாய் நின்றது. இகழ்ந்தொருவன் பேணாமை செய்வதுஎன்றும் பாடம். ஒருவன் என்பதைப் புகழ் என்னும்பதத்திற்கு முன்வைத்தும் பொருள் கூறலாம். பேதைமை இகழ்ந்து பேணாமை செய்யும் என்னுந் தொடருக்கு மூடத்தனம் தூஷித்து(ஒன்றையும்) பாதுகாவாமையைச் செய்யும் என்று பொருளுரைப்பினுமாம். குருடாரச்செய்வது என்றும் பாடம். பொய்யாவிளக்கம்—"பொய்யாமையன்ன புகழில்லை", "பொய்யா விளக்கே விளக்கு" எனத் திருக்குறளிற் கூறியவாறு காண்க. பேணாமைசெய்வது—"யாதொன்றும் பேணாமை பேதை தொழில்" என்பது (திருக்குறள்-அ௩௩.) (உச)

மலைப்பினும் வாரணந் தாங்குங் குழவி
யலைப்பினு மன்னேயென் றோடும்—சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டா
ருடனுறையுங் காலமு மில்.

(ப-ரை.) மலைப்பினும் - (தன்னோடு பாகன்) போர்செய்தாலும், வாரணம் தாங்கும்-யானை (அவனைத்) தாங்காநிற்கும்; அலைப்பினும் - (தன்னைத்தாய்) அடித்து வருத்தினாலும், குழவி-பிள்ளை, அன்னே என்று ஓடும் - தாயே என்று சொல்லிக்கொண்டு (அவள் பின்னே) ஓடும்; நட்டார் - நட்புக்கொண்டவர், சிலைப்பினும் - (ஒரு பொருளைப் பற்றித் தம்மில் கோபங்கொண்டு) உரத்துப்பேசினும்,நடுங்கும் வினை செய்யார்-(ஒருவருக்கு ஒருவர்) நடுங்குதற்கு ஏதுவாகிய தொழிலைச் செய்யார்; ஒட்டாரும் - பகைவரும், உடன் உறையும் காலமும் - (ஒருவரை ஒருவர் மனத்தால்) பிரியாமல் நட்புக்கொள்ளும்படியான காலமும், இல் - இல்லையாம், எ - று.

(வி-உரை.) 'ஒட்டார் உடனுறையுங் காலமும் இல்' எனவுமுரைக்கலாம். 'மலைப்பினும் வாரணந் தாங்கும்' என்பது பலவானை ஒருவன் துணைப்பற்றினால் அந்தப் பலவான் தனக்குத் துன்பம் நேரிட்டிருக்கையிலும் அடுத்தவனைக் காப்பாற்றுவான் என்பதைத் தெரிவிக்கின்றது. 'குழவி அலைப்பினும் அன்னே என்றோடும்' என்பது தன்னை அன்போடு காப்பாற்றுகிறவர் ஒருகால் கோபித்தாலும் காப்பாற்றப்படுகிறவர் அவரை நேசித்தே நிற்கவேண்டும் என்றதைத் தெரிவிக்கின்றது. இப்படிச்சொல்வது பிறிதுமொழிதல் என்னுமலங்காரம். சினேகிதர் துன்பஞ்செய்யார், சினேககுணமில்லாதவர் ஒருவரோடுகூடி வாழமாட்டார் என்பது மற்ற வாக்கியங்களின் கருத்து; அல்லது இதனை 'சிலைப்பினு நட்டார நடுங்கும் வினைசெய்யார்' என்பதற்கு உபமானமாகவுங் கொள்ளலாம். 'மலைப்பினும்' என்றதற்கு மேலேறியிருக்கிற பாகன் தன்னை வருத்தினாலும் என்று பொருளுரைத்தால், மேலான திறமுடையவன் பிறனால் தனக்கு வருத்தமுண்டானாலும் தான் அவனுக்குத் துணையாகவே நிற்பான் எனக் கருத்துக்கொள்க. குழவி—குழமை(இளமை)பகுதி, இ-உடைமைப்பொருள்வி.குதி. அன்னை-அண்மைவிளியாதலின் இயல்பாய் நின்றது (பெயர்-சூ-௫௪). அன்னாய் என்றும் அன்னையென்றும் பாடமோதலாம். "தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட், டன்னா யெனனுங் குழவி" என்றார் குறுந்தொகையினும் (௩௯௭) காலமும் என்பதில் உம்மை சிறப்புப்பொருளில் வந்து அக்காலத்தின் அருமையைக் குறிக்கின்றது. (௨௫)

நகைநல னட்டார்க ணந்துஞ் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும்—விசைமாண்ட
தேர்நலன் பாகனாற் பாடெய்து மூர்நலன்
உள்ளானா லுள்ளப் படும்.

(ப-உரை) நகை நலம்-முகமலர்ச்சியினது அல்லது சினேகத்தினது நன்மை, நட்டார்கண்-நட்புக்கொண்டவர்களுக்குள், நந்தும் சிறக்கும்; சிறந்த அவைநலம் - (கற்றறிந்தவர் கூடியதனால்) சிறந்த

அன்பின் விளங்கும் - (அக்கற்றவர்கள் ஒருவர்பால் ஒருவர் வைத்த அல்லது வருபவரிடத்து) அன்பினாலே விளங்கும்; விசைமாண்ட - விரைந்தோடுதல் மிகுந்த, தேர் நலன்-தேரினது நன்மை, பாகனால் - நடத்துந் தேர்ச்சியுள்ள சாரதியினால், பாடு எய்தும் - பெருமையடையும்; ஊர் நலன் - ஓர் நாட்டினது நன்மை, உள்ளானால்-உடைய அரசனால், உள்ளப்படும் - நன்குமதிக்கப்படும், எ - று.

(வி-ரை) சினேகத்தினாலாகிய நன்மை சினேகித்தவர் பரிபாலிப்பதனால் விர்த்தியாகும்; ஒரு சபையாருடைய சற்குணம் அச்சபைக்குவருகிறவரை ஆதரிப்பதனால் விளங்கும்;தேர் நன்றாயோடுந் திறம் அதனைச் செலுத்தும் பாகனுடைய வல்லமையால் மேம்படும்; ஒரு ஊர் நல்லதென்பது அவ்வூரை ஆளும் அரசனாலறிந்து கொள்ளலாம் என்பதாம்.

'நசை நலன்' என்றும் பாடம். இதற்கு: சினேகத்தினது நன்மையென்பது பொருள். 'உள்ளானானுள்ளப்படும்' என்றும் பாடம். இதற்கு: அவ்வூரிலிருக்கிறவன் அல்லது அவ்வூர்க்கு முதன்மையுடையவன் நன்மையானே நிலைக்கப்படும் என்றுரைப்பினு மமையும். நலன் என்பதற்குப் பதில் நலம் என்றும் பாடம். நசை-முதனிலைத் தொழிற்பெயர். நட்டார்கண் என்பதில் உயர்திணைப் பெயரானது பற்றி வலி யியல்பாயிற்று (உயிர்-கூ-கூ). அன்பின் ஐந்தனுருபு ஏதுப் பொருளில் வந்தது. "அறனிலை திரியா அன்பினவை யத்து" என்பது புறம் - ௭௧. விசை - செலவு; "கடுவிசைக்க நாவாய்" புறம்-௨0௫. (௨௬)

அஞ்சாமை யஞ்சுதி யொன்றிற் றனக்கொத்த
எஞ்சாமை யெஞ்ச லளவெல்லா—நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினு நாட்டிற்
நட்டார்கண் விட்ட வினை.

(ப-ரை.) அஞ்சாமை - (பழிபாவங்களை) அஞ்சாதிருத்தலை, அஞ்சுதி - அஞ்சுவாய்; அளவு எல்லாம் - (தேகத்தோடு கூடிவாழ) அளவுசெய்த நாளெல்லாம், ஒன்றின் - கூடுமாயின், தனக்கு ஒத்த - வருணத்துக்குத்தகுந்த ஒழுக்கங்களினின்று, எஞ்சாமை - சுருங்கா மை,எஞ்சல் - சுருங்காதே; நெஞ்சு அறிய - மனமறிய, கோடாமை- யாவரிடத்தும் நடுவாகநிற்றலை, கோடி - கொள்ளுவாய் ; பொருள் பெறினும் - மிக்கபொருள் பெறுவதாயிருப்பினும், நட்டார்கண் - தேறிக்கொண்ட நட்பினரிடத்து, விட்டவினை - செய்யவிட்டதொ ழிலை அல்லது ஒப்பித்த காரியத்தை, நாடாதி-ஆராயாமலிரு, எ-று.

(வி-ரை.) பழி என்பது இவ்வுலகத்தார் தூஷிக்கும்படியான செய்கை. பாவம் என்பது மறுமையில் துக்கம் அனுபவிக்க ஏதுவான காரியம். இவ்விரண்டுக்கும்பயப்பட்டு நடக்கவேண்டும். ஆயுசுஉள்ள மட்டும் கூடுமான நல்லகாரியங்களைச் செய்யவேண்டும். எவ்வளவு லாபம் கிடைப்பதாயிருந்தாலும் மனமறிந்து அக்கிரமம் செய்யாம லிருக்கவேண்டும். சினேகிதரை நம்பி விட்ட காரியத்தை மறுபடி சோதியாமலிருக்க வேண்டும்.

அஞ்சாமை - இரண்டனுருபு தொக்கதாகக் கொள்க, செய்யுட் களில் பெரும்பான்மை அங்ஙனமே வருவது மரபாதலின். எஞ்சா மை - எதிர்மறை வினையெச்சம், மை - விகுதி. அளவு=காலம், ஏழ னுருபு தொக்கது. 'அஞ்சாமை யஞ்சுவது' என்றும் பாடம். இதற்கு: (பழிபாவங்களை) அஞ்சாமலிருப்பதை அஞ்சல் வேண்டும் என்பது பொருள். எஞ்சும் அளவெல்லாம் என்றும் பாடம். ஒன்றின் தனக்கு ஒத்த எஞ்சும் அளவு எல்லாம் எஞ்சாமை (அஞ்சுவது) என்று பிரித் தும், நெஞ்சு அறிய கோடாமை (அஞ்சுவது) என்று பிரித்தும், கோடிபொருள் பெறினும் நட்டார்கண் விட்டவினை நாடாமை என்று பிரித்தும் பொருள் கொள்ளலாம். 'நாடாமை' என்றும் பாடம். இதற்கு: சோதியாமலிருத்தல்வேண்டும் என்பது பொருள்.

மேற்காட்டியவாறு அஞ்சாமை என்னும் பதத்தை மூன்றிடத்தும் வருவித்துப் பொருள்கொள்ளினுமாம். (உ௭)

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

(ப-ரை.) அலைப்பான் - வதைப்பதற்கு, பிறிது உயிரை - வேறொரு பிராணியை, ஆக்கலும் - வளர்ப்பதும், குற்றம் - குற்றமாம்; விலைப்பாலில் கொண்டு - விலையாகிய உரிமையினால் வாங்கி, ஊன் மிசைதலும் - மாமிசத்தைத் தின்பதும், குற்றம்—; சொலல்பால அல்லாத - சொல்லுந் தகுதியில்லாத சொற்களை, சொல்லுதலும் குற்றம்—; கொலைப்பாலும் - ஜீவனை வதைப்பதாகிய தன்மையும், குற்றமே ஆம்—, எ - று.

(வி-ரை.) 'பிறவுயிரை' எனவும் பாடம். ஆடு முதலியவைகளைப் பின் கொல்லும்பொருட்டு வளர்ப்பதும் பாவம்; எலி முதலியவற்றைக் கொல்லுவதற்குப் பூனை முதலியவைகளை வளர்ப்பது பாவம் என்றுங்கொள்ளலாம். தான் நேரே ஒரு ஜீவனை வதைத்துத் தின்னுமற்போனாலும் பிறர் வதைத்ததை விலைக்குக்கொண்டு தின்பதும் பாவம். தகாத பேச்சுகளைப்பேசுவதும் பாவம். நோய்க்கொல்லுவதும் பாவமாம் என்கிறபடி. 'கொலைப்பாலும் குற்றமேயாம்' என்பதற்கு, ஒருவனைக் கொலைசெய்வதனால் வரும் சிறப்பும் குற்றமாம் என்றும் கருத்துக்கொள்ளலாம்.

உம்மைகள் எண்ணுப்பொருளோடு சிறப்பையும் குறிக்கும். அலைப்பான் - எதிர்கால வினையெச்சம்; அலை - பகுதி, பான்-விகுதி. இப்பாட்டு அடிமறிமாற்றுப் பொருள்கோள் (நன்-பொது-சூ-௬அ).

கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

(ப-ரை.) குடி எல்லாம் - (நாட்டிலுள்ள) குடிகளெல்லாம், கோல் நோக்கி வாழும் - (தம்மரசனது) செங்கோலைநோக்கி வாழா நிற்கும்; குழவிகள் (எல்லாம்) - இளம் பிள்ளைகளெல்லாம், தாய்-தங்கள் தாய்களினுடைய, முலைப்பால் நோக்கி - முலைப்பாலை நோக்கி, வாழும்—; உலகம் (எல்லாம்)-உலகத்துயிர்களெல்லாம், வானத்துளி நோக்கி-மேகத்தினது பெயலை நோக்கி, வாழும்—, கூற்று - யமன், உலகவிளி நோக்கி - உலகத்துயிர்களினது சாதலைநோக்கி, இன்புறூஉம் - மகிழாநிற்பன், எ - று.

(வி-ரை.) குழந்தைகள் தாய் முலைப்பா லில்லாமற்போனால் பிழைத்து வாழாததுபோலக் குடிகளெல்லாம் அரசனுடைய நல்ல துரைத்தனமில்லாமற்போனால் சுகப்படமாட்டார்கள்; 'வானத்துளி நோக்கி வாழுமுலகம்' என்பதும் முந்தியதற்கே உபமானம்; 'விளி நோக்கி யின்புறூஉங் கூற்று' என்பது துட்டர் பிறர்கேட்டைக்கண்டு சந்தோஷிப்பார்கள் என்பதைத் தெரிவிக்கின்றது. இதுவும் பிறிது மொழிதல் என்னு மலங்காரம். (உக)

கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பா
லுயர்ந்த வுலகம் புகும்.

(ப-ரை.) கற்ப - (ஒருவன்) நூல்களைக் கற்பதனால், கழி மடம் - மிகுதியான பேதைமை, அஃகும் - குறைவன்; மடம் அஃக - அறி

யாமை நீங்குவதனால், புற்கம் தீர்ந்து-புல்லறிவு (ஈனமான சிந்தை) நீங்கி, இவ்வுலகின் கோள்-இவ்வுலகத்தினது இயல்பினை அல்லது இயற்கையை, உணரும் - அறிவான்; கோன் உணர்ந்தான் - அவ்வியற்கையை உணர்ந்தவன், தத்துவம் ஆனநெறி - உண்மையாகிய வழியில் அல்லது ஞானமார்க்கத்தில், படரும் - செல்லுவான்; ஆந்நெறி - சென்ற அவ்வழியினால், இப்பால் - இம்மையில், உலகின் - உலகத்தில், இசைநிறீஇ - புகழை நிலைபெறச்செய்து, உப்பால் - மறுமையில், உயர்ந்த உலகம் - (எல்லாவுலகங்களினும்) உயர்ந்த முத்தியுலகத்தில், புகும் - புகுவான், எ-று.

(வி-ரை.) படிக்க அறியாமை நீங்கி அதனால் பொன்னாசை முதலிய ஈனமான கருத்துக்கெட ஞானமார்க்கத்தால் முத்தியடையலாம் என்பதாம். இது காரணமாலையென்னு மலங்காரம். கழிமடம்-உரிச்சொற்றொடர். புற்கம்-புல் என்னும்பண்படிப் பகுதிமேல் குச்சாரியையும் அம் விகுதியும் சேர்ந்துவந்த பண்புப்பெயர். இங்கே தீர்ந்து என்பது, வாய்திறந்து தூங்கினான் என்றதுபோல் பின்னிட்ட காரியம் முன் சொல்லப்பட்டது. இவ்வுலகம் என்பது, காணப்படு முலகங்களை யெல்லாம். 'உப்பால்' என்பது மனிதலோகமாகிய இவ்வுலகும், தேவலோகமாகிய அவ்வுலகுமல்லாத வேறுலகம்; அதாவது மோக்ஷவுலகத்தைச் சுட்டுகின்றது. பால் - இடம். நிறீஇ - நிறுவு என்னும் பகுதிமேல் இ என்கிற வினையெச்ச விகுதி வரப் பகுதி ஈறுகெட்டு உகரம் இகரமாய் அளபெடுத்துநின்றது. ()

குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்—அழித்துச்
செறுவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

(ப-ரை.) நீர் - நீரானது, குழித்த உழி - குழி செய்யப்பட்ட இடத்தில், நிற்பது-நிற்கும் இயல்புடையது; பாவம் - பாவமானது,

பல்லோர் - (அறிவுடையோர்) பலராலும், பழித்த உழி - பழிக்கப் பட்டவனிடத்து, நிற்பது—; காமம்-காமமானது, அழித்து - (ஒருவன்) தவவொழுக்கத்தைக் கெடுத்து, செறுவுழி - (தீய ஒழுக்கத்தில்) சேர்ந்தால், நிற்பது - (அவனிடத்து) நிற்கும் இயல்புடையது; அறிவு - கல்வியறிவானது, தனக்கு ஒன்று - தனக்கொரு துன்பம், உறுவுழி-வந்தால், நிற்பது - (உதவிநிற்கும்) இயல்புடையது, எ-று.

(வி-ரை.) பள்ளத்தில் நீர் நிற்பதுபோல் பலரும் பழிக்கும்படியான நிலையில் நிற்கிறவனிடத்தில் நிச்சயமாய்ப் பாவமிருக்கும். நண்பர் பலவிதத்திலும் குற்றங்காட்டித்தடுத்தாலும் காமமானது ஒழியாமல் நிற்குமாதலால் அதனைக்கடிவதற்கு உறுதிகொண்டிருக்கவேண்டும். ஆபத்து வந்தபோது அதை நீக்கும் உபாயம் விவேகமேயாகையால் அதனைச் சம்பாதிக்கவேண்டும் என்பதாம்.

குழித்த உழி என்பது 'குழித்துழி' எனத் தொக்குவழங்கியது. உழி - இடம். பெயரெச்சத்தொடர். பழித்துழியு மிவ்வாறே. செறுவுழி-வினைத்தொகை. நிற்பது - வினையாலணையும்பெயர், எழுவாய் பெயர்கொண்டு முடிந்தது. நிற்பதுணர்வு என்றும் பாடம். (௩௧)

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்கு
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற் றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லை யில்லென்னாத
வன்மையில் வன்பாட்ட தில்.

(ப-ரை.) ஒருவற்கு - ஒருவனுக்கு, திருவின்-செல்வப்பொருள் போல, திறல் உடையது - வலியுடையது அல்லது சாதிக்கவல்ல சாமர்த்தியமுள்ளது, இல்லை - (பிறிது) இல்லை; கற்றலின் - கல்வியறிவுபோல, வாய்த்த - நீங்காத்துணைகள், பிற இல்லை - வேறில்லை; எற்றுள்ளும் - (துன்பந்தருவன ஆகிய) எல்லாவற்றிலும், இன்மை

யின் - வறுமைபோல, இன்னாதது - துன்பந்தருவது, இல்லை-வேறு இல்லை; இல் என்னாத - (அவ்வறியவர்க்கு) இல்லையென்று சொல்லாத, வன்மையின் - வல்லமைபோல, வன்பாட்டது இல்-வேறு வல்லமையானது இல்லை, எ - று.

(வி-ரை.) செல்வத்தினால் எதையும் சாதிக்கலாம் ஆனாலும், அச்செல்வத்தையும் சாதிக்கவல்லது கல்வியாதலால் கல்வியேமேலானதாம்; தரித்திரத்தைக் காட்டிலும் சகலவிதத்திலும் பிரியமாகாதது வேறில்லை; ஆனாலும், எனக்கு இல்லையென்று ஒருசொல்சொல்வது மிகவும் கொடியசெய்கையாதலால் இவ்வறுமையைப் பொறுத்தாகிலும் மானத்தைக் காப்பது மேலாம்; முதல் வாக்கியமும் மூன்றும் வாக்கியமும் அனுவாதம்.

'கற்றலின்னாத' எனவும்பாடம்; பொருளில் வித்தியாசமில்லை. 'வன்பாட்டது' வன்பாடு - வன்மை, வன்படு என்னும் இருசொலொட்டாகிய முதனிலை, பாடு என விகாரப்பட்டுத் தொழிற்பெயரானது அதனையுடையது வன்பாட்டது. வன்பாடு - பகுதி, து - விகுதி, அ - சாரியை. 'வன்பட்டது' என்பது பாடமாயின் வினையாலணையும்பெயர். இன்னாதில்லை—"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி, னின்மையே யின்னா தது" (திருக்குறள் - 1041). வன்மையின் வன்பாட்டதில்—"இரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்டதில்" (ஷை 1063). 'இல்லென்னாத' என்பதற்குப் பதில் 'இலம் என்னும்'என்றும் பாடம். 'இலம் என்னும் வன்மையின் வன்பாட்டது இல்' என்னுந் தொடருக்கு - நாங்கள் தரித்திரர் என்று (பிறரிடத்துச்) சொல்லும் கடினமனத்தைக் காட்டிலும் கடினத்தன்மையுள்ளது இல்லை என்பது பொருள். (௩௨)

புகைவித்தாப் பொங்கழ றோன்றுஞ் சிறந்த
நகைவித்தாற் றோன்று முவகை—பகையொருவன்

முன்னம்வித் தாக முளைக்கு முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும்.

(ப-ரை.) பொங்கு அழல்-(அடுக்களையில்) எரிகின்ற தீயினது இருப்பு, புகைவித்துஆக-(புறத்தில்) புகை காரணமாக, தோன்றும்-விளங்கும்; உவகை - (உள்ளத்தில்) மகிழ்வினது இருப்பு, சிறந்த நகை - (புறத்தில்) மிக்க முகமலர்ச்சி, வித்து ஆ - காரணமாக, தோன்றும்—; பகை - (உள்ளத்திலுள்ள) பகைமைக் குணம், ஒருவன் முன்னம் - ஒருவனது குறிப்புச் செய்கை, வித்து ஆக-காரணமாக, முளைக்கும் - (புறத்தில்) தோன்றும்; முளைத்தபின்-தோன்றின பிற்காலத்து, இன்னா வித்து* ஆகிவிடும்-(செய்யப்படும்) துன்பந் தருஞ் செய்கைகளுக்கு (அப்பகைமை) காரணமாய் முடியும், எ-று.

(வி-ரை.) புகையைக்கண்டு நெருப்பு இருக்கிறதென்று அறிவதுபோல் ஒருவனைக் கண்டபோது நகைமுகமாயிருந்தால் அவனிடத்துச்சந்தோஷமுண்டென்றறியலாம். அப்படியே முகக்கடுப்புமுதலிய குறிப்பால் பகை அறியலாம். இவ்விதமாய்த் தோன்றின பகையால் அவனிடத்து இவனுக்கும் பிரியமில்லையாய்விடும். இன்னாமையின் வித்து - இன்னாவித்து. பொங்கு அழல் - வினைத்தொகை. 'ஆகிவிடும்' விடு அசைநிலை; உறுதிப்பொருளைக் காட்டுமென்றும் கூறுவர். (௧௧)

பிணியன்னர் பின்னோக்காப் பெண்டிர் உலகிற்
கணியன்ன ரன்புடைய மாக்கள்—பிணிபேணும்
புல்லன்னர் புல்லறிவி னுடவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

(ப-ரை.) பின் நோக்கா பெண்டிர் - மேல் விளைவை அல்லது பின்னிட்டு வரும் கேட்டை ஆராயாத பெண்டிர்கள், பிணி அன்னர்-

(கொண்ட கணவருக்கு) நோயை ஒப்பாவர்; அன்பு உடை மாக்கள்-(எல்லா உயிர்களிடத்தும்) அன்புடைய மனிதர், உலகிற்கு-உலகத் துயிர்களுக்கு, அணி அன்னர் - ஆபரணத்தை ஒப்பாவர்; புல் அறிவின் ஆடவர் - சிற்றறிவையுடைய ஆண்மக்கள், பிணி பேணும் - வியாதியை வளர்க்கும்படியான, புல் அன்னர் - விஷப் புல்லுக்கு ஒப்பாவர்; வல் என்ற - இளகுதலில்லாத, நெஞ்சத்தவர் - மனமுடையவர், கல் அன்னர் - கல்லை ஒப்பாவர், எ-று.

(வி-ரை.) தம் கணவருக்கு அல்லது தமக்குப் பின்வரும் அபவாத முதலிய கேட்டை யோசியாமல் ஒரு காரியஞ்செய்கிற பெண்கள் வியாதிபோல் துன்பந்தரத்தக்கவர்; எல்லாரிடத்தும் அன்புபாராட்டிஞல் அவர் உலகத்துக்கு ஆபரணம்போல் கொண்டாடத்தக்கவராவர்; ஈனபுத்தியால் கேடுறுகின்ற மனிதர் உலகத்துக்கு விஷப் புல்லைப்போல நீக்கத்தக்குப் பாத்திரமாவர்; தயாதாக்ஷிணியமில்லாதவர் அங்கங்கே உபயோகமற்றுக் கிடக்கிற கற்களைப்போல் வீணுயிருப்பர் என்பதாம்.

'பிணிபயிரின் புல் அன்னர்' என்றும் பாடம். இதற்கு: (நீரைக்) கட்டுகின்ற பயிரிலுள்ள புல்லை ஒப்பாவர் என்பது பொருள். 'பிணிபயிலும்' என்றும் பாடம். இதற்கு: பிணியை வருவிக்கும் என்பது பொருள். அன்பு உடைமாக்கள் என்னும் தொடருக்கு - (சம்பந்தமுடையாரிடத்து அல்லது யாவரிடத்தும்) அன்புடைய மனிதர் என்று பொருள் கூறினுமாம். அன்னர்-அன் என்னும் இடைச்சொல்லடியாக வந்த குறிப்புமுற்று மாக்கள் என்றும் பன்மை. நெஞ்சத்தவர்-சினையடியாக வந்த பெயர்ப்பகுபதம். நெஞ்சம்-அத்து-அ - அர், பகுதி சாரியைகள் விகுதி. "மவ்வீறு ஒற்றழிந்து" "அத்தினகரம்" இவ்விரு சூத்திரங்களால் மகரமும் அகரமும் கெட்டன. (௩௪)

அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்

வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில்.

(ப-ரை.) அந்தணரின் - பார்ப்பாரைப்போல, நல்ல பிறப்பு - உயர்ந்த பிறப்பினர், இல்லை - இலர்; என் செயினும் - (தனக்கு) என்ன தீங்கைச் செய்தாலும், தாயின் - தாயைப்போல, சிறந்த தமர் இல்லை - சிறந்த உறவினரிலர்; யாதும் - சிறிதும், வளமையோடு - செல்வத்தோடே, ஒக்கும் - ஒப்பாகும், வனப்பு இல்லை - அழகு இலது; எண்ணின் - ஆராய்ந்தால், இளமையோடு - (எல்லா இன்பங்களையும் அனுபவித்தற் குரியதாகிய) இளமைப் பருவத்தோடு, ஒப்பதும் - ஒத்த பருவமும், இல் - இலது, எ-று.

(வி-ரை.) பிராமணரைக்காட்டிலும் பிறப்பில் உயர்ந்தவரில்லாததுபோல் பிறர் எவ்வளவு மேன்மை செய்தாலும் தாய்க்கு மேம்பட்ட உறவினரில்லையாம்; செல்வமிருந்தால் எல்லா அழகும் கைகூடும்; அதுபோல் இளம்பிராயமே எல்லா நன்மைகளையும் தேடிக்கொள்ளக்கூடியது; இளமை மாறு முன்னமே கல்விமுதலியவைகளைத் தேடிக்கொள்க என்பதாம்.

'அந்தணரின் மிக்க பிறப்பில்லை' என்பதும் பாடம். இதனை யுவமானமாகக் கொள்ளாமல் விதியாகவே கொண்டு "ஆதலால் அந்தணரை மேன்மையாகக்கொண் டொழுகவேண்டும்" எனவும் கருத்துக்கொள்ளலாம். பிறப்பு அதனையுடையார்க்கு ஆகுபெயர் அந்தணரின் - ஐந்தனுருபு, எல்லைப்பொருளில் வந்தது. நீக்கப்பொருள் என்பாருமுளர். (௩௫)

இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப-தேரின்
அரிய வரியவற் றாற்கொள்ப பெரிய
பெரியரா னெய்தப் படும்.

(ப-ரை.) இரும்பு - இரும்பினை, இரும்பின்-இரும்பாற்செய்த கருவியால், இடை போழ்ப - (கொல்லர்) நடுவில் துண்டிப்பர்; பெருசிறப்பின் - மிக்க சிறப்பினையுடைய, நீர் - (சோற்றோடு கூடிய) நீரை, உண்டார் - உண்டவர், நீரால்-நீரினாலே, வாய் பூசுப-உண்ட வாயினைக் கழுவுவர், தேரின் - ஆராயுமிடத்து, அரிய - (பிறரால் அடைதற்கு) அரிய பொருள்களை, அறியவற்றால் - அருமையாகிய முயற்சிகளால், கொள்ப - (அறிவுடையோர்) செய்துகொள்வர்; பெரிய - பெரும்பேறுகள், பெரியரால் எய்தப்படும் - பேரறிவுடையோரால் அடையப்படும், எ-று.

(வி-ரை.) இரும்பை இரும்பினாலே துணிப்பதுபோலவும், மூக்குடிநீர் குடித்தவாயைத் தண்ணீராலேயே சுத்திசெய்வதுபோலவும், தெய்வபக்தி மோக்ஷ முதலியவைகளை தவம் நிஷ்டை முதலிய அருமையான சாதனங்களாலே தான் அடையவேண்டும். அப்படிப்பட்ட பெரிய சாதனங்கள் கல்வி கேள்விகளாற் சிறந்தவராலேதான் அடையப்படும் என்பதாம்.

வாய்பூசுவதென்பது மரபு. அரிய பெரிய - பலவின்பாற் பெயர்கள். அரு, பெரு-பண்படி, பகுதி; உகரம் இகரமாயிற்று. "ஈறுபோதலிடையுகர மிய்யாதல்" ய் - உடம்படுமெய், அ - விகுதி. (கசு)

மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
அறக்களி யல்லாதார்க் கீயுமுற் றோன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி
ஊரிற் பிளிற்றி விடும்.

(ப-த.ரை.) மறக்களி - (வீரர்களுக்கு) வீரத்தால் வரும் களிப்பு, மன்னர் முன் - (தம்மையுடைய) அரசர்க்கு முன்னே, தோன்றும் - உண்டாம்; சிறந்த அறக்களி - (ஒருவன் மனத்தின்கண்) மிக்க அறத்தால் வருங்களிப்பு, அல்லாதார்க்கு - (மாறுகூய) வலியில்லா

தவர்க்கு அல்லது தரித்திரருக்கு, ஈயுமுன் - உதவுமிடத்து, தோன்றும் - உண்டாம்; வியக்களி - (பொருளுடையானுக்கு) ஏவுதலால் வருங்களிப்பு, நல்கூர்ந்தார் மேற்று ஆம் - (அவ்வேவுதல்) வறியாரிடத்ததானல் தோன்றும்; கயக்களி - கீழ்மைக்குணத்தால் வருங்களிப்பு, ஊரில் - (அக்குணமுடையோர் வாழும்) ஊரில், பிளிற்றிவிடும் - (இரையும்) பலரும் அறியத் தோன்றும், எ-று.

(வி-ரை.) சேவகர்க்குத் தாம் வீரங்காட்டியதனல் உண்டான சந்தோஷம் தம்மை அரசர் கொண்டாடும்போது சிறந்து காணும். அப்படியே தருமஞ் செய்வதனலாகுஞ் சந்தோஷம் தரித்திரருக்குக் கொடுக்கும்போது சிறந்து தோன்றும்; செல்வர், தமக்கொரு வேலையிட்டால் அதனல் தமக்குச் சிறிதுலாப முண்டாமென்கிற சந்தோஷத்தை வறியவே யன்றி மற்றவர் கொள்ளாமல் இழிவாகவே கொள்வர். மூடன் சந்தோஷப்படத்தகாத விஷயத்திற் சந்தோஷத்தையடைந்து ஊரெல்லாம் இரையும்படி ஆர்ப்பரிப்பான் என்பதாம்.

வியம்—பெருமை, அதனற் செய்யு மேவலுக்கு ஆகுபெயர். 'வயம்' எனவும் பாடம்; அப்போது "வயம்" என்கிற வடமொழித் திரிபாக்கொண்டு பராதீனத்தினல் வருஞ் சந்தோஷமென வுரைக்கலாம். 'அறக்களி யில்லாதார்க்கு' என்றும் பாடம். பிளிற்றுவிடும் என்றும் பாடம். வியக்களி நல்கூர்ந்தார் மேற்றும் என்பது யாதானும் ஒருபொருள் பெற்றல் அதனைக்கண்டு வியக்குங்களி நல்கூர்ந்தார் மாட்டுத்தோன்று மென்பதாம். 'மறக்களி மன்னரிடத்தில் தோன்றும்' என்னவுமாம். 'ஈயும் முன்' பெயரெச்சத்தொடர். 'முன்' இடம்-இங்குகாலத்துக்காயிற்று. 'மேற்று' மேல்-பகுதி, று-வி சதி.

மையாற் றளிர்க்கு மலர்க்கண்கண் மாசிருள்
நெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர்—பெய்யல்
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

(ப-ரை.) மலர் கண்கள் - (நீலோற்பலத்தின்) மலர் போலுங் கண்கள், மையால் தளிர்க்கும் - கண்ணுக்கு இடுகிற மையினால் நன்கு விளங்கும்; மால் இருள் - பேரிருளில், திமிர்சுடர் - ஒளி மிகுகின்ற விளக்கம் அல்லது திமிர்ந்து எரிகிற சோதி(தீபம்), நெய்யால் தளிர்க்கும் - நெய்யினால் நன்கு விளங்கும்; குருகு - குருக்கத்தி, பெய்யல் முழங்க-(மேகம்) பெய்தலுக்கு முழங்கினால், இலை தளிர்க்கும் - இலைகள் தளிர்க்கும்; மேல் - மேன்மைக் குணமுடையோர், நட்டார் வழங்க - உறவாயினார்க்கு வழங்கும்பொருட்டு, தளிர்க்கும் - பொருள் சிறப்பர், எ-று.

(வி-ரை.) மையிடக் கண்கள் நாளுக்குநாள் விளங்கிவரும்; இருட்டிலே பிரகாசிக்கத்தக்க விளக்குக்கு எண்ணெய் வார்க்க வார்க்க வளர்ந்து விளங்கும்; மேகம் மழைபெய்யும்படி வருகிற முழக்கங் கேட்டால் குருக்கத்தி மரத்தினிலைகள் செழிப்பாகும்; இவைபோல் மேலானவர்கள் தம்முடைய நேசருக்குக் கொடுக்கக் கொடுக்க மகிழ்வார்கள் என்பதாம்.

குருக்கத்திமரம் மேககர்ஜித முண்டானபோது தழைந்து வளரும் என்பது சாஸ்திர சம்பிரதாயம். 'இலங்கிலை' எனவும் பாடம்; அதற்கு விளங்குகின்ற இலைகள் என்பது பொருள். குருகு- மயில் என்கிறபறவை, என்று உரைத்து இலை என்பதை வழங்க என்பதோடு கூட்டி யுரைக்கலாம். இலையையாகினும் வழங்க என்பதாம். மேல் - ஆகுபெயர். 'நட்டார் வழங்கத் தளிர்க்கு மாமேல்' என்பதற்கு-நேசர் தமக்கொரு சிறுபொருள் தந்தாலும் மேலானவர் களிப்பார்கள் எனவும் பொருள் கூறலாம். 'தளிர்க்கும்' என்பது இலக்கணையால் மகிழ்ச்சி முதலிய பொருளைத் தந்தது. (௩அ)

நகையினிது நட்டார் நடுவண் பொருளின்
தொகையினிது தொட்டு வழங்கின்—வகையுடைய

பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

(ப-ரை.) நகை - முகமலர்ச்சி, நட்டார் நடுவண் - நட்பாயினார்க்குள், இனிது - (அவர்க்கு) இன்பந் தருவதாகும்; பொருளின் தொகை - பொருளின் திரள், தொட்டு - (வெறுப்பில்லாமல்) எடுத்து, வழங்கின் - (உடையோரால் அறத்தின்பொருட்டு) கொடுக்கப்பட்டால், இனிது - இன்பந்தருவதாகும்; வகை உடைய-(குணத்தின்) வகைமையுடைய, பெண் -பெண்ணினது தன்மை, பேணி-(கணவனை உண்டி முதலியவற்றால்) காத்து, வழிபடின்-(அவனைத்தெய்வமாகக் கருதி) வழிபாடு செய்தால், இனிது - (யாவர்க்கும்) இன்பந்தருவது; பண்-பாலையாழ் முதலியவை, பாடல் உணர்வார் அகத்து - பாடுதற்றொழிலை அறிபவரிடத்து, இனிது - இன்பந்தருவன ஆகும், எ-று.

(வி-ரை.) சினேகிதர் நடுவிலிருந்து பேசிச் சிரிப்பது இன்பமாயிருக்கும்; அப்படியே பொருளை யெடுத்துச் சற்பாத்திரத்தில் வழங்கினால் இன்பமாகும்; ஒருபெண் தன் கணவனை உபசரித்து நடப்பளாயின் யாவர்க்கும் இன்பமாயிருப்பாள்; சங்கீதத்தின் திறமறிந்தவர்களிடத்தில் பாட்டுப் பாடினால் இன்பமாயிருக்கும்.

இனிது என்பது பண்பியை உணர்த்தாமல் பண்பை உணர்த்தினமையால் பெண் என்பதையுங் கொண்டு முடிந்தது. 'வகைமாண்ட' என்றும் பாடம். இதற்கு: நல்ல நிலைமையுள்ள என்பது பொருள். 'தகையுடைய'என்றும் பாடம். இதற்கு: சிறப்புடைய என்பது பொருள். (௩க)

இரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சார்வொன் றீவோர்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

(ப-ரை.) எஞ்ஞான்றும் - எந்நாளிலும், காப்பவர்க்கு - (இரந்தவர்க்கு ஒன்றும் ஈயாமல்) ஒளித்துவைக்கு மியல்புடையார்க்கு, செல்சார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, கவிழ்தல் -, (அவரைக் கண்டவளவில்) முகங்கவிழ்தலாம்; இரப்பவர்க்கு - யாசிக்கு மியல்புடையார்க்கு, செல்சார்—, ஒன்று ஈவார் - (அவர் வேண்டியதாகிய) ஒருபொருளைக் கொடுக்கு மியல்புடையார்; பரப்பு அமைந்த - (போரில்) சோம்பலின்மையுள்ள, தானைக்கு - சேனைக்கு, செல்சார்—, தறுகண்மை - (போர்முகத்தில்) இரக்கமின்மை; உயிர்க்கு - (ஒருவனது) உயிர்க்கு, செல்சார்—, ஊன் உண்டல் செய்யாமை - (மற்றவுயிர்களினது) தசையை உண்ணாமை, எ-று.

(வி-ரை.) உலோபிகள் யாசகரைக் கண்டால் முகம் கவிழ்ந்து நிற்பார்கள்; யாசகரோ உதாரர்களையே அடுத்திருப்பார்; சேனையானது வீரத்தையே பற்றிநிற்கும், அதுபோல் புலால் தின்னாமையே ஆத்மாவுக்கு ஆதாரவாயிருக்கும். அவ்வவைகளுக்கு அதது இருந்தால் காரியம் அனுகூலமாவதுபோல் ஊனுண்ணாமையாகிய தன்மை ஆத்மாவுக்கு இருந்தால் கடைத்தேறுங் காரியத்துக்கு அனுகூலமாகு மென்பதாம்.

செல்சார் - செல்லும்படியாகிய சார்பு, வினைத்தொகை. சார் - முதனிலைத்தொழிற்பெயர், சாரும்படியான பொருளுக்கு ஆகுபெயர். தறுகண்மை - மை பகுதிப்பொருள் விகுதி. 'ஒன்றீவார்' என்றும் பாடம். (௪0)

கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
கேட்டதே செய்ப புலனாள்வார்—வேட்ட
இனியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னிய செய்யுந் திரு.

(ப-ரை.) கம்மியர் - கம்மாளர், கண்டதே - (தாம் கண்ட) பொருள்போல்வதனையே, செய்ப - செய்யவல்லார்; புலன் ஆள்வார்-

அறிவினை யாளுதலுடையார், உண்டு என - (பெரும்பயன்) உள்ள தென்று, கேட்டதே - (ஆசிரியர்பால்) கேட்ட அறத்தையே செய்ப—; அமைந்தார் - (நற்குணங்களால்) நிறைந்தவர், வேட்ட (தாம்) விரும்பினவற்றுள், இனியவே - (பிறர்க்கு) இனிமையாயின வற்றையே, செயய—; திரு - திருமகள், முனிபாதார் - (தயமினு எளியாரிடத்தும்) கோபஞ்செயயாதவர், முனனியவே - கருதினவ றையே, செய்யும் - செயவள், எ-று.

(விசேஷ.) சிறபிகள் ஒன்றைக் கண்டால் அதைப்போல் மற ருள்[illegible]ாகள், விததுவான்கள் சாஸ்திரஙகள சொல்லியு தையே செய்வார்கள்; குணவானகள் பிறர்ககுப் பிரியமானதை செயவார்கள், கோப முதலியவைகளை நீககின மகாத்துமாககள நினைத்ததையெல்லாம் திருமகள் நிறைவேற்றுவாள் என்றதனல் சம்மியருக்கு வித்துவானகளும் விததுவான்களுககுக குணவான களும் மேலானவர் எனறும், யாவருககும் யோகிகள மேலானவ என்றுஞ் சொன்னதாம். இதில் ஸாரம் என்னு மலஙகாரதேதாடு வேற்றுமை என்னு மலஙகாரமுங் கூடியிருக்கின்றது.

'கண்டதே செயப' எனவும பாடம். 'கேட்டதே செயப' என்றும் பாடம். 'வேட்ட' வேள - பகுதி, ட் - இடைநிலை, அ - பல வின்பால் விகுதி, எழாம் வேற்றுமைத்தொகை. 'முனனிய' வினையா லணையும்பெயர்; முன்னு - பகுதி, இன - இடைநிலை, இறுதிகெட்டு நின்றது, அ - விகுதி, ப - உடமபடுமெய், இரண்டாம வேற்றுமைத் தொகை. இவை விரியுஙகால் வேட்டவற்றுள் முனனியவறறை என அற்றுச்சாரியை பெற்றுவரும. மற்றவையு மிபபடியே. (சஅ

திருவுந் திணைவகையா னிலலா பெருவலிக
கூறறமுங் கூறுப செய்துண்ணு—தாறற
மறைக்க மறையாதாங் காமமுறையும
இறைவகையா னின்று விடும்.

(ப-ரை.) திருவும் - செல்வங்களும், திணை வகையால் - குடியினது வகைகளில் அல்லது சாதிபேதத்தால், நில்லா - (தக்கபடி) நிலைபெறா; பெருவலி - மிக்க வலியையுடைய, கூற்றமும் - யமனும், கூறுப - (தன்னால் உண்ணப்படுபவனால்) சொல்லப்படுவனவற்றை, செப்து உண்ணாது-செய்து(பின் அவனுயிரைக்)கொள்ளான்; காமம்-காமமும், ஆற்ற மறைக்க - மிகுதியாக மறைக்கவும், மறையாது - மறைபடாது அல்லது வெளிப்படாமலிராது; முறையும் - செங்கோலும், இறை வகையால் - அரசனது செய்கைவகையால், நின்றுவிடும்- நிலைத்துவிடும், எ-று.

(வி-ரை) சம்பத்து "இன்னாருக்குண்டு இன்னாருக்கில்லை" என்று சாதிபேதத்தைப்பற்றி யிருப்பதன்று; அதிருஷ்டத்தின்படியே நிற்பதும் போவதுமாயிருக்கும். எமன் கொண்டுபோகுங் காலத்தில் "இன்னகாரியம் தீர்த்துவருகிறேன் சற்றிரு" என்றால் அப்படியே நடத்திக்கொண்டுபோவதில்லை; காலநியதிப்படியே கொண்டுபோம். ஒருவன்கொண்டிருக்கிற காமத்தை மேலுக்கு மறைத்தாலும் அது வெளியராகாமல் நில்லாது, மணமொப்பப் போக்கினாலே மறையும் இவையெல்லா மிப்படி நியதிபற்றி யிருக்கின்றன. ஜனங்கள் நடக்க வேண்டியகிரமங்களோ அரசன்கட்டளையின்படி எல்லாவிதத்திலும் நிற்குமென்பதாம். அரசன் முறையேயாண்டால் ஜனங்கள் கிரமமாய் நடப்பார்கள் என்றபடி.

திரு:பால்பகாவஃறிணைப்பெயர், ஆதலால் 'நில்லா' எனப்பன்மை வினைகொண்டது. கூறுப: கூறு - பகுதி, ப் - இடைநிலை, அ - பலவின்பால் விகுதி; கூறுவ எனவும் வரும். முறையும் - இதில் உம்மைசிறப்பு; பலரிடத்தும் வெவ்வேறாகி ஒருவர்க்கு அடங்காமையே சிறப்பு. மற்றவை எண்ணும்மை. (௪௨

பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கால்
நில்லெனவு நில்லா வுயிரனைத்து—நல்லான்

உடம்படிற் றானே பெருகும் கெடும்பொழுதிற்
கண்டனவுங் காணாக் கெடும்.

(ப-ரை) உயிர் அனைத்தும் - எல்லாப் பிராணிகளும், பிறக்குங்கால் - உண்டாகும்போது, போ எனவும் - போ என்று சொன்னாலும், போகா - போகமாட்டா; இறக்குங்கால் - சாகும்போது, நில் எனவும் - இரு என்று சொன்னாலும், நில்லா - நிலைபெறமாட்டா; நல்லாள் - திருமகள், உடம்படின் - அங்கீகரித்தால், தானே பெருகும் - (செல்வம்) தானே வளரும்; கெடும்பொழுதில் - (அச்செல்வம்) கெடும்படியான காலத்தில், கண்டனவும் - கண்ணுக்கு எதிரில் தோன்றி யிருக்கும் பொருள்களும், காணா - காணப்படாமல், கெடும் - நாசமாகும்.

(வி-ரை.) சகல பிராணிகளும் பிறக்கும்போதே இறக்கச்சொன்னாலும் இறக்கமாட்டார்கள்; இறக்கும்போது நிற்கச்சொன்னாலும் நிற்கமாட்டார்கள்; இவ்வகையாய் ஆயுள் சதமல்ல; அப்படியே திருமகள் கடாக்ஷம் உண்டானால் செல்வம் வளர்ந்தேறும் ; அது நீங்கினால் இருப்பதும் போய்விடும் ; ஆதலால், செல்வமும் சதமல்ல: இவற்றை நம்பாமல் அறஞ்செய்க வென்றதாயிற்று.

பெயர் என்பது பேர் என மருவியது. காணாமல் என்பது ஈறுகெட்டு காணா என நின்றது. (சுஉ)

போரறின் வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரறின் வாடு மரமெல்லா—நீர்பாய்
மடையறின் நீணெய்தல் வாடும் படையறின்
மன்னர்சீர் வாடி விடும்.

(ப-ரை.) பொருநர் - போர்செய்யவல்ல வீரர்களது, சீர்-வீரத்தின் சிறப்பு, போர் அறின்-போர் இலதானால், வாடும்-வருந்தும்;மரம்

எல்லாம் மரங்களெல்லாம், கீழ் வீழ்ந்த-கீழேபாய்ந்த, வேர் அறின்-வேரறுத்தால், வாடும்-உலரும்; நீள் செய்தல்- நீரினளவு) வளர்கின்ற செய்தற்கொடி, நீர்பாய் - (வருவாயின்வழியே) நீர் பாய்கின்ற, மடை அறின்-குளம் நீர்வற்றினால், வாடும்-உலரும்; மன்னர் சீர் - அரசரது செல்வம், படை அறின் - சேனையிலதானால், வாடிவிடும் - நீங்கிட்போம், எ-று.

(வி-ரை.) சுத்தவீரர் சண்டை நேரிடாமற்போனால் மனக்குறைப்பட் டிருப்பதுபோலவும், வேர் அற்றால் மரங்கள்வாடி அழிவதுபோலவும்,நீர்மடை யில்லாமற்போனால் அதனருகிலிருக்கும் ஆம்பல்வாடுவதுபோலவும்,சேனையில்லாமற்போனால் அரசன் வாடி இளைத்துப்போவான்; ஆதலால், தன்னரசு நிலைபெறும்பொருட்டுத் தக்க சேனைகளை வைத்துக் காக்கவேண்டு மென்பதாம்.

போரின்றி, வேரின்றி, மடையின்றி, படையின்றி எனவும் பாடம். இன்றி: இல் - பகுதி, றி - விகுதி, எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம். பொருநர்: பொரு - பகுதி, நர் - பலர்பால் விகுதி ' மடையின்றிவாடும் பயிர்கள் ' எனவும் பாடம். ' கொடையின்றி மன்னர்சீர் வாடி விடும்' என்கிற பாடத்தில் மந்திரிகள் சேனாபதிகள் முதலான அவரவர்க்குத் தக்கபடி கொடாமற் போனால் அரசர் சீர்வாடிவிடும் என்பது கருத்து. (சச)

ஏதிலா ரென்பா ரியல்பில்லார் யார்யார்க்கும்
காதலா ரென்பார் தகவுடையார்—மேதக்க
தந்தை யெனப்படுவான் றன்வாத்தி தாயென்பாள்
முந்துதான் செய்த வினை.

(ப-ரை.) யார் யார்க்கும் - எல்லாருக்கும், ஏதிலார் என்பார் அயலாரெனப்படுவோர், இயல்பு இலார் - நட்பின்தன்மை யில்லாத

வர்; (யார் யார்க்கும்) காதலார் என்பார் - எல்லாருக்கும் அன்புள்ளாரெனப்படுவார், தகவு உடையார் - நடுவுநிலைமையுடையார்; மேதக்க - மேன்மையுள்ள, (யார் யார்க்கும்) தந்தை எனப்படுவான் (கற்றவர்) எல்லார்க்கும் பிதா என்று சொல்லப்படுவான், தன்வாத்தி-தனக்கு நூல்களைக் கற்பித்தவன்; (யார் யார்க்கும்) தாய் என்பாள்-பிறந்த எல்லார்க்கும் தாயென்று சொல்லப்படுவாள், முந்து - முற்பிறப்பில், தான்செய்த வினை - அவனவன் செய்த நல்வினைகள், எ-று.

(வி-ரை.) சற்குணமில்லாதவர் எல்லாருக்கும் வேண்டாதவர்; சற்குணமுடையவர்கள் இஷ்டராவார்; தனக்குக் கல்விகற்பித்தவன் தந்தைக்குச் சமானமாவான்; முற்பிறப்பில் தான்செய்தநல்வினையே தனக்கு இப்பிறப்பில் தாயைப்போல் வேண்டிய நன்மைகளைப் பயக்குமென்பதாம்.

'யார்யார்க்கும்' என்கிற அடுக்கு எப்படிப்பட்ட சகலமானவருக்கும் என்கிற பொருள்பற்றிவந்தது. மேதக்க மேதகு-பகுதி, அ-பெயரெச்ச விகுதி, ககரமிரட்டிக் காலங்காற்றிற்று. உபாத்தியாய என்கிற ஆரியமொழி உவாத்தியாயன் என்றும், உவாத்தி என்றும், வாத்தி என்றும் திரிந்தது. முந்து என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராய் முற்பிறப்பை யுணர்த்தியது. (௩௫)

பொறிகெடு நாணற்ற போழ்தே நெறிபட்ட
ஐவராற் றானை வினைகெடும் — பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ் நலமாறின்
நண்பினார் நண்பு கெடும்.

(ப-ரை) நாண் - (தனக்கு ஒவ்வாத இழிதொழிலில் ஒருவன்) நாணுகல். அற்ற போழ்தே - நீங்கினபோதே, பொறிகெடும் - (அவனது புகழாகிய) செல்வங்கெடும்; நெறிபட்ட - நல்வழியிலமைந்த,

ஐவரால் - ஐம்பொறிகளால், வினைதானே கெடும் - தீவினை முயற்சி யில்லாமலே கெடும்; நீர் அற்ற பைங்கூழ்-நீரைப்பெறாதபயிர், பொய யா - பொய்க்காத, நலம் கெடும் - விளைவுகெடும்; நலம் மாறின் (ஒருவனது) நற்குணம் வேறுபட்டால், நண்பினர் நண்புகெடும் (தன்னோடு) சிநேகர் கொண்ட சிநேகம் கெடும், எ - று.

(வி-ரை.) நாணுதல் என்பது செய்யாக்காரியஞ்செய்ய மன துணியாமை, அது ஒருவற்கு இல்லாமற்போனால் கண்முதலியவை இருந்து பயனில்லை; அல்லது சூதாடல், கள்குடித்தல், விபசரித்தல் முதலிய தீச்செயல்கள் செய்வதனால் பொருள்கெடும்; கண் செவி வாய்முதலிய இந்திரியங்கள், விஷயங்களிற் செல்லாமல் நெறிப்பட் டிருந்தால் மனம் கடவுளைப்பற்ற வினைகள்கெடும்; நீர் வாரண்டால் பயிரின் செழிப்பு கெடுவதுபோல் சிநேகிதனிடத்தில் அன்பு மாற னால் சிநேகம் கெடும் என்பதாம்.

அஃறிணையான இந்திரியங்களை, வினைகெட ஏதுவான சிறப்பு நோக்கி ஐவர் என உயர்திணையாகக் கூறியதாம் (நன் - பொது சூ-உ அ;) "ஐவர்குமைக்கும்", "ஐவரை அறவாாக்கிய" என்று பிரயோ கங்களுண்டு. 'பைங்கூழ் நலம்கெடும்' என்பது (பொது - சூ - உகூ ன் உரையை விதியாக்கொள்க. (௪௬

நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சாம்—அரும்புணர்ப்பின்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சாம்
ஊட லுணரா ரகத்து.

(ப-ரை.) நன்றி அறியாதார் முன்னர் - (ஒருவர்செய்த) உ காரத்தை மறக்கு மியல்பினரிடத்து, நன்றி சாம் - செய்த உபகார

அழியும்; விருப்பு இலார் முன் - அன்பில்லாதவரிடத்து, சென்ற விருந்தும் - சென்றவிருந்தினரும், சாம் - வாடுவர்; பண் அறியாதார் முன்னர் - பாலையாழ் முதலிய பண்ணை யறியாரிடத்து, அருபுணர்ப் பின் - (பண்ணோடு) அருமையாகிய பொருத்தத்தையுடைய, பாடல் சாம் - பாடுதற்றொழில்கெடும்; ஊடல் - (காமத்திற் கின்பமாகிய) ஊடுதலை, உணரார் அகத்து - அளவறிந்து நீங்காதநாயகரிடத்தில், ஊடல்சாம் - (அன்புடைய மாதர்) ஊடுதல் பயன்படாமல் அழியும், எ - று.

(வி-ரை.) உபகாரஞ்செய்த நன்மையைக் கொண்டாடாதவரிடத்தில் உபகாரம் பயன்படாது; அன்போடு ஆதரியாதவரிடத்தில் வரும் விருந்தினர் பயனடையமாட்டார்; சங்கீதரஸம் தெரியாதவரிடத்தில் நல்ல முறையான பாடல் சிறவாது; முன் ஊடியநா பின் சந்தோஷத்தைத் தருமென்கிற விசேஷத்தை அறியாதவரிடத்தில் அது உபயோகமாகா தென்பதாம்.

> "ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
> கூடலிற் றோன்றிய வுப்பு."

பயன்படாமையை 'சாம்' என்று உபசரித்தபடி. சாவும் என்பது ஈற்றுயிர்மெய் கெட்டது (நன் - வினை - சூ - உஉ. நன்றி, நன்று; இரண்டும் பண்புப்பெயர். றி - று - விகுதிகள், நல்-பகுதி; லகரம் றகரமாகி மெலிந்தது. விரும்பு என்பது வலித்தலால் விருப்பு ஆயிற்று, முதனிலைத்தொழிற்பெயர். முன்னர் அகத்து, இவை ஏழனுருபு. (௩௭)

நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலம்—தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்ன
முகம்போல முன்னுரைப்ப தில்.

(ப-ரை.) தூக்கின் - ஆராயுமிடத்து, மலர் உண்மை-நல்லமலர்களினது இருப்பை, நாற்றம் உரைக்கும் - (அம்மலர்களின்) மணமானது அறிவிக்கும்; வினை நலம் - (ஒருவனுடைய) செய்கையினது நன்மை, கூறிய மாற்றம் - (அவன்) பேசியசொல், உரைக்கும் - அறிவிக்கும், அகம் - (ஒருவன் பிறர்க்குத் தோன்றாமல்) தன்னுள், பொதிந்த - மறைத்துவைத்த, தீமை-தீமையை, மனம் உரைக்கும் - (அவனுக்குத்) தன்மனமே அறிவிக்கும்; முன்னம்-(ஒருவனது) கருத்தை, முகம்போல-முகத்தைப்போல, முன் உரைப்பது-முன்னே தெரிவிக்கவல்லது, இல் - இல்லை, எ-று.

(வி-ரை.) வாசனையாலே பூவிருப்பதை அறிவதுபோல ஒருவன் பேசுகிற பேச்சினாலே அவன் செய்கை யிப்படிப்பட்டதென்று அறியலாம்; ஒருவன் உள்ளேவைத்திருக்கும் கேடான காரியங்களை அவன் எண்ணத்தா லறியலாம்; அவ்வெண்ணத்தை முகக்குறியா லறியலாம் என்றபடி.

நாற்றமுதலிய அஃறிணைகளை உரைக்கும் என்று உயர்திணைபோல் கூறியது (நன் - பொது - சூ - ௩அ) விதியாலெனஅறிக. இவ்வாறுரைத்தல் ஸமாதி என்பதோர் குணவலங்காரமாம். (௩அ)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரசிலா ரில்வழி யில்லை அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

(ப-உ.ரை.) மழை இன்றி - மழையில்லாவிட்டால், மா நிலத்தார்க்கு - பெரியபூமியிலுள்ளார்க்கு, இல்லை - (பொருளும் இன்பமுமாகிய உலகியல்) இலதாகும்; மழையும்-(அத்தன்மையதாகிய) மழையும், தவம் இலார்-தவஞ்செயலுடையார், இல்வழி-இல்லாத இடத்து,

இல்லை - பெய்தலில்லை; தவமும் - (அத்தன்மையதாகிய) தவமும், அரசு இலார் - துரைத்தனமுறைமை யில்லாதவர்கள், இல்வழி - இருக்குமிடங்களில், இல்லை - நடத்தலிலது; அரசனும் - அவ்வரச னும், இல்வாழ்வார் - இல்லறத்தோடு கூடிவாழ்பவர், இல்வழி - இல்லாவிடத்து, இல் - இலனுவான், எ - று.

(வி-ரை.) மழையில்லாம லொருநன்மையு முண்டாகாது; நல்ல தவசிகளிருந்து தெய்வபிரார்த்தனை செய்யாதவிடத்து மழையுமுண் டாவதில்லை; அரசர்கள் முறையே ஆண்டு துஷ்டரை யடக்காவிடின் தவமும் நன்ருய் நிறைவேறுவதில்லை; இல்லறத்தாரான குடிகள் நாட்டில் செவ்வையாய் வாழ்ந்திராவிடின் அரசர்க்குச் செல்வ முதலி யன பெருகித் துரைத்தனம் கிரமமாய் நடப்பதுமில்லை என்பதாம்: எனவே, அரசன் குடிகளைச் செழிக்கக்காத்துத் தான் முறையே அர சாட்சி செலுத்தித் தவமுதலிய தருமங்களைப் பாதுகாத்தால் கடவுள் மழைபெய்வித்து யாவருக்கும் சுகமுண்டாக்குவார் என்றதாயிற்று.

இங்கு ஒன்றுக்கொன்று காரணமாக முறையே கூறியதனுல் இது காரணமாலை என்னு மலங்காரம். இது அடிதோறும் ஒரூஉத் தொடை பெற்றுவந்த இன்னிசைவெண்பா. இல்வழி இல்=வாஸஸ் தானம். வழி - ஏழனுருபு. இல்வாழ்வார் இல்வழி - இது பண்புத் தொகை. உம்மைகள் சிறப்பில் வந்தன. இல் ஈறுகெட்ட குறிப்பு முற்று. (௬௧)

போதினு னந்தும் புனைதண்டார் மற்றதன்
தாதினு னந்துஞ் சுரும்பெல்லாம்—தீதில்
வினையினு னந்துவர் மாக்களுந் தத்தம்
நனையினு னந்து நறா.

(ப-ரை.) போதினுல் - போரும்பினுல், புனை தண் தார்-தொடு க்கப்பட்ட குளிர்ச்சிபொருந்தியமாலை, நந்தும் - மிகுதியாக விளங

கும்; அதன் தாதினால் - அம்மலர்களினுடைய தாதுக்களின் மணத்தினால், சுரும்பு எல்லாம்-வண்டுகளெல்லாம், நந்தும்-(அப்போரும்புகளில்) வந்து சேரும்; தீது இல் - தீங்கில்லாத, வினையினால் - நற்செய்கையினால், மாக்களும் - மனிதர்களும், நந்துவர் - உயர்வர்; தத்தம் - மாமுதலியவற்றின், நனையினால் - அரும்பின் செழுமையினால், நறா நந்தும் - தேன்பெருகும், எ - று.

(விசேஷ.) நல்ல புஷ்பங்களால் மாலை வளர்வதுபோலவும், வண்டுகள் அந்தப் பூந்தாதுகளால் வளர்வதுபோலவும், பூங்கொத்தின் வளத்தால் அந்தத்தேன் வளர்வதுபோலவும், நற்செய்கைகளால் மனிதர் செழித்து வளர்வார் என்பதாம்.

இது எடுத்துக்காட்டுவமை. தமது தமது என்பது வேற்றுமைதொக்கவழி தம்தம் என நின்று "மவ்வீறு" என்கிற சூத்திரத்தினால் மகரங்கெடப் பொதுவிதியால் தகரம் மிகுந்து 'தத்தம்' என்றாயிற்று; அடுக்குத்தொடர். (௫0)

சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரியதுணை துறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூண் இரந்தார்க்கொன்
றில்லென்ற லியார்க்கு மரிது.

(ப-ரை.) சிறந்தார்க்கு - மேம்பட்டவர்களுக்கு, செறுதல் - வெறுத்தல், அரிய - கூடாததாம்; பிறந்தார்க்கு - (நற்குடிப்) பிறந்தவர்க்கு, எஞ்ஞான்றும் - எப்போதும், துணை துறந்து - கூடப்பிறந்தாரைவிட்டு, வாழ்தல்-சுகப்பட்டிருத்தல், அரிய—; வரைந்தார்க்கு பொருட்கூட்டத்தி னீங்கினவர்க்கு, வகுத்து ஊண் - (முன்கூடயிருந்தோருக்குப்) பகுத்து உண்பது, அரிய—; இரந்தார்க்கு-யாசிப்பவர்க்கு, ஒன்று இல்லை எனல் - (அவர்விரும்பிய) ஒருபொரு

இல்லையென்று சொல்லுதல், யார்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும், அரிது—, எ-று.

(வி-ரை.) சிறந்தவர் ஒருவரையும் வெறுப்பதில்லை; நல்லகுடியிற் பிறந்தவர் உடன்பிறந்தவர்களை விட்டிருக்கமாட்டார்கள்.

"திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செகுக்க லாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா வுடன்பிறப் பாக்க லாகா
எம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரிய தென்றான்"

ஒருகுடும்பத்தினின்றும் பிரிந்துவந்தவர்கள் மறுபடி அக்குடும்பத்தாருக்குப் பகுத்துக்கொடுத்து உண்பது நடவாதகாரியம்; யாசித்தவருக்கு இல்லையென்பது எல்லாருக்குங் கூடாத காரியமாம்: என்றால் யாசகர்க்கு இல்லையென்று சொல்லலாகாதென்றபடி.

'வரைந்தார்க்கரிய வகுத்தூண்' என்பதற்கு, உணவு இவ்வளவு என்று ஏற்படுத்திக்கொடுக்கப்பெற்றவர் பிறருக்கு அதனைப் பகுத்துக்கொடுப்பது அரிது என்றும் பொருள் கொள்ளலாம். அரிது என்பது முன் வாக்கியமிரண்டில் இன்மையையும், பின் வாக்கியமிரண்டில் கூடாமையையு முணர்த்தியதென வறிக. அரியது - ஈறு தொகுத்தல்; செறுதல் முதலியவற்றைப் பன்மையாகவேனுங்கொள்ளவேண்டும். அரிது என்னும் பாடம் சிறந்தது. குவ்வுருபு கர்த்தாப் பொருளில் நியதியாய் மயங்கிவந்தது. 'என்றலியார்க்கும்' இதில் இகரம் சாரியை (நன்-மெய்யீறு - ௯ - ௫). (௩௪)

இரைசுடு மின்புறு யாக்கையுட் பட்டால்
உரைசுடு மொண்மை யிலாரை—வரைகொள்ளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையும்
தன்னடைந்த சேனை சுடும்.

(ப·உரை.) இரை - கொழுமையான உணவு, இன்பு உறு-(பிணியால்) துன்பப்படுகின்ற, ஆக்கையுள் பட்டால் - உடலினுள் சேர்ந்தால், சுடும் - வருத்தும்; உரை - (அறிவுடையோரது) சொல் தம் வாயிற்சொல்லே, ஒண்மை இல்லாரை - அறிவில்லாரை, சுடும் - வருத்தும்; ஒருவன் - ஒருவனது, வரைகொள்ளா·அறத்தினது எல்லையைக் கொள்ளாத, முன்னை வினை - முற்பிறப்பிற் செய்த தீவினையானது, சுடும் - (பிற்பிறப்பில் அல்லது இம்மையில்) வருத்தும்; வேந்தனையும் - அரசனையும், (வரைகொள்ளா) - நெறியில்லாத, தன் அடைந்த சேனை - அவனைச் சார்ந்து வாழ்கின்ற சேனை, சுடும் - (முறையறிந்து காக்காவிட்டால்) வருத்தும், எ-று.

(வி·உரை.) ஜீரணசக்தி போதாதவர்க்கு உணவே துன்பஞ் செய்யும்; விவேகமில்லாமல் கண்டபடியே பேசினால் அப்பேச்சினாலேயே அவருக்குத் தீங்குவிளையும்; முற்பிறப்பில் கிரமந்தப்பி நடந்த பாவம் பிற்பிறப்பில் தீமைசெய்யும்; நல்ல நிபந்தனையில் சேனையை நிறுத்தாமற்போனால் அச்சேனையினாலேயே அரசன் கேடு அடைவான் என்பதாம்.

'வரைகொள்ளா' என்பது பின்னிரண்டு வாக்கியங்களிலும் கூட்டிக்கொள்ளப்பட்டது. கடைசி வாக்கியத்தில் அது வினைமெச்சம், பெயரெச்சமாக்கொள்வது சிறப்பன்று. ஒருவன் வரைகொள்ளாமலிருந்தது அவன் வினைமேலேற்றப்பட்டது. வேந்தனையும்: சிறப்பும்மை. (கூஉ)

எள்ளற் பொருள திகழ்த லொருவனை
உள்ளற் பொருள துறுதிச்சொல்—உள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலும்.
தேர்தற் பொருள பொருள்.

(ப-ரை.) ஒருவனை இகழ்தல் - பிறனொருவனை (ஒருவன்) அவமதித்தல், எள்ளற் பொருளது - (தன்னை அறிவுடையோர்) நிந்தித்தலாகிய பொருளமைந்தது; உறுதிச்சொல் - (ஒருவன் சொல்லும்) நன்மையாகியசொல், உள்ளற்பொருளது-(அவனது) நன்கு மதித்தலாகிய பொருளமைந்தது; அறநெறி-அறத்தினதுவழி, உள் அறிந்து-(ஒருவன்தன்) உள்ளத்தில் தெளிந்து, சேர்தற்பொருளது - (பின் அதில்) சேர்ந்து நடப்பதாகிய பொருளமைந்தது; பொருள்-மெய்ப்பொருள்கள், பல்நூலும் - பலநூல்களினும், தேர்தல்பொருள - ஆராய்தலாகிய பொருளமைந்தன, எ-று.

(வி-ரை.) ஒருவனை யிகழ்ந்தால் பிறர் இவனை யிகழ்வார்கள்; இதஞ்சொல்லுகிறவனே சிறந்தவனாகிறான்; சத்தியத்தோடு கைக்கொள்ளவேண்டியது தருமமே; பல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து சகல பதார்த்தங்களையும் ஒருநூற்பொருளையும் நிச்சயிக்கவேண்டுமென்பதாம்.

பொருளது: குறிப்புமுற்று; பொருள் என்பதும் அப்படியே, பன்மை. (௫ந)

யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

(ப-ரை.) யாறு-நதிகள், உள் அடங்கும்-தம்முள் அடங்குகின்ற, குளம் உள - பெருங்குளங்கள் உள்ளன; வீறுசால் - எல்லாப் பெருமைகளும் நிறைந்த, மன்னர் - அரசர், விழையும் - விரும்பித் தழுவும், குடி உள-குடிகளுள்ளன; தொல் மரபின்-பழமையாகிய முறைமையையுடைய, வேதம் - வேதத்தின்பொருள், உறுவன - பொருந்து

வனவாகிய, பாட்டு உள - செய்யுள்களுள்ளன, வேள்வியோடு ஒப்ப - யாகத்தோ டொப்பனவாகிய, வேளாண்மை உள-ஈகைகள் உள்ளன; எ-று.

(வி-ரை.) ஊராமுழுதும் அடங்கத்தக்க குளமிருப்பதுபோல் அரசரும் மேம்பட்டதென விரும்பும்படியான குடித்தனமுமிருக்கும். "அரசறிய வீற்றிருந்தவாழ்வும்" அரசரே மேலென்று மதிக்கவேண்டாம், அதிலும் விசேஷமான குடித்தனமும் உண்டென்றபடி. வேதமே விசேஷமல்ல, அதற்குச் சமானமான பெரியோர்செய்த நூல்களுமுண்டாகையால் அவற்றையும் மேன்மையாகக்கொண்டாடுக என்றாராயிற்று. வேள்வியே தேவர்க்குப் பிரியமான செய்கையென்று எண்ணவேண்டாம்; காலத்தில் தக்கபாத்திரங்களுக்குச் செய்யுமுபகாரங்களும் தேவர்க்கு மிகவும் பிரியமானவைகளாம்: ஆதலால், அப்படிப்பட்ட உபகாரங்களைச் செய்யவேண்டும் என்பதாம்.

சால் : உரியடியாகவந்த வினைத்தொகை, உரியாகக்கொண்டு உரித்தொடர் என்பது சேர்வழி. உள: பலவின்பால் குறிப்புமுற்று; உள் - பண்படி, பகுதி; அ - விகுதி. ஒப்ப பலவின்பாற்பெயர்; ஒ - பகுதி, ப் - சந்தி, ப் - இடைநிலை, அ - விகுதி. (ருச)

எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பான்
ஒருதொடையான் வெல்வது கோழி—உருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணொன்ப சேனைச்
செறிவுடையான் சேனு பதி.

(ப-ரை.) எருது உடையான் - மிக்க உழுமாடுகளுடையான், வேளாளன் - வேளாளனாவான்; ஒரு தொடையான் - ஒரு தொடையின் வல்லமையாலே, வெல்வது - வெல்ல வல்லதாகிய, கோழி - சேவல்போல, ஏலாதான்-(ஒருவரது பகையை) ஏற்றுக்கொள்ளாத

வன், பார்ப்பான் - பிராமணனாவான்; உருவோடு - (கணவன் விரும்பத்தக்க) உருவத்தோடு, அறிவு உடையாள் - (இல்லறவொழுக்கத்தை) அறிதலுடையவள். இல்வாழ்க்கை - இல்வாழ்க்கைக்குரிய, பெண் என்ப - பெண்ணென்று சொல்லப்படுவாள்; சேனை - (போர்முகத்தில்) தன்படையை, செறிவு உடையான் - விட்டு நீங்காமையை உடையவன், சேனாபதி - படைத்தலைவனாவான், எ-று.

(வி-ரை.) உழுது வேளாண்மைசெய்யு மியல்பையுடையவனே வேளாளனாவான்; அதுபோல், வீண்பகைகொண்டு வெல்லத்தலைப் படாமல் யாரிடத்தும் சாந்தமாயிருப்பவனே பார்ப்பானாவான் ; அழகும் விவேகமுமுள்ள பெண்ணே இல்லறத்துக்கு இசைந்தவள் ; சேனைகளெல்லாம் தன்மேல் பிரியமாயிருக்கும்படி நடந்துகொள்பவனே சேனாபதியாவனென்பதாம்.

கோழி என்பதோடு போல என்பது சொல்லெச்சமாச் சேர்க்கப்பட்டது; இவ்வுவமையை ஏலாதான் என்பதின் பகுதியாகிய ஏல் என்பதோடு கூட்டுக. ஆகவே கோழி பகையேற்பதுபோல் பகையேற்பது இல்லாதவன் எனப் பொருள்கூடும். தொடு - பகுதி, ஐ - தொழிற்பெயர்விகுதி. தொடுதல் - பரிசித்தல், சம்பந்தம் என்பதாம். கோழிபோல் வெல்வதை ஏலாதான் எனவுங் கூட்டலாம். ஒரு என்பது எதுவோவொன்று எனக் காரணமாகாததைக் காரணமாகக்கொண்டு என்னுங் கருத்தைப் பயந்தது. ஒருதொடையானும் என உம்மைவிரித்துப் பொருள்கூறலும் அமையும். 'ஏருடையான் வேளாளனேலாதான் பார்ப்பானும்,' நேருடைய வெல்வது எனவும் பாடம். எதிர்த்துவருவனவற்றை வெல்லுகின்ற எனப் பொருள் கூறுக. என்ப என்பதை எல்லாவற்றோடுங் கூட்டிக்கொள்க; பலர்பால்முற்று; என் - இடைச்சொல் பகுதி, ப - விகுதி, இதுவே காலங்காட்டும் (நன் - பதவி - ௯ - ௧௮). (௫௫)

யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமாக் காதலித் தூர்வர் கொடுங்குழைய
நல்லாரை நல்லவர் நாணுவப்ப ரல்லாரை
அல்லா ருவப்பது கேடு.

(பொ-ரை) யானை உடையார் - யானையை ஆளுதலுடையவரசர், கதன் உவப்பர் - (போர்முகத்தில் அதனது) கோபித்தலை மகிழ்வார்; மன்னர்-அரசர், கடு பரிமா-(ஓடுதலில்)வேகமாகிய குதிரையை, காதலித்து - விரும்பி, ஊர்வர் - நடத்துவார்; கொடு குழைய - வளைவாகிய காதணியணிந்த, நல்லாரை - சிறந்த அழகுடைய மாதரை, நல்லவர்-நற்குணமுடையார், நாண் உவப்பர்-(அம்மாதரிடத்துள்ள) நாணமென்னுங் குணத்தினால் மகிழ்வார்; அல்லாரை-தீயாரிடத்து, அல்லார் - தீயோரால், உவப்பது - விரும்பப்படுவது, கேடு - கேட்டைத்தருஞ் செய்கையாம், எ-று.

(வி-ரை.) யானைக்காரர் அதன் சவுரியத்துக்குச் சந்தோஷப்படுவர்; அரசர் மிகுந்த வேகமுள்ள குதிரையேற விரும்புவர் ; என்றால், சாதாரணமான ஜனங்கள் அதனால்வரும் நன்மைதீமைகளை யோசியாமல் தங்கள் மனத்துக்கு ஒத்த கொடுஞ்செய்கைகளையும் உகந்து கொள்வார்களென்பதாம். அயல் மனையாளை விரும்பாத உத்தமகுணமுள்ளவர் அப்பெண்கள் பிறரைக்கண்டால் நாணி நடப்பதற்குச் சந்தோஷப்படுவர்,அப்படியல்லாத துஷ்டர் நாணமின்றி அயல்மனைவிகள் தங்களோடு பேசுவதைச் சந்தோஷிப்பர். இது இவ்விருவர்க்கும் இம்மைக்கு மறுமைக்குங் கேட்டைத் தருவதாம் என்றபடி.

கதம் - கதன், போலி. உவ - பகுதி, அர் - விகுதி. பகரங்கள் சந்தியு மிடைநிலையும். உக என்கிற பகுதியுமுண்டு; உகப்பர் என வரும். கொடுங்குழைய: குறிப்புப்பெயரெச்சம். கொடுங்குழை: பண்புத்தொகை, பகுதி, பொருள்; அ-விகுதி, ய் - உடம்படுமெய் (நன் -

வினை - ரு - உ) நல்லவர்: நல் - பகுதி, பண்படி; அ - சாரியை, வ் - உடம்படுமெய், அர் - விகுதி. நல்லாரை - நல்லாரிடத்து, வேற்றுமை மயக்கம்; அல்லது நல்லாரை அவர்கொண்டிருக்கும் நாணினால் உவப்பர் எனவு முரைக்கலாம். கேடு : ஆகுபெயர். (நிசு)

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
றுன்னிய கேளிர் பிறரில்லை மக்களி
னொண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளி
னெண்ணக் கடவுளு மில்.

(ப-ரை.) கண்ணில் சிறந்த - (உயிர்களுக்குக்) கண்ணைப்போல் மேம்பட்ட, உறுப்பு இல்லை - வேறு அவயவமில்லை; கொண்டானின் - (குலமகளுக்குக்) கணவனைப்போல, துன்னிய கேளிர் - நெருங்கிய உறவினர், பிறர் இல்லை - மற்றவரில்லை; மக்களின் - (தாய் தந்தையர்க்கு) நற்குணமுள்ள பிள்ளைகளைப்போல, ஒண்மைய ஆய் - ஒளியுளன ஆகி, சான்ற பொருள் இல்லை - நிறைந்த பொருள்கள் வேறில்லை; ஈன்றாளின் - (பிள்ளைகளுக்குத்) தாயைப்போல, எண்ணக் கடவுளும் இல் - (உயர்வாக) மதிப்பதற் குரியவளும் இல்லை, எ-று.

'கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியின்
றுண்ணிய வாய பொருளில்லை கொண்டானில்
றுன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளில்
என்னக் கடவுளு மில்.' எனவும் பாடம்.

(வி-ரை.) கண்ணைக்காட்டிலும் சிறப்பான அவயவமில்லாத போல் பெண்டிருக்குக் கணவனைக் காட்டிலு மேலான வுறவினரில்லை; ஆதலால், கணவனைக் கண்போலப் பாதுகாக்கவேண்மென்றதாயிற்று. தன் மக்களைப்போலத் தன் மனத்திற்குப் பிர

..ான பொருள் வேறொன்றுமில்லை. "தம்பொருளென்பதம்மக்கள்." தாயைக்காட்டிலும் தெய்வமும்வேறில்லை யென்பதாம். "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்." இப்படியே வேதத்திலுஞ் சொல்லப் பட்டிருக்கிறது. தெய்வத்தை வழிபடுவதுபோல் தாயையும் வழிபட வேண்டுமென்பது கருத்து. மற்றொருபாடத்தில் கல்விபோல் நட்ப மான சாரியங்களை அறிவிப்பது வேறில்லை யென்பதாம். மற்ற தெல்லாம் ஒன்றே.

'ஈன்றாளோடு என்ன' சமானமென்று சொல்லும்படி என்று உரைக்க. 'ஈன்றாளோடின்ன கடவுளுமில்' எனப் பாடங்கொள்ளு தல் நன்றாம். இன் உருபுகள் ஒப்புப்பொருளில் வந்தன. சான்ற- சால் என்னும் உரியடியாகப் பிறந்த பெயரெச்சம். (௫௭)

கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றென
உற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னார்.

(பா-ரை.) கற்றாரை காதலர் - கல்வி கற்றவர்களின்மேல் பிரிய மாயிருப்பவர், கற்றன்னர்-கல்வி கற்றவரோடொப்பர்; கண் ஓடார்- தாக்ஷிணியமில்லாதார், செற்றன்னர் - பகைவரோ டொத்தவர்; தெற்றென - தெளிவாக, உற்றது உரையாதார் - (தன் சினேகித ருக்கு) உண்மையைச் சொல்லாதவர், செற்றாரை சேர்ந்தவர் - பகை வரைச் சேர்ந்தவரே; புல்அறிவினார் - தீயசிந்தை யுள்ளவர்கள், உள்- உள்ளே, கரந்து - மறைந்து, பாம்பு உறையும்-பாம்புவாசஞ்செய்கிற, புற்று அன்னர் - புற்றுக்குச் சமானமானவர், எ-று.

(வி-ரை.) கற்றவர்மேல் அன்புவைத்தவர் தாம் கல்லாதாராயி னும் மற்றவர்போலவேயாவர்; உற்றவரிடத்தில் சிறிதும் தாக்ஷிணிய மில்லாதவர் அவர்களுக்குப் பகைவரோடு சமானமானவராவர்; நேசி

த்தவருக்கு இதஞ் சொல்லாதவரும் பகைபோடு சேர்ந்தவரேயாவர்; துஷ்ட எண்ணங்களை உட்கொண்டு மேலுக்குத் தோன்றாதவர்கள் உள்ளே பாம்புகளிருக்கிற புற்றைப்போன்றவர் என்று நால் வகையாகப் பிரித்துக் கருத்துக்கொள்க.

கற்றவர் அன்னார் கற்றன்னார் எனத் தொகுத்தலாயிற்று. கற்றார் என்பதே விரித்தலாலே கற்றன்னார் என்றாயிற்றெனவுங் கொள்ளலாம். அப்படியானால் 'கற்றனர் கற்றாரைக் காதலவர்' என்றே யிசைக்கலாம். செற்றன்னார் என்பது மிப்படியே. "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்." (ருஅ)

மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

(ப-ரை.) மாண்டவர் - (அறிவால்) மாட்சிமைப்பட்டவர், யாண்டும் - எக்காலத்தும், மாண்டவினை - மாட்சிமைப்பட்ட செய்கைகளை, பெறுப - செய்யப்பெறுவர்; வேண்டாதார் - (நல்வினையை) விரும்பாதவர், வேண்டா வினையும் -(தாமால்) வேண்டப்படாத தீவினை ப்பயனையும், பெறுப - பெறுவார்கள்; பிறப்பார் - பிறப்பவர், பிறப்பு - அப்பிறப்பில் செய்த, ஆர் அறன்-அருமையாகிய அறத்தினால், இன்பு உறுவர் - (மறுமையில் தேவராய்) இன்பத்தை அடைவர்; துறப்பார் - (யானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையும்) துறப்பவர், துறக்கத்தவர்-முத்தியுலகத்தாராவர், எ-று.

(வி-ரை.) யோக்கியர் நற்கருமப்பயனை யடைவர்; மற்றவர் தீவினைப்பயனைப்பெறுவர்; நற்கருமங்களும் ஒருவிருப்பத்தாற்செய்தால் பிறப்புக்கு ஏதுவாகையால் அப்படிப்பட்ட கருமங்களைச் செய்பவரும் சொர்க்கபோகம் அநுபவித்துப் பின்பு பிறக்கவே பிறப்பார்கள்; அப்

படிப்பட்ட கருமங்களைத் துறந்து மோக்ஷத்துக்கு உரிய நிஷ்டை பெற்றவர் மோக்ஷலோகத்தை அடைவார்கள் என்பதாம்.

'பிறப்பார் அறன்' என்பதற்குப் பிறக்கும்படியானவர் செய்யத் தக்க அறன் எனவு முரைக்கலாம். 'துறக்கம்' என்பது இவ்வுலகத்தைத் துறந்தவிருல் அடையத்தக்க வுலகத்துக்கு வந்ததனுல், முக்கியமானதுபற்றி ஈண்டு மோக்ஷலோகமெனக் கொள்ளப்பட்டது. சொர்க்கம் என்பதற்கும் இப்படியே பொருள் கொண்டிருக்கின்றனர். தேவலோகம் என்றாலும் மேலான தேவனுடைய லோகம் என்பதே சரியான பொருள். (௬௬)

என்று முளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கும்—என்றுங்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாரும்
சாவாரு மென்று முளர்.

(ப-ரை.) என்றும் - எக்காலத்தும், நாளும் - நாண்மீன்களும், இருசுடரும் - சந்திரனும் சூரியனும், உள ஆகும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்தும், பிணியும் - (தொழிலுண்டாகாமைக்குக் காரணமாகிய) நோயும், தொழில் - (உழவுமுதலிய) தொழிலும், ஒக்கும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்தும், கொடுப்பாரும் - (ஒளிக்காமல்) கொடுப்பவர்களும், கொள்வாரும் - ஏற்போரும், அன்னர் - உளர் ஆவர்; என்றும் - எக்காலத்தும், பிறப்பாரும் - பிறப்பவர்களும், சாவாரும் - இறப்பவர்களும், உளர்-உளர் ஆவர், எ-று.

(வி-ரை) சிருட்டிகாலமுதல் பிரளயகாலம் வரையில் மாறாமல் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் இருப்பதுபோல் மனிதருக்குப் பிறப்பும் இறப்பும் பிணி முதலியனவும் அவர்களுடைய பலவகைப்பட்ட தொழில்களும் என்றும் வெள்ளம்போ லிடையறா திருப்பனவே யாதலால் அவைகளைப்பற்றிச் சந்தோஷத்தையும் விசனத்தையும் அடையவேண்டாம் என்பதாம்.

'இருசுடரும்' என்பது கிரகங்களுக்கெல்லாம் உபலக்ஷணம். உபலக்ஷணமாவது: ஒன்றினால் அதன் இனங்களைக் கொள்வது. ()

இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்
இனிய னெனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா வொழுக்கத் தவன்.

(ப-ரை.) இனிது உண்பான் என்பான் - நல்லுணவை உண்பவ னென்று சொல்லப்படுவான், உயிர் கொல்லாது - பிற உயிர்களைக் கொல்லாமையாலாகிய உணவை, உண்பான் - உண்டுவாழ்பவன்; முனிதக்கான் என்பான்-(யாவராலும்) வெறுக்கத்தகுந்தவனென்று சொல்லப்படுவான், முகன் ஒழிந்து - முகமலர்ச்சியில்லாதவனாகி, வாழ்வான் - வாழ்பவன்; தனியன் எனப்படுவான் - துணையில்லாதவ னென்று சொல்லப்படுவான், செய்த நன்று இல்லான் - (பிறர்க்கு) உபகாரஞ் செய்தலில்லாதவன்; இனியன் எனப்படுவான் - நல்லா னென்று சொல்லப்படுவான், யார் யார்க்கே ஆனும் - எவரெவரிடத்தே ஆனாலும், முனியா - வெறுக்கப்படாத, ஒழுக்கத்தவன் - நடையையுடையவன், எ-று.

(வி-ரை.) ஒரு பிராணியை வதைத்துத் தின்னாமையே நல்ல வுணவாம்; பிறரைக்காண முகமலர்ந்திராமல் முகக்கோட்ட முடையானை யாவரும் வெறுப்பார்கள்; இவ்வுலகத்தில் எந்தத்துணையைத் தேடினும் மறுமைக்குரிய நல்லறந் தேடாதவன் துணையற்றவனே யாவான்; யாரிடத்தும் கோபமின்றிச் சாந்தமாய் நடக்கவல்லவன் யாவருக்கும் இஷ்டனேயாவான் என்றது.

ஆயினும் என்பது ஆனும் என இடைக்குறையாயிற்று. முனியா ஒழுக்கம் - முனியாமையாகிய ஒழுக்கம், பொய்யாவிளக்கம்

என்பதுபோல். முனிதக்கான் முனிய என்பது ஈறுதொக்கது; அல்லது, முனி: முதனிலைத்தொழிற்பெயர். முனிதற்குத் தக்கான் என நான்கனுருபு தொக்கதாக் கொள்ளலாம். "அவன் முகங்கொடுத்தான், முகங்கொடுக்கவில்லை" என்பதுபோல் "முகன் ஒழிந்து" என்பதும் வழக்கு. (கூக)

ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் காங்கி யெனப்படுவான்—தெற்ற
நகையாகு நண்ணார் முற்சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

(ப-ரை.) ஈத்து - (வறியார்க்குக்) கொடுத்து, உண்பான் என்பான் - (தானும்) அநுபவிப்பவனென்று சொல்லப்படுவோன், இசை நடுவான்-புகழை நிறுத்தவல்லவன்; அவன் கைத்து - அந்தக் கொடுப்பானுடைய பொருளை, உண்பான்-உண்பவன், காங்கி எனப் படுவான் - குடம்போலுஞ் சுதந்தரமில்லான் அல்லது பிறர்பொருள்மேல் ஆசையுள்ளான் என்று சொல்லப்படுவான்; நண்ணார்முன்-பகைவரிடத்து, சேறல் - (ஒருவன் நட்பை விரும்பிச்) செல்லுதல், தெற்ற நகை ஆகும் - (பிறர் தன்னைத்) தெளிய அவமதித்துச் சிரித்தற்குக் காரணமாகும்; பாடு - (பிறருடைய) வறுமைத்துன் பத்தை, அறியாதானை-உணரமாட்டாதவனிடத்து, இரவு-இரத்தல், பகை ஆகும் - இரப்போனுக்கு விரோதமாகும், எ-று.

(வி-ரை.) பிறர்க்குக்கொடுத்து உண்பவனுக்குக் கீர்த்தியுண்டு; அவன் கொடுப்பதை வாங்கி யுண்பவனுக்குப் பிறர்பொருளை யிச்சிக்கிறவன் என்கிற அபகீர்த்தியுண்டு; அப்படி இரப்பதிலும் தன்மேலன்பில்லாதவரிடத்துச் சென்று இரப்பது இகழ்ச்சிக்குக் காரணமாம்; தன் தகுதி யறியாதவரிடஞ் சென்று இரப்பதனால் அவன் தன்னை அவமதிக்கநேரிடு மானதைப்பற்றித் தனக்கு அவன்மேல்

பகையுண்டாகும். எனவே கொடுப்பது மேன்மையேயன்றி யிரப்பது மேன்மையன்றெனவும், இரப்பதிலும் பகைவரிடத்தும் தகுதியறியாதாரிடத்துஞ் செல்லாமல் தகுந்தவரிடத்துச் செல்லவேண்டுமெனவுஞ் சொல்லியதாம்.

ஈந்து என்பது வலிந்து ஈத்து என்று ஆயிற்று; அல்லது சந்தியால் வந்த தகரம் மெலியாது நின்றதெனவுங் கொள்ளலாம். என்பான் என்பது எழுவாயின் சொல்லுருபு. காங்கி என்பது காங்க்ஷி என்னும் ஆரியத்தின் திரிபு. தெற்ற—தெற்று - பகுதி, அ - வினையெச்சவிகுதி. சேறல்—செல்-பகுதி, முதல் நீண்டது, தல்-விகுதி, (மெய் - கூ - உ௬) தகரம் றகரமாக லகரம் கெட்டது. நகை, பகை அதற்குக் காரணத்துக்கு ஆகுபெயர். (௬உ)

நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழற் சேர்ந்து
வழுத்த வரங்கொடுக்கு நாகம் தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து.

(ப-ரை.) நெருப்பு அழல் - தீயினது சுடர், நெய் விதிர்ப்ப - நெய்யைச் சிந்த, நந்தும்-ஓங்கும்; சேர்ந்து வழுத்த-சரணமடைந்து துதிக்க, நாகம் - தேவலோகம், வரம் கொடுக்கும் - இஷ்டத்தைத் தரும்; தொழுத்திறந்து - கொட்டிலைத்திறந்து, கன்று ஊட்ட-கன்றினைப்பாலுண்ணச்செய்ய, கறவை-கறக்கும்பசு, நந்தும்-பால்பெருகும் அல்லது களிக்கும்; கலம் பரப்பி-உண்கலத்தை விரித்து, நன்று ஊட்ட - இனிமையாக உண்பிக்க, விருந்து - விருந்தாகவந்தவன், நந்தும் - மனங்களிப்பான், எ - று.

(வி-ரை.) நெய்பெய்தால் நெருப்புவளர்ந்து விளங்குவதுபோல் தேவர் தம்மைத் துதிக்கத் துதிக்கப் பிரசன்னராகி வரந்தருவர்;

கன்றின் வரவை எதிர்பார்த்திருக்கிற பசுவினிடத்துக் கன்றை விட்டவிட அப்பசுக்களிப்பதுபோல் விருந்தினனை நன்குபசரித்துப் போசனமிட அவன் களிப்பானென்பதாம்.

நாகம் என்பது இடவாகுபெயராய்த் தேவரை யுணர்த்தியது. நாகர் எனப்பாடமாயின் கொடுப்பர் என வினையை மாற்றிக்கொள்க. செய்யுமென்முற்று பலர்பாலுக்கு வருவதன்று (வினை - சூ - உகூ). உண் என்பது முதனீண்டு விகுதி பெற்று ஊட்டு எனப் பிறவினைப் பகுதியாயிற்று. நன்று என்னும் பண்புப்பெயர் ஊட்ட என்னும் வினைக்கு உரியாகின்றது. 'வரங்கொடுப்பர் தேவர்' எனறும், 'வரங்கொடுப்பா நாகர்' எனறும் பாடமுண்டு. (௩௯)

பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளின்
நிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும்.

(ப-ரை.) பழி இன்மை - (ஒருவர்) பழிக்கப்படுங் குணமிலரா யிருத்தலை, மக்களால் (அவருக்கு) நன்மக்களுளராயிருத்தலால், ஒருவன காண்க - ஒருவன் அறியக்கடவன்; கெழி இன்மை - (ஒருவர் தன்னிடத்து) நட்புரிமை இலராயிருத்தலை, கேட்டால்-தான் செல்வமிழத்தலால் அல்லது அவன் தனக்குச் செய்யும் கெடுதியால், (ஒருவன்) அறிக - ஒருவன் அறியக்கடவன்; ஆக்கம் - (ஒருவரது) நல்வினையை அல்லது செல்வ நிலைமையை, பொருளின் நிகழ்ச்சியால் - (அவரிடத்துப்) பொருளினது நீங்காமையினாலே அல்லது பொருள் வருமவழியால், (ஒருவன்) அறிக-ஒருவன் அறியக்கடவன், புகழ்ச்சியால் - (ஒருவன் பலராலும்) புகழப்படுதலாலே, போற்றாதார்-பகைவராலும், போற்றப்படும் - வணங்கப்படுவான், எ - று.

(வி-ரை.) ஒருவன் தனக்குப் பிறக்கும் பிள்ளைகள் நல்லவரா யிருந்தால் தான் பழிப்பில்லாதவனாவான்; அல்லது, நல்ல பிள்ளைகளைப் பெறுவதனால் பழிப்பில்லாதவனென்பதை அறியலாம்; ஒருவன் தனக்குக் கேடு செய்வதினால் அவன் சிநேகமில்லாதவனென்பதை யறியலாம்; ஒருவனுக்குப் பொருள் வரும்வழி நீதியுள்ளதா யிருப்பதனால் விருத்தியாவதை யறியலாம்; ஒருவன் கொடுப்பது முதலிய சற்குணங்களால் கீர்த்தி பெற்றிருப்பானாயின் அவனைப் பகைவரும் கொண்டாடுவர் என்பதாம்.

கெழுமை என்னும் பண்பு ஈறு கெட்டுவந்தது. 'செழுவின்மை' என்றும் பாடம். போற்றுதார் போற்றுதலை படுமே அடையும் எனவு முரைக்கலாம். (கூ௭)

கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றும் பெண்ணின்
உருவின்றி மாண்ட வுளவாம் ஒருவழி
நாட்டுள்ளு நல்ல பதியுள பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட்டே யுள.

(ப-ரை.) கண்ணுள்ளும் - (மக்களுடைய) கண்களிலும், காண்புழி - ஆராய்ந்தால், ஒருவழி - சிறுபான்மை, காதற்று - (கண்டோரால்) விரும்பப்படுங்கண், ஆம் - உளது; பெண்ணின்-பெண்களுள்ளும், உரு இன்றி-அழகிய உருவமில்லாதிருந்தும், (ஆராய்ந்தால் சிலரிடத்து) மாண்ட - மாட்சிமைப்பட்ட குணமுஞ் செய்கையும், உள - உண்டு; நாட்டுள்ளும் - நாடுகளிலும், நல்ல பதி-(ஆராய்ந்த சிறுபான்மை) நல்ல நாடுகள், உள - உண்டு; பாட்டுள்ளும் - பாட்டுகளிலும், பாடு எய்தும் - (ஆராய்ந்தால் சிறுபான்மை) பேரழகு அமைந்திருக்கும், பாட்டே உள - பாட்டுகள் உண்டு, எ - று.

(வி-ரை.) ஒருவன் வெளிப்படையாகக்கண்கொண்டு பாராமல் உட்கண்ணால் பார்க்கும் பொருள்களிலும் அவன் இச்சித்த பொருள்

கள் உண்டு. அழகில்லாமற்போனாலும் குணமுள்ள பெண்களு முண்டு; எவ்வளவு கேடான ராச்சியத்திலும் ஒரு நல்ல இடமிருக்கும்; ஒருவன் சீரின்றிப்பாடிய பல பாட்டினுள்ளும் சில நல்ல பாட்டிருக்குமென்றபடி; ஆகவே எதையும் முழுதும் சாரமற்றதென்று நினைத்து அசட்டை செய்யாமல் ஆராய்ந்து சாரமறிய வேண்டுமென்பதாம்.

உம்மைகள் சிறப்புப்பொருளில் வந்தன. பாட்டே என்பதில் ஏகாரமும் சிறப்புப்பொருளில் வந்ததெனக் கொள்ளவேண்டும் 'பாட்டுமுள' எனப் பாடங்கொள்ளல் நன்று. (௬௫)

திரியழற் காணிற் றொழுப விறகின்
எரியழற் காணி னிகழ்ப—ஒரு குடியிற்
கல்லாது மூத்தானைக் கைவிடுப கற்றானின்
இளமை பாராட்டு முலகு.

(ப-ரை.) திரி-திரித்த நூலிலேற்றிய, அழல் காணின்-விளக்குச் சுடரைக் கண்டால், உலகு தொழுப-தேசத்தார் மதித்துக் கைகூப்புவர்; விறகின் - விறகினிடத்து, எரி அழல் காணின் - எரிகின்ற சுடரைக்கண்டால், இகழ்ப - அவமதிப்பர்; ஒருகுடியில் - ஒரு குடும்பத்தில், கல்லாது-(கல்வியைக்) கற்காமல், மூத்தானை-முதிர்ந்தவனை, (உலகு) கைவிடுப - தேசத்தார் ஏற்றுக்கொள்ளார்; கற்றானின் - கல்வியை யறிந்தவனிடத்துள்ள, இளமை - இளமைப் பருவத்தை, (உலகு) பாராட்டும்-தேசத்தார் மதித்து ஏற்றுக்கொள்வர், எ - று.

(வி-ரை.) திரியிலேற்றிய சுடரும் விறகிலேற்றிய சுடரும் இரண்டும் அக்கினியின் சொரூபமேயானாலும் நன்மை பயக்குங்குணம் பற்றிச் சனங்கள் சிறிதான தீபத்தைத் தொழுவதும் பெரிதானாலும் மற்றதை அப்படிச்செய்யாது இகழ்வதும்போல், ஒரே குடும்பத்

திற் பிறந்தவர்களில் சிறியவனானாலும் கற்றவனை மேற்கொள்ளுதலும் பெரியவனானாலும் கல்லாதவனைத் தள்ளிவிடுதலும் உலகத்தியல்பாயிருக்கின்றது என்பதாம்.

தீபத்தில் லக்ஷ்மியின்களை யுண்டென்றும் அதனைக் குர்பிட்டால் க்ஷேமமாகுமென்றும் சாஸ்திரஞ் சொல்லுகின்றது. இப்படி உலகத்தார் நடப்பதுமுண்டு. 'தொழுவர்' என்றும் பாடம். 'ஒரு குடியுள்' என்றும் பாடம், 'கல்லாத மூத்தோனை' என்றும் பாடம். 'கைவிடுப கற்றான்' என்றும் பாடம். "மூத்தோனைக் கைவிட்டுக் கற்றானிளமை பாராட்டுய" என்று பாடமோதின் நான்கு காரியம் சொல்லப்படாவாம். (௬௬)

கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழா நீருண்டே லுண்டாம் திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறி னுண்டாகு மற்றவள்
துன்புறுவ ளாயிற் கெடும்.

(ப-ரை.) கைத்து உடையான் - பொருளையுடையவன், காமுற்றது - விரும்பிய பொருள், உண்டாகும் - கிடைக்கும்; நீர் உண்டேல் - (தன்னிடத்து) நீருள்ளதாயிருந்தால், வித்தின் முளைக்குழாம் உண்டாம் - விதைகளினது முளைகளின் திரள் தோன்றும்; ஒள் செய்யாள் - அழகிய திருமகள், பார்த்து-(ஒருவனது நன்மையைக்) கண்டு, உறின் - சேர்ந்தால், திருக்குழாம்-பெருஞ்செல்வம், உண்டு ஆகும்-உண்டாகும்; அவள்-அத்திருமகள், துன்பு உறுவள் ஆயின் - (அவனது தீமையைப்பார்த்துத்) துன்பப்படுவாளானால், கெடும் - (அப்பெருஞ்செல்வம்) இலதாகும், எ - று.

(வி-ரை.) நீர்வளமிருந்தால் விதைகள் முளைப்பதுபோல திரவியமுண்டானால் நினைத்த காரியமெல்லாம் கைகூடும்; அந்தத் திரவியமும் திருமகள் கடாக்ஷமுண்டானால்தான் உண்டாகும்; அவள்

மனக்கோட்ட மடைந்தால் நாசமாகும்; என்றதனால் திருமகள் மனம் கோணுதபடி தீநடக்கையின்றி நன்னடக்கையைக் கைக்கொள்ள வேண்டு மென்றதாயிற்று.

பார்த்தறின் இதில் உறு துணைவினை. மற்று:அசை. 'உறவா ளாகில்' என்றும் பாடம். (௬எ)

ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லினு னின்புறூஉங் காலேயம் நெல்லின்
அரிசியா னின்புறுவர் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல்.

(ப-ரை.) ஊன் உண்டு - தசையையுண்டு, உழுவை - புலி கள், நிறம் பெறும் - (உடலின்) ஒளியை அடையும்; காலேயம் - பசுக்கூட்டம், நீர் நிலத்து - நீர்வளமுள்ள நிலத்தில் முளைத்த, புல் லினுன் இன்பு உறும் - புல்லினாலே சுகித்திருக்கும்; கீழ் எல்லாம் - கீழ்மக்களெல்லாம், நெல்லின் அரிசியான்-நெல்லிலுண்டாகிய அரிசி யினுல், இன்பு உறுவர் - உள்ளமகிழ்வர், மேல் - மேன்மக்கள், தத் தம் - (பிறரால் செய்யப்படும்) தத்தமக்குரிய, வரிசையான் - முறை யாகிய உபசாரத்தினுல் அல்லது கிரமமான செய்கைகளால், இன்பு உறும் - உள்ள மகிழ்வர், எ-று.

(வி-ரை.) மாமிசந்தின்று புலி களிக்கும் என்பது பிறர்க்குத் தீங்குசெய்து துஷ்டர் களிப்பார்கள் என்பதைக் குறிப்பிக்கும்;நல்ல புல்லைத்தின்று மாடுகள் களிப்பதுபோல் அரிசி அகப்பட்டால் கீழ் மக்கள் அதைத்தின்று அவ்வளவோடே களித்திருப்பார்களே யன் றித் தாம் நடக்கவேண்டிய வொழுங்கைச் சிந்திக்கமாட்டார்கள்; மேன்மக்களோ உணவு முதலிய வுலகவாழ்க்கைகளைக்கொண்டு களி யாமல் தாம்செய்யவேண்டிய நற்செய்கைகளைச்செய்து சந்தோஷிப் பார்க ளென்றபடி.

அளபெடைகள் இன்னிசைக்கு வந்தன. கீழ், மேல்: ஆகுபெயர்கள். 'அரிசியானின்புறாஉம்' என்றும் பாடம். (௬அ)

பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை யென்பெறினு
முன்னவா முன்ன மறிந்தார்கட்—கென்னும்
அவாவா மடைந்தார்கட் குள்ளந் தவாவாம்
அவாவில்லார் செய்யும் வினை.

(ப-ரை.) பின் - (செய்யத்தொடங்கிய) பின்பு, அதிர்க்கும் - நடுக்கத்தைத் தருகின்ற, செய்வினை - காரியங்கள் அல்லது செய்யப்படும் தொழில்கள், பின்ன ஆம் - (ஆராய்ந்து துணியாதார்க்கு) - பின்தோன்றுவன ஆகும்; என் பெறினும் - பெரும்பயனை அடையக்கூடுமாயினும், முன்னம் - (செய்யத்தொடங்கும்) முன்னே, அறிந்தார்க்கு - ஆராய்ந்து துணிந்தவர்க்கு, முன்ன ஆம் - (அச்செய்வினைகள்) முன்னே தோன்றுவன ஆகும்; என்னும் - (பரம்பொருளல்லாத) எதன் விருப்பத்தையும், அடைந்தார்கட்கு - கொண்டவர்கட்கு, உள்ளம்-(அதுகாரணமாக) உள்ளத்தில், அவா ஆம்-(விட்ட) விருப்பங்கள் உண்டாகும்; அவா - அவ்விருப்பம், இல்லார் செய்யும் வினை - இல்லாத துறவிகள் செய்யும் துறவறத் தொழில்கள், தவா ஆம் - கெடாவாம், எ-று.

(வி-ரை.) முன்னதா யோசியாமற்போனால் துன்பந்தரத்தக்க காரியங்கள் முன்தோன்றாமல் அனுபவிக்கும்போதுதான் தெரியும்; யோசிப்பவர்களுக்கோ முன்னிட்டே தோன்றுமாகையால் அவர்கள் துன்பமடையார்கள்; பொன் மண் முதலியவைகளை முயன்று அடைந்துகொண்டேயிருப்பவருக்கு மேன்மேல் ஆசைவளர்ந்து வருமேயல்லது கெடுவதில்லை; அப்படிப் பொருண்முயற்சி செய்யாமல் அறவினை செய்பவர்களுக்கு அவாக்கெட்டு மனம் சுத்தமாயிருக்கும்.

'பின்னவா முன்னார்க்குப் பின்னதிர்க்குஞ் செய்வினை' என்றும் பாடம். 'பின்னவர் பின்னதிர்க்கும்' என்றும் பாடம். பின்ன,

முன்ன இவை குறிப்புவினையாலணையும் பெயர்கள். குறிப்பு முற்றாகக்கொண்டால் ஆம் - அசை. பின், முன் - பகுதிகள், அ-விகுதி. முன்னார்: முன்னு-பகுதி, (யோசித்தல்), ஆர் - விகுதி; இது இடைநிலையின்றி வந்ததனால் எதிர்மறையை யுணர்த்தும்;எதிர்மறை ஆகாரம் புணர்ந்துகெட்டதெனவுங் கொள்ளலாம். தவா: தவு - பகுதி, ஆ - எதிர்மறைப் பலவின்பால் விகுதி (நன் - வினை - சூ - ௬0) "முற்றுமற்றொரோவழி' என்றதனால் உகரம் கெட்டது. (௬௯)

கைத்திலார் நல்லவர் கைத்துண்டாக் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரின்
நல்லர் சிதையா தவர்.

(ப-ரை) கைத்து - பொருள், உண்டு ஆக - உண்டாயிருக்க, காப்பாரின் - (பொருளாலாகும்பயனை அடையாமல்) அதைக்காப்பவரினும், கைத்து இலார் - அப்பொருளில்லாதவர், நல்லவர் - (உலகத்தாரால் பழிக்கப்படாமையால்) நல்லவராவர்; வைத்தாரின் - (பொருளை) வைத்து இறந்தவரினும்; வறியவர் - தரித்திரர், நல்லர் - (வைத்து இறவாமையால்) நலலவராவர், பைத்து எழுந்து - கோபித்தெழுந்து, வைதாரின் - நிந்தித்தவரினும், பொறுப்பவர் - (அந்நிந்தையைப்) பொறுத்துக்கொண்டிருப்பவர், நல்லர் - நல்லவராவர்; செய்தாரின் - உபகாரம் செய்தவரினும், சிதையாதவர் - அவ்வுபகாரத்தை மறவாதவர், நல்லர் - நல்லவராவர், எ-று.

(வி-ரை.) பணமிருந்தும் அதைத்தவரைக் காப்பாற்றுமலிருக்கிறவர்களைக் காட்டிலும் பணமில்லாதவர்களே யோக்கியர்; தானும் அனுபவியாமல் பணத்தைச் சும்மாவைத்து இழப்பவரைக்காட்டிலும் தரித்திரரே மேலானவர் (இவர்களுக்குப் பழிப்பில்லாமையாலென அறிக); ஒருவர் பொல்லாங்கு செய்ததைக்குறித்து அவரைத்

திட்டுவதினும் பொறுப்பது நல்லது; நூதனமாக வொருதருமகாரியத்தைச் செய்வதைப்பார்க்கிலும் ஒருவர்செய்த தருமகாரியத்தை அழிக்காமலிருப்பது நல்லது.

'கைத்தில்லார் நல்லராங் கைத்துண்டாய்க் காவாரின்' என்றும் பாடமுண்டு. வறியவர். வறுமை ஈ-றுபோய் உகர மிகரமானது பகுதி, அ - சாரியை, ய்-உடம்படுமெய், அர்-விகுதி. கைத்து: கை - பகுதி, (கோபித்தல்), த் - சந்தி, த் - இடைநிலை, உ - விகுதி. (எ0)

மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—அகனீர்ப்
பிலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

(ப-ரை.) மகன் - புத்திரன், தந்தை - தந்தையினுடைய, நலத்தை - நற்குணத்தை, உரைக்கும் - (தான் நற்குணமுடைமையால் பிறர்க்கு) அறிவிப்பான்; ஒருவன் முகன் - ஒருவனுடைய முகம், உள் நின்ற வேட்கை - (அவனது) மனத்திலுள்ள விருப்பத்தை, உரைக்கும் - (பிறர்க்கு) அறிவிக்கும்; அகல் நீர் - விசாலமான தன்மையையுடைய, பிலத்து இயல் - குகையின் குணத்தை, புக்கான் உரைக்கும் - (அதில்) இறங்கினவன் (பிறர்க்கு) அறிவிப்பான்; நிலத்து இயல்பு - ஒரு நிலத்தினது தன்மையை, வானம் - மழையானது, உரைத்துவிடும் - சொல்லிவிடும், எ-று.

(வி-ரை.) மகன் அயோக்கியனாயிருந்தால் அவன் தகப்பனும் அயோக்கியனா யிருப்பானென்று ஊகிக்கலாம்; உள்ளே ஒருவனுக்கிருக்கிற ஆசையை அவன் முகக்குறியால் அறியலாம்; குகையிற் போனவனுடைய சுகாசுகங்களால் குகையின் தன்மையை அறியலாம்; மழைபெய்தபோது தண்ணீர் தங்காமலும் பயிர்செழிக்காமலுமிருப்பதனாலே தீயநிலமென்றும், நீர்தங்கியும் பயிர்செழித்தும் வரு

வதருல் நன்னிலமென்றும் அறியலாமென்றவாறு. இவை இரண்டும் உபமானம்.

'அகனீர்ப்பிலத்தியல்பு புக்கானுரைக்கும்' என்னும் தொடருக்கு, பரவின நீரையுடைய பள்ளத்தினது நிலையை என்றுரைப்பினுமாம். 'புலத்தியல்பு' என்றும் பாடம். 'நிலத்தியல்பு' வானமுரைத்து விடும்' என்னும் தொடருக்கு, நிலத்திலுள்ள மக்களது தன்மையை மழையானது (பெய்தும் பெய்யாதும் அவர்க்கு) அறிவிக்கும் என்று பொருள் கூறினுமமையும். (வினை - கு - உக - தினல் உரைக்கும் என்பது ஆண்பாலுக்கு வந்தது) முகன்: போலி. (எக)

பதிநன்று பல்லா ருறையி னொருவன்
மதிநன்று மாசறக் கற்பின்—நுதிமருப்பின்
ஏற்ருன்வீ றெய்து மினநிரை தான்கொடுக்கும்
சோற்ருன்வீ றெய்துங் குடி.

(ப-ரை.) பல்லார் - (முயற்சியுடைய) பலகுடிகள், உறையின் - வசித்தால், பதி நன்று - நாடு சிறப்புடையதாகும்; மாசு அற - (விபரீதம் ஐயம் ஆகிய) குற்றமில்லாமல், கற்பின் - (கற்கத்தகும் நூல்களைக்) கற்ருல், ஒருவன் மதி நன்று - ஒருவனது அறிவு தெளிவுடையதாகும்; நிரை இனம் - பசுக்கூட்டம், நுதி மருப்பின் - கூர்மையாகிய கொம்புகளையுடைய, ஏற்ருன் - ரிஷபத்தினுலே, வீறு எய்தும் - (அச்சமில்லாமல்) தைரியத்தை யடைந்திருக்கும்; குடி - தன்குடும்பம், தான் கொடுக்கும் - (முயற்சியுடைய ஒருவன்) தான்கொடுக்கின்ற, சோற்ருன் - உண்டியினுல், வீறு எய்தும் - பெருமையடைந்திருக்கும், எ-று.

(வி-ரை.) அனேகர் குடியிருக்கிறவூர்தான் வாசத்துக்குத் தக்க விடம்; நன்ருய்க் கல்வி கற்ருல்தான் புத்தி தெளிவாயிருக்கும்; நல்ல

விருஷபங்களை என்றால் பசுமாடு பெருமையாகக் கொள்ளப்படும், அல்லது நல்ல விருஷபங்களைச் சேர்ந்தால் நல்ல கன்றுகளைப் பெற்றுப் பசுமாடு பெருமையடையும்; அன்னதானஞ் செய்வதனால் ஒரு குலம் பெருமைபெறு மென்றவாறு. வீறு: முதனிலைத்தொழிற் பெயர். (எ௨)

ஊர்ந்தான் வகைய கலினமா நேர்ந்தொருவன்
ஆற்றல் வகைய தறஞ்செயல் தோட்ட
குளத்தனைய தூம்பி னகலங்க டத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு.

(ப-ரை.) கலினமா - கடிவாளம்பூண்ட குதிரைகள், ஊர்ந்தான் - (தம்மேல்) ஏறிநடத்துவோனுடைய, வகைய - (நடத்தும்) வகைக்கிசைந்தன ஆம்; அறம் செயல்-தருமகாரியத்தைச்செய்வது, ஒருவன்—,நேர்ந்து-(செய்ய) உடன்பட்டு, ஆற்றல் வகையது - செய்யுந்திறத்திற்குத் தக்கதாயிருக்கும்; தூம்பின அகலங்கள்-தூம்புகளினுடைய அல்லது நீர்க்கால்களின் விரிவுகள், தோட்ட - தோண்டப்பட்ட, குளத்து அனைய - குளங்களின் அளவின ஆம்; வாழ்வார் - (இல்லாளோடு கூடி) வாழ்வாரது, வழக்கு - செய்கைகள், தத்தம் வளத்து அனைய - வருவாயின் அளவின ஆம், எ-று.

(வி-ரை.) ஏறிச்செலுத்துகிறவனுடைய சாமர்த்தியத்திற்குத் தக்கதாய் நடக்கும் குதிரைகள்; ஒருவன் செய்கிற நேர்மையின்படி சிறந்திருக்கும் தருமங்கள்; நீர் தங்கியிருக்கிற ஏரிக்கு ஏற்றதாயிருக்கும் வாய்க்கால்களின் பரப்பு; இப்படியே அவரவருடைய வளத்துக்குத் தக்கபடியிருக்கும் அந்தந்தக் குடும்பத்தாருடைய காரியங்கள். (காரியங்களாவன: தம்முடைய சுகத்துக்குச் செலவு செய்வதும் பிறருக்குக் கொடுப்பதும்.)

வகைய முதலானவை குறிப்புமுற்றுக்கள். தொட்ட : தொடு- (தோண்டுதல்) பகுதி, அ - பெயரெச்சவிகுதி, டகரமிரட்டி இறந்த காலங் காட்டிற்று. வழக்கு - (வழங்குதல்) முதனிலை வலிந்துநின்ற தொழிற்பெயர். மா என்கிற பலபொரு ளொருசொல் இங்கு கலி னம் என்கிறதினுல் குதிரைக்கு வந்தது. இது குறிப்புச்சொல் (பொது - சூ - ௩௧, பெயர் - சூ - ௪௨). (௭௩)

ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமும்
நாழிகை யானே நடந்தன—தாழ்வியாத்
தெற்றென்ருர் கண்ணே தெளிந்தனர் வெற்றென்ருர்
வெஞ்சொலா லின்புறு வார்.

(பு-ரை.) ஊழியும் - யுகமுடிவுகளும், ஆண்டு எண்ணி-வருடங் களாய் எண்ணப்பட்டு, யாத்தன - அளவு செய்யப்பட்டன; யாம மும் - சாமப்பொழுதும், நாழிகையானே - (ஏழை) நாழிகையினு லேயே, நடந்தன - (அளவு செய்யப்பட்டு) கழிந்தன; தாழ்வியா - காலத்தை நீட்டிக்காமல், (விரைவில்) தெற்றென்ருர் கண்ணே - தெளியப்பட்டவரிடத்திலேயே, தெளிந்தனர் - (நல்லோர்) ஐயப் படார்; வெற்றென்ருர் - அறிவாகிய பயனில்லாதவர், வெம் சொ லால் - (பிறரை வைத) கடுஞ்சொறகளினுல், இன்பு உறுவார்-உள்ள மகிழ்வார், எ - று.

(வி-ரை.) மகாகாலமென்று சொல்லப்படுகிற யுகமும் வருஷம் வருஷமாய் எண்ணக் கழிந்தேபோகின்றது; அது பிரத்தியக்ஷமாகா மற்போனுலும் பிரத்தியக்ஷமான தினமென்கிற ஒரு சிறுபொழுதும் நாழிகை நாழிகையா யெண்ணக் கழிந்துபோகின்றது; இப்படியே நம்முடைய வாழ்நாளெல்லாம் முதலில் பெரிதாத்தோன்றியும் சிறிது சிறிதாய்க் கழிந்துபோகின்றன; இதை யெண்ணி நல்லவர் நல் லவரைத் தாமதியாமல் வழிப்பட்டு நற்கேள்விகள் கேட்டுத் தெளி

ந்து இன்பமாய்க் காலங்கழிக்கின்றனர்; தீயவரோ பிறர்மேல் வீணு கத் தீயசொற்களைச் சொல்லிச் சந்தோஷித்துக் காலங்கழிக்கின்ற னர் என்பது கருத்து.

யாத்தன: செய்வினை செயப்பாட்டு வினையாகக் கொள்ளப்பட் டது (பொதுவியல்-சூ-சகூ). யாத்தல் - கட்டல், அது இங்கே கழி தலுக்குக் குறிப்பாகநின்றது. யாமம் - இரவின்பெயர். அது "பஞ்ச ராத்திரம் - தசராத்திரம்" என்கிற வடநூல் வழக்கால் இனத்துக்கு ஆயிற்று. பின்னே தீயர் என்று வந்தபடியால் "பிறவிப் பெருங் கட னீந்துவர்" என்பதில் இறைவனடி சேர்ந்தார் என்பது போல் இங்கு நல்லவர் என்பது வருவிக்கப்பட்டது. 'தாழீயர்' என்றும் பாடம். 'தாழியர்' எனப் பாடங்கொண்டு தாழ்மை யானவர் பணிவுள்ளவர் என்று நல்லவருக்கு ஆக்குதலும் பொருந் தும். தாழ்: முதனிலைத் தொழிற்பெயர், பகுதி, இ - அதனையுடைய வன் என்னும் பொருளில்வந்த விகுதி, வில்லி யென்பதுபோல்; அர்: பன்மைவிகுதி, தாழா என்னும் வினையெச்சம் இகரச்சாரியை பெற்று தாழியா எனவந்தது என்று கொள்ளவேண்டும். 'வெட் கென்றார்' என்றும் பாடம், 'வெஞ்சொல்லா லின்புறுவர்' என்றும் பாடம். (எச)

கற்றான் றளரி னெழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேற் கான்முறியு மெல்லாம்
ஒருமைத்தாஞ் செய்த கருவி தெரிவெண்ணின்
பொய்யாவித் தாகி விடும்,

(ப-ரை.) கற்றான் - கல்வியறிவுடையான், தளரின் - (ஒரு காலத்தில்) தளர்ச்சியடைவானாயின்,எழுந்திருக்கும்-(அத்தளர்ச்சியி னின்று) நீங்குவான்; கல்லாத - கல்வியறிவில்லாத, பேதையான் - பேதையானவன், வீழ்வான் ஏல் - (தன்னிலையினின்றும்) தளர்ந்

தால், கால் முரியும் - (அதற்கு) ஊன்றுகோலாகிய முயற்சி கெடு வான் அல்லது கால் முறிந்துபோனதுபோல் மறுபடி அதினின்றும் தப்பி எழுந்திருக்கமாட்டான்; ஒருமை - ஒருபிறப்பிலே, தான் செய்த எல்லாம்-ஒருவன் செய்தன ஆகிய வினைகளெல்லாம், கருவி- (மறுமைப்பயனுக்கு அல்லது மறுபிறப்பில்வரும் இன்ப துன்பங் களுக்குக்) காரணங்களாகும்; எண்ணின் - ஆராயுமிடத்து, தெரிவு - (ஐயமில்லாமல் தெளிந்த) தெளிவு, பொய்யாவித்து - (முத்தியடை தற்கு) உண்மையாகிய காரணம், ஆகிவிடும் - ஆகாமற்போகாது, எ-று.

(வி-ரை.) கற்றவன் ஏதாகிலும் கிஞ்சித்து ஆசாரத்தில் வழுவி னால் வகைதெரிந்தவனாகையால் மறுபடி சரிப்படுத்திக்கொள்வான்; மூடனோ வகைதெரியாமல் கெட்டு நரகத்துக்கு ஆளாவான்; இப்படி நேரிடுவதெல்லாம் முந்திய பிறப்பிற் செய்த கருமவசத்தினாலேயே; இவைகளைக்குறித்து யோசித்துப் பார்த்தால், அவைகளுள் நற்கரு மத்தால்வந்த தத்துவவுணர்ச்சி மறுபடியும் இப்படித் துன்பங்க ளில்லாம லிருக்கும்படியான காரணம் என்றவாறு.

கால்முரியும் என்கிற சினைவினை கல்லாதான் என்கிற முத லைக்கொண்டது (வினை - சூ - உஅ). இம்மை, மறுமை, இருமை என்பவைபோல் ஒருமை என்பதிலும் மை விகுதி பிறப்பை யுணர்த் தியது, செய்த-பலவின்பாற்பெயர், கருவி என்னும் பெயர்கொண்டு முடிந்தது. 'தான்செய்த' என்றும் பாடம். 'வீயாவித்தாகிவிடும்' என் றும் பாடம். (எகு)

தேவ ரனையர் புலவருந் தேவர்
தமரனைய ரோரூ ருறைவார் தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றாரைக் காத லவர்.

(ப-ரை.) புலவரும் - அறிவுடையாரும், தேவர் அனையர் - தேவரை ஒப்பாவர்; ஓர் ஊர் - அவ்வறிவுடையோரிருக்கும் ஊரில், உறைவார் - வசிப்பவர், தேவர் - அத்தேவர்களுக்கு, தமர் அனையர் - உறவினரை ஒப்பாவர்; பேணி - (அவர் நட்பினை) பாதுகாத்துக் கொண்டு, ஒழுகுவார் - (அவர் குறிப்பின்படி) நடப்பவர், தமருள்ளாரும் - அவ்வுறவினருள்ளும், பெற்றன்னர் - (அப்புலவர்களது அறிவைப்) பெற்றாரொப்பர் அல்லது தேவாநுக்கிரகம் பெற்றவரோ டொப்பர்; கற்றாரை - அக்கல்வியறிவினரை, காதலவர் - விரும்புமாணாக்கர் அல்லது நேசிப்பவர், கற்றன்னர் - (எல்லா நூல்களையும்) கற்றாற்போல்வர் அல்லது கற்றவர்க்குச் சமானமாவர், எ-று.

(வி-ரை.) அறிவுவிளங்கினவர் தேவருக்குச் சமானமானவர்; (அறிவின் விளக்கத்தாலேதான் 'புதர்' என்கிறபெயர் இருவருக்கும் வந்தது); அவரோடு கூடியிருப்பவர் தேவரைச் சேர்ந்தவருக்குச் சமானமானவர்; அவர்களிலும் அப்புலவரை வழிபட்டவர்கள் தேவாநுக்கிரகம் பெற்றவரோ டொப்பர்; இப்படியே கற்றாரிடத்து அன்பு செலுத்துகிறவர் கற்றார்க்குச் சமானமானவர் என்பதாம்.

புலமை: மை கெட்டுநின்றது, பகுதி, அர்: விகுதி. பெற்றவரை அன்னர், கற்றவரை அன்னர் என்பவை 'பெற்றன்னர்' 'கற்றன்னர்' எனச் சில எழுத்துக்கெட்டு மருவிவந்தன. (௭௧)

தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே மருத்துவன்
சொல்லென்ற போழ்தே பிணியுரைக்கு நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக வதற்குரியான்
தாவெனிற் றாயம் வகுத்து.

(ப-ரை.) பொய் - (நட்புக்கொண்ட இருவரில் ஒருவனிடத்து) பொய், பிறந்தபோழ்தே - முளைத்தபோதே, தூர்ந்து அழியும் -

(நட்பாகிய பாத்தி) தூர்ந்துபோம்; மருத்துவன் - வைத்தியன், சொல் என்ற போழ்தே - (பிணியாளியை நோக்கி) சொல்லுக என்று கேட்டபோதே, பிணி உரைக்கும் - (அவன்) நோயைச் சொல்லு வான்; நல்லார் - நல்லறிவினர், விடுக என்ற போழ்தே - தீச்செயலை ஒழிக என்று சொன்னபோதே, விடுக - (அதை) ஒருவன் ஒழியக் கடவன்; உரியான் - பாத்தியதை யுடையவன், தருக என்னின் - (தன்பாகத்தைத்) தரக்கடவாயென்று கேட்டால், தாயம் வகுத்து - உரிமைப் பொருளைப் பங்கிட்டு, விடுக - (ஒருவன்) தரக்கடவன, எ-று.

(வி-ரை.) பொய்பேசினவுடனே சிநேகம் போய்விடும், ஆகை யால் நேசனோடு பொய்பேசலாகாது; வைத்தியன் சொல்லென்ற வுடனே பிணியாளி தன் உபத்திரவங்களைச் சொல்வதுபோல், பெரியோர் இந்தத் துராசாரங்களை விட்டுவிடு என்றபோதே விட வேண்டும்; அப்படியே பங்காளி பங்கிட்டுத்தா என்றவுடனே அவ னுக்கு உற்றதைப் பகிர்ந்து கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் மனஸ்தாபமும் வழக்கும் நேரிடு மென்பதாம்.

முதலிரண்டு வாக்கியங்களில் தகுதியால் சிநேகம் என்றும் பிணியாளி என்றும் எழுவாய்கள் வருவிக்கப்பட்டன. அல்லது இர ண்டாம் வாக்கியத்தில் பிணி என்பதையே பிணியாளனுக்கு ஆகு பெயராக்கிச் செயப்படுபொருளையாவது வருவிக்கவேண்டும். மூன் றும் வாக்கியத்துள்ள விடுக என்பது நாலாம் வாக்கியத்துள்ளும் கூட்டப்பட்டது. மருந்து கொடுப்பவன் மருத்துவன். மருந்து : பகுதி, அன் : விகுதி, குற்றியலுகரம் கெடாமையை "மெய்விட் டோடும்" என்பதனால் அமைத்துக்கொள்ளவேண்டும் (உயிர் - சூ - கஅ - உரையைக்காண்க). மென்றொடர் வன்றொடரானது (உயிர் - சூ - ௬௯). தாயம் ; வடசொல். (௭௭)

நாக்கி னறிப வினியசுவை மூக்கினான்
மோந்தறிப வெல்லா மலர்களு நோக்குள்ள
கண்ணினாற் காண்ப வணியவற்றைத் தொக்கிருந்
தெண்ணினா னெண்ணப் படும்.

(ப-ரை.) இனியவை - சுவையுடைப் பொருள்களை, நாக்கின் - நாக்கினால், அறிப-(யாவரும்) அறிவார்கள்; எல்லாமலர்களும்-எல்லா நன்மலரின் மணத்தையும், மூக்கினால் மோந்து அறிப - மூக்கினால் மோந்து அறிவார்கள்; அணியவற்றை - அழகுள்ள பொருள்களை, நோக்கு உள்ள - காணுந்தொழிலமைந்த, கண்ணினால் காண்ப-கண்களினால் காண்பார்கள்; தொக்கு இருந்து - (அறிவுடையோர் பலரோடு) கூடியிருந்து, எண்ணினான் - கருத்தினால் அல்லது புத்தியினால், எண்ணப்படும் - (கருத்துப்பொருள்) ஆராய்ந்தறியப்படும் அல்லது (காணக்கூடாத பொருள்களை) எண்ணவேண்டும், எ-று.

(வி-ரை.) நாக்கினால் உருசியையும், மூக்கினால் புஷ்பவாசனையையும், கண்ணினால் அலங்காரங்களையும் அறிவதுபோல், செய்யத்தக்க காரியங்களைப் பலரோடு சேர்ந்து ஆலோசித்துப் புத்தியால் அறியவேண்டும் என்பதாம்.

நோக்கக் கருவியாயிருப்பதுநோக்கு, அம்-விகுதி சேர்ந்து கெட்டது. 'உள்ளும்' உள்ளப்படும், நோக்கென்று உள்ளப்படுகிற. அணியப்படுவன அணி, செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. அல் என்னும் பன்மைச் சுட்டுப்பெயர் பிறபெயர்களோடு அசைநிலைபோல் சேர்வதுண்டு. இது எழுவாயுருபு என்பாருமுளர். "குணமது கைவிடேல்" எண்ணப்படும், இதுவும் வியங்கோளாம். (எஅ)

சாவாத தில்லை பிறந்த வுயிரெல்லாந்
தாவாத தில்லை வலிகளும்—மூவா

இளமை யிசைந்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்றாரு மில்.

(ப-ரை.) பிறந்த உயிர் எல்லாம் - பிறந்த எல்லா வுயிர்களிலும், சாவாத இல்லை - சாகாதவை இல்லை; வலிகளும் - வன்மைகளிலும், தாவாத இல்லை-கெடாதவைகளில்லை; மூவாது - மூத்துக்கழியாமல், இளமை இசைந்தாரும் இல்லை-இளமை நிலைக்கப்பெற்றவருமில்லை; வளமையில் - (பெற்ற) செல்வங்களில், கேடு இன்றி - (இடையே) அழிவை யடையாமல், சென்றாரும் இல்-முற்றும் அநுபவித்தவரும் இல்லை, எ - று.

(வி-ரை.) பிறந்தவர் சாகாமற்போவது மில்லை; எப்படிப்பட்ட வல்லமையும் அழியாமலிருப்பது மில்லை; என்றும் இளம்பிராயத்தோ டெவரு மிருப்பதுமில்லை; செல்வங்கெடாமலிருப்பது மில்லை; எனவே ஒன்றுஞ் சதமன்று, தருமமே சதமென்றதாயிற்று.

தாவாத—தா : பகுதி, ஆ : எதிர்மறை விகுதி, த் : எழுத்துப் பேறு, அ : பலவின்பால் விகுதி, சாவாதவு மிப்படியே. (எசு)

சொல்லா னறிப வொருவனை மெல்லென்ற
நீரா னறிப மடுவினை யார்கண்ணும்
ஒப்புரவி னானறிப சான்றாண்மை மெய்க்கண்
மகிழா னறிப நறா.

(ப-ரை.) ஒருவனை - ஒருவனது தன்மையை, சொல்லான் - (அவன் பேசும்) சொல்லினாலே, அறிப - (அறிவுடையோர்) அறிவார்கள்; மடுவினை - மடுவினது தன்மையை, மெல்லென்ற நீரான் அறிப - (அதிலுள்ள) நீரினாலே அறிவார்கள்; சான்று ஆண்மை - பல குணங்களாலும் நிறைந்து அவற்றையாளுந் தன்மையை, யார்

கண்ணும் - எவரிடத்தும், ஒப்புரவினுன் - (ஒப்ப நடக்கும்) உலக நடையினுல், அறிப - அறிவார்கள்; நறு - (ஒருவன்) மது உண்டமையை, மெய்க்கண்-(அவனது) உடலிற்றேன்றும், மகிழான்-களிப்பின் குறியால், அறிப - அறிவார்கள், எ-று.

(ப-ரை.) ஒருவனுடைய குணகுணங்களை யவன் பேச்சினுலும், மடுவின் யோக்கியதையை மெல்லிதான தண்ணீரினுலும் அறிவது போல எல்லாரிடத்திலும் ஒத்த நடைக்கையினுல் ஒருவனுடைய நற்குணமுடைமையையும், உடம்பு மதித்துக் களித்திருப்பதினுல் ஒருவன் கள்ளுண்டதையும் அறியலா மென்றபடி.

மகிழ் : முதனிலைத்தொழிற்பெயர். நறு : அதனை யுண்டதற்கு ஆகுபெயர். மெல்லெனல் - இலேசாயிருத்தல். (௮0).

நாவன்றே நட்பறுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றே வீங்கிப் பிணிப்பி னவாஅப்
படுமன்றே பன்னூல் வலையிற் கெடுமன்றே
மாறு ணிறுக்குந் துணிபு.

(ப-ரை.) நா - (இதம் பேசாத) நாக்கு, நட்பு அறுக்கும் அன்றே-(ஒருவரோடு கொண்ட) நட்பினை நீங்கச்செய்யுமன்றே; வீங்கி-(ஒருவர் அன்பு) மிகுந்து, பிணிப்பின் - (சிநேகிதத்தால்) கட்டினும், தேற்றம் இல் - (நட்பின் தன்மையை) அறியமாட்டாத, பேதை - அறிவிலி, விடும் அன்றே - (அந்நட்பை) ஒழிவானல்லனே; அவா - (நன்மாணுக்கனுடைய) விருப்பம், பல நூல்வலையில் - பல நூல்களாகிய வலையில், படும் அன்றே - உட்படுமன்றே, மாறுள் - (பலரோடு கொள்ளும்) பகையில், நிறுக்கும் - நிறுத்தவல்ல, துணிவு - துணிவானது, கெடும் அன்றே - (அத்துணிவுடையானைக்)கெடுக்குமன்றே, எ-று.

(வி-ரை.) நாவினால் தகாத சொற்களைப் பேசினால் சிநேகம் கெடுமாகையால் நாக்கைக் காத்துக்கொள்ளவேண்டும்; "யாகாவா ராயினு நாகாக்க" தெளிவில்லாதமூடன் தன்னைப் பிறர் கொஞ்சம் இறுகப்பிடித்தால் தப்பித்துக்கொள்ள வகைதெரியாமல் தன்பொரு ளைக்கொடுத்து விடுவான்; நல்ல நூல்களைக் கற்றிருந்தால் வீணானவை யெல்லாம் கெட்டுப்போம்; ஒருவன் பலரோடு பகை பாராட்டுவானா னால் உடனே கெடுவான்.

அன்றோ என்பது வெளிப்படை யென்பதைக் குறிப்பிக்கின் றது (அன்று ஒ). 'அவா அ' என்பது பாட்டின் ஓசை நிறைக்க வந்த அளபெடை (எழுத்து - சூ - கஉ). (அக)

கொடுப்பி னசனங் கொடுக்க விடுப்பின்
உயிரிடை யீட்ட விடுக்க வெடுப்பின்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

(ப-ரை.) கொடுப்பின் - (ஒருவன் ஒருவருக்கு ஒருபொருளைக்) கொடுக்க வேண்டினால், அசனம் கொடுக்க - உணவைக் கொடுக்கக் கடவன்; விடுப்பின் - துறக்கவேண்டினால், உயிர் இடையீட்ட-ஒருயி ருக்கு இடையூறு வந்தவற்றை, விடுக்க-துறக்கக்கடவன்; எடுப்பின்-தாங்கவேண்டினால், கிளையுள் - சுற்றத்தாருள், கழிந்தார் - பொரு ளில்லாரை, எடுக்க - தாங்கக்கடவன்; கெடுப்பின் - கெடுக்கவேண் டினால், வெகுளி கெடுத்துவிடல் - கோபத்தைக் கெடுத்துவிடக் கடவன், எ-று.

(வி-ரை.) எல்லாத் தானங்களிலும் அன்னதானஞ் சிறந்தது; ஒருவருக்குப் பிராணாபத்து வந்ததை நிவர்த்தி செய்வது உபகாரத் திற் பெரிது; தம்மவரில் வறுமைமுதலியவற்றால் இளைத்துப்போன வர்களுக்கு உதவிசெய்து அவர்களை நல்லநிலையில் வைப்பது சகாயங்

களில் மேலானது; தனக்குக் கோபம் வரவொட்டாமல் மனதைத் திடப்படுத்துவது குணங்களுள் உத்தமமாம்.

கொடுப்பின் முதலிய எச்சங்கள் மற்றவை செய்வதிலும் இதிது விசேஷமெனக்குறிப்பிக்க வந்தனவேயன்றி அப்படிச்செய்ய இஷ்டமிருந்தால் என்பதை யுணர்த்தினவையல்ல. அசனம் : வடசொல். எடுக்க கெடுப்பின் என வினைமுற்றின்முன் வலி இயல்பாயிற்று (உயிரீறு-சூ-கஎ). (அஉ)

நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாம்
குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லல்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

(ப-ரை.) நல்குரவின்கீழ் - வறுமையின் கீழமைந்த, நலனும் - நற்குணமும், இளமையும் - இளமையுருவும், சாம் - விளங்கமாட்டா; கல்லாமைக்கீழ் - கல்வியறியாமையின் கீழமைந்த, குலனும் - உயர்குலமும், குடிமையும் - உயர்குடிப்பிறப்பும், சாம் - விளங்கமாட்டா; வளம் இல் - நீராகிய வளப்பமில்லாத, குளத்தின் கீழ் - குளத்தின் கீழமைந்த, நெல் சாம் - நெற்பயிர் விளையமாட்டா; பரம் மல்லல் - பாரமிகுதியாகிய, பண்டத்தின் கீழ்-பொருளின் சுமையின் கீழமைந்த, பகடு - எருதுகள், சாம் - விரைந்து செல்லமாட்டா, எ-று.

(வி-ரை.) தரித்திரமிருந்தால் ஒருவனுடைய அழகும் இளம்பருவமும் (போகமின்மையால்) பயனின்றிக்கெடும்; கல்வி கற்காதவனுக்கு நல்ல குடிப்பிறப்பும் குடிவளமுமிருந்தால் அவை சிறப்பில்லாமற் கெடும்; இவை, நீரில்லாத ஏரியின்கீழ்ப் பயிர் கெடுவதுபோலெனவறிக. அதிகபாரம் போட்ட பண்டியை இழுக்கும் எருதும் மார்புடைந்து சாகும். பாரத்தை அளவிட்டுப்போடவேண்டு மென்பதாம்.

பரம், பாரம் : வடசொல். (அங)

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை அல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

(ப-ரை.) நல்லார்க்கும் - நல்லவர்களுக்கும், தம் ஊர் என்று ஊர்-தம்முடைய ஊர் என்று சொல்லத்தக்கவூர் ஒன்றும், இல்லை—, நல் நெறி செல்வார்க்கும் - நல்லவழியில் நடப்பவர்களுக்கும், தம்மூர் என்று ஊர் இல்லை—, அல்லா கடைகட்கும் - நல்வழிச் செல்பவரல்லாத அற்பருக்கும், தம் ஊர் என்று ஊர் இல்லை—; தம் கைத்து உடையார்க்கும் - தமது பணமுள்ளவர்களுக்கும், எவ்வூரும் - எந்த வூரும், ஊர் - தம்மூராம், எ-று.

(வி-ரை.) நல்ல குணமுள்ளவர்களுக்கும் நல்ல நடக்கையுள்ள வர்களுக்கும் தமது என்று ஒரு ஊரில்லை; என்றால் எவ்வூரிலும் அவர்களுக்குத் தம்மூரில் நடப்பதுபோல மேன்மையே நடக்குமென் றபடி; அயோக்கியருக்கும் அப்படியே தமக்கென்று ஒரு ஊரில்லை, அவர்களுக்குத்தம்மூரிலும்பிறவூரிலும் அவமதிப்பே நடத்தலாலென அறிக; செல்வமுள்ளவர்களுக்கு எங்கும் வேண்டியபடி நடக்குமாத லால் அவர்களுக்கும் எல்லாம் தம்மூரேயா மென்பதாம்.

என்ற என்னு மிடைச்சொல் பெயரோடு சேர்ந்து அப்பொரு ளின் தன்மையைக் காட்டிற்று (இடை - சூ - ௫). (அச)

கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள்.

(ப-ரை.) கல்லா ஒருவர்க்கு - கல்வியறிவில்லாத ஒருவருக்கு, தம் வாயில் - தமது வாயிற்பிறந்த, சொல் கூற்றம் - சொல் கூற்றுவனாம்; மெல்லிய வாழைக்கு - மென்மையாயுள்ள வாழைமரத்துக்கு, தான் ஈன்ற - தான் பெற்ற, காய் கூற்றம் - காய் கூற்றுவனும்; அல்லவை செய்வார்க்கு - பாவத்தொழிலைச் செய்பவருக்கு, அறம் கூற்றம் - அறம் கூற்றுவனும்; இல் - தன் குடும்பத்துக்கு, இருந்து - அக்குடும்பத்தி லிருந்துகொண்டு, தீங்கு ஒழுகுவாள் - கெட்டவழியில் நடப்பவள், கூற்றமே - கூற்றுவனே ஆம், எ-று.

(வி-ரை.) மூடனுக்கு அவன் வாயிலே வருகிற சொல்லே எமனைப்போல் கேடுதருவதாம்; அது எதுபோலெனில், வாழைமரத்துக்கு அதிலுண்டாகிற காயே அதைநாசமாக்குவதுபோலென்க. (குலை போட்டபின் வாழையை வெட்டிப்போடுகிறார்கள்.) பாவஞ்செய்கிறவரைத் தருமம் கெடுக்கும்; நன்னடக்கையில்லாத பெண் குடித்தனத்துக்குக் கேடுசெய்பவளாம் என்றவாறு.

"அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்றகாய் கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழு காப்பெண்."

கூறுசெய்வது கூற்றம் என்னலாம். பிராணன் போனபின்பு பஞ்சபூதங்களும் பிரிந்து கூறாய்த் தம்மினத்திற் சேருகின்றன என்பது சாஸ்திரம். அனுபவத்திற்கும் ஒக்கும். 'இல்லிருந்து' எனபதனால் அவள் இல்விட்டுப்போனால் அவளுக்கேயன்றி அக்குடிக்குத் தீங்கில்லை என்றதாயிற்று. (அ௩)

நீரான் வீறெய்தும் விளைநில நீர்வழங்கு
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினங் கொண்டெய்தும்
நாட்டான் வீறெய்து மாமன்னன் கூத்தொருவன்
ஆடலாற் பாடு பெறும்.

(ப-உ.) நீரான் - நீர்வளத்தினால், விளைநிலம்-பயிர் விளையும் படியான நிலமானது, வீறு எய்தும் - பெருமையை அடையும்; நீர் வழங்கு பண்டத்தான் - சமுத்திரங்கொடுக்கும் வஸ்துக்களால், பட்டினம் - நகரமானது அல்லது நெய்தனிலத்து ஊர், பாடு எய்தும்—; கொண்டு எய்து நாட்டான் - தான்கொண்டு ஆளுகின்ற நாட்டின் குணத்தால், மன்னன்-அரசன், வீறெய்தும்—; ஒருவன் ஆடலால்- ஒருவன் ஆடும் திறத்தினால், கூத்து—, பாடு பெறும் - பெருமையை அடையும், எ-று.

(வி-ரை.) 'பாடலால்' எனவும் பாடம். நீர்நன்றாய்ப் பாய்வதனாலே பயிர் நிலம் நல்ல பலன் தந்து பெருமைபெறும்; கப்பல் வழியாய்த் தேசாந்தரத்திலிருந்து வரும் பலவகைப் பண்டங்களால் ஒருபட்டினம் யாவர்க்கும் வேண்டிய கொடுத்துப் பெருமைப்படும்; அல்லது கடலிலுண்டாகிற சங்கு முத்து முதலிய பொருள்களால் ஒருபட்டினத்துக்குப் பெருமை என்றுமாம். ஒரு அரசனுக்கு அவனாள்கின்ற ராச்சியம் குடிவளம் பொருள்வளங்களை யுடைத்தாயிருப்பதனால் பெருமையுண்டு; கூத்து ஆடுகிறவன் அல்லது ஆட்டுகிறவன் திறத்தினால் பெருமைபெறும் என்றதாம். கூத்து என்பது நாடகம். (அ௬)

ஒன்றாக்கல் பெண்டிர் தொழினலம் என்றும்
அறனாக்க லந்தண ருள்ளம் பிறனாளும்
நாடுகோண் மன்னர் தொழினலங் கேடுகக்கும்
கேளி ரொரீஇ விடல்.

(ப-ரை.) பெண்டிர்-குலப்பெண்களுடைய, தொழில்-தொழில்களில், நலம் - சிறப்புள்ளது, என்றும் - கணவன் அழகு செல்வ முதலிய கெட்ட காலத்தும், ஒன்று ஊக்கல்-கற்பாகிய வொன்றை மனவெழுச்சியோடு காத்தல்; அந்தணர் உள்ளம்-பிராமணருடைய

ஊக்கம், என்றும் - மிக்க வறுமை வந்தகாலத்தும், அறன் - தமகுல தருமத்தை, ஊக்கம்-மனவெழுச்சியோடு செய்தல்; மன்னர் - அரசர்களது, தொழில் - தொழில்களில், நலம் - சிறப்புள்ளது, என்றும் - பெருஞ்செல்வத்தை அடைந்த காலத்தும், பிறன் ஆளும் - பகைவனால் ஆளப்படும், நாடு - நாட்டை, கோள்-(அவனை வென்று) தம்வசப்படுத்துதல்; கேளிர் - (ஒருவன்) உறவினரை அல்லது சினேகிதரை, ஒரீஇவிடல் - நீக்கிவிடுதல், என்றும் - மிக்க வலியுடையனாகிய காலத்தும், கேடு உகக்கும்-(தனக்கு) வரும் கேட்டை விரும்பும், எ-று.

(வி-ரை.) கணவனோடு ஒரு மனமாயிருந்து நல்லகாரியத்தைச் செய்தல் மனைவிக்கு நலம்; எப்பொழுதும் தருமத்தை விர்த்திசெய்வது பார்ப்பாருக்கு நலம்; முறையின்றி யாளுகிறவர்களுடைய ராச்சியத்தைச் சீர்ப்படுத்தும்பொருட்டுத் தன்வசமாக்க முயல்வது அரசனுக்கு நலம்; தமக்கு இதஞ்செய்யுஞ் சுற்றத்தாரை நீக்கிவிடாமல் அனுசரித்துவருதல் எவர்க்கும் நலமென்றவாறு. அவர்க்கு நலம் என்னாமல் அவர் தொழிலுக்கு நலம் என்றது, அது அவர் செய்ய வேண்டிய காரியம் என்பதை அறிவிக்க.

'கோள்' கொள் என்னு முதனிலை முதனீண்டு தொழிற்பெயராயிற்று. ஒன்றி என்பது ஈறுதொக்கது. ஒன்று என்பதற்கே ஒன்றி எனப் பொருள்கொள்வதுமாம். (அஎ)

கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோ டியார்மாட்டுங்
கொள்ளாமை வேண்டும் பகை.

(ப-ரை.) கடிய-(பிறர் பொருளைக் களவு செய்தால் பின்) அஞ்சத்தக்கவை, வருதலால் - நேரிடுதலால், கள்ளாமை வேண்டும் -

களவு செய்யாமையே தகுதி; தகுதி உடையன - (பெரியோரால் சொல்லப்படும்) தகுதியுடைய சொற்களை, தள்ளாமை வேண்டும் - தள்ளாமல் கொள்ளலே தகுதி; சிறியரோடு - பேதையாரிடத்தில் அல்லது அற்பரிடத்தில், நள்ளாமை வேண்டும் - சிநேகியாமையே தகுதி; யார் மாட்டும் - இளையாரிடத்தும் அல்லது எவரிடத்தும், பகை கொள்ளாமை வேண்டும் - பகை கொள்ளாதிருத்தலே தகுதி, எ-று.

(வி-ரை.) திருடுவதும், நல்லகாரியங்களைக் கைவிடுவதும், அற்பரோடு சினேகிப்பதும், எவ்வளவு தாழ்ந்தவரையாவது பகைப்பதும் கேட்டைத்தருமென்பதாம்.

கடியவருதலால் என்கிற ஏதுவாக்கியத்தை எல்லாவாக்கியங்களிலும் கூட்டிக்கொள்க. கள்ளாமைமுதலிய எதிர்மறைத்தொழிற்பெயர்கள் எழுவாய், வேண்டும் : பயனிலை. (அஅ)

பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக வொட்டாரைக் கால மறிந்தாங்
கருக்குக யார்மாட்டு முண்டி. சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

(ப-ரை.) நட்டாரை - சிநேகிதரை, நன்றின்பால் - சுகவாழ்க்கையில், உய்த்து - நடத்தி, பெருக்குக - (ஒருவன்) பெருகச் செய்யக்கடவன்; காலம் அறிந்து - (பகைவர்மேல் செல்லும்) காலத்தை அறிந்து, ஆங்கு - அந்தக்காலத்தில், ஒட்டாரைத் தருக்குக - பகைவரிடத்துக் களிப்போடு (போர்க்கு) செல்லக்கடவன்; யார்மாட்டும்- மிக்க நட்பினரிடத்தும், உண்டி-(பலமுறை சென்று) உண்ணுதலை, அருக்குக - தவிரக்கடவன்; சினம் செல்லா இடத்து - தன் கோபம் செல்லுதற்குரியதாகாத இடத்தில், சுருக்குக - (அதைத்) தணியச் செய்யக்கடவன், எ-று.

(வி-ரை) தன்னைச் சிநேகித்தவரை எப்படியாவது விர்த்தி செய்யவேண்டும்; காலம்பார்த்துச் சத்துருக்களை அடக்கவேண்டும்; கண்டவிடத்துச் சாப்பிடுவதை விடவேண்டும்; தனக்கு வசப்பட மாட்டாதவர்மேல் கோபங் காட்டாதிருக்கவேண்டும் என்றபடி.

அருக்குக என்பதற்கு "கேடு அரிது" என்பதுபோல் இல்லையாக்கவேண்டும்; அதாவது, விடவேண்டுமெனப் பொருள்கொள்ளலாயிற்று. நீராவிடமன்றிச் சாதாரணமாய் எங்கும் உண்பதினால் சிலர் வஞ்சனையால் நஞ்சிட்டுக்கொல்ல முயலத் தீங்குவருமென்பது கருத்து. இந்தப்பாட்டு முக்கியமாய் அரசர்க்காகும். பிறரும் ஒட்டிக்கொள்ளலாம். (அக)

மடிமை கெடுவார்க ணிற்குங் கொடுமைதான்
பேணுமை செய்வார்க ணிற்குமாம் பேணின்
நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்க ணிற்குங் களிறு.

(ப-ரை.) மடிமை - சோம்புந்தன்மை, கெடுவார்கண் - (கல்விச்செல்வ முதலியவை) கெடுவோரிடத்து, நிற்கும் - நிலைபெறும்; கொடுமை - தீமை, பேணுமை - (காக்கவேண்டுமெவற்றைக்) காவாமையை, செய்வார்கண் - செய்யும் பேதையரிடத்து, நிற்கும் - நிலைபெறும்; நல் பெண்டிர் - நல்லபெண்கள், பேணினுன்வரை-விரும்பிக்கொண்டவனது எல்லையிலும், நாணின்வரை - நாணத்தினது எல்லையிலும், நிற்பர் - நிலைபெறுவர், களிறு - யானை, நட்டு-நடப்பட்டு, அமைந்த - (தனக்குத்) தகுந்த அளவாயுள்ள, தூணின்கண் நிற்கும் - தூணில் நிலைபெறும், எ - று.

(வி-ரை.) சோம்பலுள்ளவன் கெடுவான்; வன்னெஞ்சன் எவர்க்கும் உதவிசெய்யமாட்டான்; நல்ல பெண்பிள்ளைகள் புருஷன் தம்மை அதிகமாகக்கொண்டாடினாலும் நாணத்தோடே யிருப்பார்களே

யன்றி எல்லை கடவார்; எப்படியென்றால், யானை கட்டுத்தறியில் கட்டப்பட்டிருந்தால் அதைவிட்டு அப்புறம் போகமாட்டாதுபோலே என்றபடி.

'மடமை கெடுவார்க ணிற்கும்' எனவும் பாடம். மடமை-மூடத்தனம். மடிமை: பண்புப்பெயர். ஆம் : அசை. (௧௦)

மறையறிப வந்தண் புலவர் முறையொடு
வென்றி யறிப வரசர்க ளென்றும்
வணங்க லணிகலஞ் சான்றோர்க்கஃ தன்றி
அணங்கை வணங்கலள் பெண்.

(ப-ரை.) அம் தண் - அழகிய கருணையையும், புலவர் - அறிவையுமுடைய பிராமணர் அல்லது சற்குணமுள்ள வித்துவான்கள், என்றும் - எக்காலத்தும், மறை அறிப - வேதங்களை யாராய்வார்; அரசர்கள் - அரசர்கள், முறையோடு - (குடிகளைக் காக்கும்) முறையோடு, வென்றி-(பகைவரை) வெல்லுந் தொழிலையும், அறிப-ஆராய்வார்; சான்றோர்க்கு - (கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்தவர்க்கு, அணிகலம் - அணிதற்குரிய ஆபரணம், வணங்கல் - (யாவருக்கும்) பணிவுடையராயிருத்தலாம்; பெண் - பெண்ணெனப்பட்டவள், (என்றும் - எக்காலத்தும்), அஃது அன்றி - (தன் கணவனாகிய) அத்தெய்வத்தை அல்லாமல், அணங்கை - வேறுதெய்வத்தை, வணங்கலள் - வணங்கல் செய்யாள், எ - று.

(வி-ரை.) சற்குணமுள்ள வித்துவான்கள் வேதஞ்சொல்லும் பொருளையே பிரியமாக்கொண்டிருப்பர்; நியாயத்துக்கு ஒத்தவிதத்தில் ஜயங்கொள்ளப் பிரியமாயிருப்பர் அரசர்; யோக்கியர் எப்போதும் மேலானவருக்கு வணங்கிநிற்பதையே சிறப்பாகக்கொண்டிருப்பர்; நல்லபெண், தெய்வத்தைக்காட்டிலும் மேலாகத் தன் புருஷனையுபசரித்து வருவதைச் சிறப்பாகக் கொண்டிருப்பா ளென்றவாறு.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

'வணங்குவ பெண்' என்றும், "வணங்குவள்பெண்" என்றும், "அணங்கல் வணங்கின்று பெண்" என்றும் பாடமுண்டு. (கக)

பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்
பெட்டாங்கே பெட்கும் பிணையிலி—முட்டினும்
சென்றாங்கே சென்றொழுகுங் காமங் கரப்பினும்
கொன்றான்மே னிற்குங் கொலை.

(பதவுரை.) பண்பு உடையாள் - நற்குணமுடைய பெண், பட்டாங்கே - (காவல் செய்யாவிடினும்) தன்னியற்கையாகிய கற்புக்கே, பட்டு - உட்பட்டு, ஒழுகும் - நடப்பாள்; பிணையிலி - (கணவனோடு) உடன்படுதலில்லாதவள், காப்பினும் - காவல்செய்தாலும், பெட்டாங்கே - (காவல் செய்வதற்குமுன் சாரர்களை) விரும்பினாற்போலவே, பெட்கும் - விரும்பி நடப்பாள்; காமம் - ஒருவனுடைய காமமும், முட்டு உறினும்-இடையூறு நேரிடினும், சென்றாங்கே-(இடையூறு நேரிடுதற்குமுன்) சென்றாற்போலவே, சென்று - போய், ஒழுகும் - (தீயொழுக்கத்தில்) நடக்கும்; கொலை - கொலைப்பாதகம், கரப்பினும் - (பலர் அன்று) மறைக்கினும், கொன்றான்மேல் - அக்கொலை செய்தவன்மேல், நிற்கும் - நிலைபெறும், எ-று.

(வி-ரை.) நல்லபெண் யாதொரு நிர்ப்பந்தமுமின்றித் தானே நல்வழி நடப்பாள்; கெட்டபெண் எத்தனை நிர்ப்பந்தத்தில் வைத்திருந்தாலும் சாஸ்திரவிதியைத் தள்ளித் தன் இஷ்டப்படியே நடப்

டாள்; "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை." பல விரோதங்களால் தடைப்படுவதா யிருந்தும் காமம் பற்றினவிடத்தை விடாமலே யிருக்கும்; ஒருவன் கொலைசெய்தால் அது எத்தனை மறைத்தாலும் எப்படியாவது வெளிப்படும்.

இங்கு கொலை என்றது மற்றப் பெரும்பாவங்களையுங் குறிக்கும்; "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே". பட்டாங்கு-சாஸ்திரம், அதன் விதிக்கு ஆகுபெயர். பெட்ட+ஆங்கு - பெட்டாங்கு என்று மருவி வந்தது. பெட்ட - விரும்பின, பெட்டு - பகுதி, அ - பெயரெச்சவிகுதி. ஆங்கு - விதம், சென்றுங்கும் இப்படியே. பிணி-பிணித்தல்=கட்டு, முதனிலைத்தொழிற்பெயர். முட்டு: இதுவுமப்படியே. "பெட்டாங் கொழுகும் பிணியிலி - முட்டினும்" என்னும் பாடம். (கூஉ)

வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியார்
இன்கண் பெருகி னினம்பெருகுஞ் சீர்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும் வன்கண்
கயம்பெருகிற் பாவம் பெரிது.

(ப-ரை.) வன்கண் - (சேனைக்கு) வீரம், பெருகின் - மிகுந்தால், வலி பெருகும்-(அரசனுக்கு) வலிமிகும்; பால் - பால்போலுஞ் சுவையுள்ள, மொழியார் - சொல்லையுடைய மனைவியரிடத்து, இன்கண் - (கடுகடுத்து நோக்காத) இனியபார்வை, பெருகின் - மிகுந்தால், இனம் பெருகும் - (கொண்டவனுக்கு) நல்லுறவினர் மிகுவார்; சீர்சான்ற - கீர்த்திமிகுந்த, மென்கண் - இரக்கமானது, பெருகின்-(ஒருவனிடத்து) மிகுமானல், அறம் பெருகும் - (அவன்மேற்கொண்ட) துறவறம் மிகும்; வன்கண் - கொடுமையுள்ள, கயம் - கீழாகிய தன்மை, பெருகின் - (ஒருவனிடத்து) மிகுமானல், பாவம் பெரிது - பாவம் மிகும், எ-று.

(வி-ரை.) தயிரியம் அதிகமாயிருந்தால் பலமும் அதிகமாகும்; பெண்ணுக்குச் சந்தோஷம் வளர்ந்து வந்தால் அந்தக்குலமும் வளரும்; 'பான்மொழியா ரின்கண்பெருகி னினம்பெருகும்' என்றதற்கு, ஒரு குலப்பெண் இன்பமாய்ப்பேசி யுபசரித்தால் இனத்தார் மிகுந்து வருவார்கள் என்றும் பொருள் கூறலாம்; சிறந்த கருணையிருந்தால் அவனிடத்துத் தருமம் வளர்ந்துவரும்; இழிவான மனக்கடுமை மிகுந்தவனிடத்துப் பாவமும் அதிகமாம் என்றபடி.

வன்கண் முதலானவைகளில் கண்: பண்புப்பெயர் விகுதி.

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றம்
தமரல்லார் கைத்துள்ள தூண்.

(ப-ரை.) இளமைப்பருவத்து - (கல்வியேறுதற்குரிய) இளமைப் பருவத்தில், கல்லாமை - (அக் கல்வியைக்) கற்காமல் விடுதல், குற்றம் - குற்றமாம்; வளம் - பொருள், இலாப்போழ்தத்து - இல்லாதகாலத்தில், வள்ளன்மை குற்றம் - ஈகைக்குணம் உடைமை குற்றமாம்; கிளைஞர் இல்போழ்தில்-உறவினர் (தன்பக்கத்தில்) இல்லாதகாலத்தில், சினம் - (பகைவர்மேற் கொள்ளும்) கோபம், குற்றம் - குற்றமாம்; தமர் அல்லார் - உள்ளன்பில்லாருடைய, கைத்து உள்ளது - இடத்திலுள்ள உணவை, ஊண் - உண்ணுதல், குற்றம்-குற்றமாம், எ-று.

(வி-ரை.) இளம்பிராயத்தில் படியாமை குற்றமாவதுபோல் பணமில்லாதபோது தானஞ்செய்தலும் குற்றமாம்; அப்படியே தனக்குப் பலமான உறவின ரில்லாதிருக்கையில் பிறரை அனுசரித்து நடப்பதைவிட்டுக் கோபித்தலும், தம்முடையவரல்லார் வீட்டில் உண்டலும் குற்றமாம் என்றவாறு.

பொழுது என்பது போழ்து என மருவியது; அதன்மேல் வேற்றுமையில் அத்துச்சாரியை வந்தது; இதற்கு விதி (உருபு-சூ-கச). 'வள்ளன்மை' வள்ளலின் தன்மை; மை : தன்மையைக்காட்டும் விகுதி. 'ஊண்' உண் முதனீண்ட தொழிற்பெயர். (கூச)

எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை.

(ப-ரை.) எல்லா இடத்தும் - (வேள்விமுதலிய) எல்லாவிடங்களிலும், கொலை - (ஒருயிரைக்) கொலைசெய்வது, தீது - (செய்தானுக்குத்) தீயதாகும்; மக்களை - தன் புத்திரர்களை, கல்லா வளர - (கல்வியைக்) கற்காமலே வளரும்படி, விடல் தீது-(தந்தை) விடுதல் (தனக்கே அன்றி அச்சிறுவர்க்கும்) தீயதாகும்; நல்லார் - மாதர்கள், நாண் அற்று - நாணமில்லாமல், நிற்பின் - (பல ஆடவர் முன்) நின்றால், நலம் - (அவருடைய) அழகு, தீது - (அவர்க்கே அன்றித் தங் கணவருக்கும்) தீயதாகும்; கொள்கை - (வருணத்துக்குத் தக்கபடி) கொண்ட ஒழுக்கம், அழிந்தக்கடை - கெட்டபின், குலம் - (அக்கெட்டோனுடைய) குலம், தீது - கெட்டதாகும், எ-று.

(வி-ரை.) எப்படிப்பட்ட விஷயத்திலும் கொல்லுதல் கெட்டதேயாம்; பிள்ளைகளைப் படிப்பியாமல் சும்மா வளர்ப்பதுங் கெட்டது; வெட்கமில்லையாயின் ஒரு பெண்ணுக்கு இருக்கும் அழகு கெட்டது; நன்னடக்கை யில்லாமற்போனால் எந்த மேலான குலமும் கெட்டதேயாம்.

அழிந்தக்கடை : எதிர்கால வினையெச்சம். கடை : விகுதி. 'அழிந்தவிடத்து' என்றும் பாடம்.

ஆசார மென்பது கல்வி யறஞ்சேர்ந்த
போக முடைமை பொருளாட்சி யார்கண்ணும்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வான்
உண்ணாட்ட மின்மையு மில்.

(ப-ரை.) ஆசாரம் என்பது - நல்லொழுக்கமென்று சொல்லப் படுவது, கல்வி - (ஒருவன் கற்ற) கல்விப்பயனாகும்; அறம் சேர்ந்த - அறத்தோடு பொருந்திய, போகம் உடைமை-சுகாநுபவம், பொருள்- உடையபொருளின் பயனாகும், யார்கண்ணும் - எல்லாரிடத்தும், கண்ணோட்டம் இன்மை - தாக்ஷிண்ய மில்லாதிருத்தல், ஆட்சி - அளுகையாம்; உள் நாட்டம் இன்மை-குடிகளுடைய (நன்மையைச்) தன்னுள்ளத்தில் ஆராய்தலில்லாமை, இல் - இல்லாதிருத்தல், தெரிந்து ஆள்வான் - (பெரியாரோடு) எண்ணி அரசாள்வானது, முறைமை - நீதியாம், எ-று.

(வி-ரை.) கற்றறிந்து நடப்பதே நல்ல ஆசாரமாம்; தருமத்து க்கு ஒப்பப் போகமனுபவிப்பதே நல்ல பொருளுடைமையாம்; அரசன், தன்னவர் பிறர் என்று பாராமல் யாவரிடத்தும் சரியாய் நீதி செலுத்துவதுதான் நடுநிலைமையாம்; காரியா காரியங்களை நன்றாய் அறிந்து ஆளுகின்ற அரசன் மனமறியாமல் தவறிப்போகுங் காரியம் இல்லை என்றால், அப்படிப்பட்ட நீதிமானுடைய அரசாட்சியில் எல் லாம் சரியாகவே நடக்கும் என்றும், தவறு உண்டானால் அவன் அறி ந்தே நடந்திருக்கவேண்டுமென்றும் சொல்லியதாயிற்று. (௯௯)

கள்ளி னிடும்பை களியறியு நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியு நிரப்பிடும்பை
பல்பெண்டி ராள னறியுங் கரப்பிடும்பை
கள்வ னறிந்து விடும்.

(ப-ரை.) கள்ளின் இடும்பை - கள்ளினாலுண்டாம் துன்பம், களி - கள்ளுண்டு களிப்பவன், அறியும் - அறிவான்; நீர் இடும்பை - நீரினாலுண்டாம் துன்பத்தை, புள்ளினுள் - பறவைகளுள், ஓங்கல் அறியும் - உயர்ந்து பறக்கும் சாதகப்பறவை அறியும்; நிரப்பு இடும்பை - (மனக்குறைகளை) நிரம்பச் செய்தலினாலுண்டாம் துன்பத்தை, பல் பெண்டிர் ஆளன் - பல மனைவியரை ஆள்கின்ற கணவன், அறியும் - அறிவான்; கரப்பு-(உடையவன்தன் பொருளை) ஒளித்துவைப்பதினாலுண்டாம், இடும்பை - துன்பத்தை, கள்வன்- (பொருளைக்) களவுசெய்வோன், அறிந்துவிடும் - அறியாமலிரான், எ-று.

(வி-ரை) கள்ளினால் வரும் துன்பம் அதைக் குடிப்பவனுக்கே தெரியும்; நீரிலே இருக்கும் சங்கடம் அந்தத் தண்ணீரிலேயே எப்பொழுதும் நீந்தித்திரிகிற ஓங்கலென்கிற பறவைக்குத் தெரியும்; அதுபோல, வறுமையினால் வரும் கஷ்டம் பல பெண்களை மணந்து ஆள்கிறவனுக்குத் தெரியும்; திருட்டினால் வருங்கேடு திருடனுக்கே தெரியும் என்றபடி. அந்தந்தத் துன்பம் அவரவருக்குத்தெரியும் என்றது பிறருக்குத் தெரிவதிலும் அனுபவிக்கிறவருக்கு நன்றாய்த் தெரியுமென்பதற்காக. அவை மிகவுங் கடுமையென்றதாம். "புள்ளியுளோங்கலறியும்" என்று பாடமோதி, மதிப்புள்ள கப்பல் அறியும் என்று பொருள்கொள்வதுமாம்.

களி: வினைமுதற்பொருள் விகுதிபுணர்ந்து கெட்ட பெயர்.

நெடுச்சொ னயமிலார் வாய்த்தோன்றுங் கற்றார்வாய்ச்
சாயினுந் தோன்றா கரப்புச்சொல் தீய
பரப்புச்சொற் சான்றோர் வாய்த்தோன்றா கரப்புச்சொல்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும்.

(ப-ரை.) வடுச்சொல் - (பிறருடைய) குற்றத்தை வெளிப்படுக்குஞ் சொற்கள், நயம் இலார் வாய் - நீதியில்லாதவருடைய வாயில், தோன்றும் - பிறக்கும்; கரப்புச்சொல் - வஞ்சித்தலமைந்த சொற்கள், கற்றார் வாய்-(அறநூல்களைக்) கற்றவர்வாயில், சாயினும் - செல்வங்கெடுவாராயினும், தோன்றா-பிறவா; தீய - (ஒருவர்க்குத்) தீமையாயினவற்றை, பரப்புச்சொல் - விருத்தலைச் செய்கின்ற சொற்கள், சான்றோர்வாய்-(நற்குணங்களால்) நிறைந்தோரதுவாயில், தோன்றா-பிறவா; கரப்புச்சொல் - (இரப்பவர்க்குப்) பொருளை மறைத்து மறக்குஞ் சொற்கள், கீழ்கள் வாய் - கீழ்மக்கள் வாயில், தோன்றிவிடும் - பிறவாமலிரா, எ-று.

(வி-ரை.) பிறரை நட்புக்கொள்ளுங் குணமில்லாதவர் பிறர் மேல் தூஷணை சொல்லிக்கொண்டே யிருப்பர்; கற்றறிந்தவர் எத்தனைச் சங்கடத்திலும் வஞ்சனை பேசமாட்டார்கள்; இதற்கு மாறாய் யோக்கியர் தூஷணை செய்யார்; கீழ்மக்கள் வஞ்சனை பேசுவார்கள்.

தோன்றாகரப்பு என்பது ஆகாரவீற்றுவினை முற்றாதலால் அதன்முன் வலி இயல்பாயிற்று. தீயபரப்பு என்பதில் (உயிர்-சூ-கஎ) ஞல் வலியியல்பு. (மெய் - சூ - உக) விதியால் வாய்த்தோன்றும் என்பதில் வலி மிகுந்தது. (கஅ)

வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்
கற்றொருவனும் பாடிலன் கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

(ப-ரை.) வால் இழையார் முன்னர் - குற்றமில்லாத ஆபரணத்தை அணிந்த மாதரிடத்து, வனப்பு இலார் - அழகிலாத ஆடவர், பாடு இலர் - பெருமை யடைதலிலர்; கல்லாதான் - (பல நூல்களைக்) கற்காதவன், சாலும்-(கல்வி யறிவு கேள்விகளால்) நிறைந்த, அவைப்

படின் - சபையில் சேர்ந்தால், பாடு இலன் - பெருமை யடைத லிலன்; கற்ருன் ஒருவனும் - கல்வி யறிவுடையாளுகிய ஒருவனும், கல்லாதார் முன்னர்ப்படின் - கல்வியில்லாரிடத்துச் சேர்ந்தால், பாடு இலன் - பெருமையடைதலிலன்; பேதையார் முன்னர் படின் - யாதும் அறியாரிடத்தும் சேர்ந்தால், பாடு இலன் - பெருமையடைத லிலன், எ-று.

(வி-ரை.) ஸ்திரீகளிடத்தில், அழகில்லாதவன் பெருமைப்படா மைபோல் கற்றவர் சபையிலே கல்லாதவன் பெருமைப்படமாட் டான்; அப்படியே கற்றவனும், கல்லாதவரிடத்திலும் மூடரிடத்தி லும் பெருமை பெறமாட்டான்.

பேதையார்-தரித்திரர் அல்லது பெண்கள் எனவுமுரைக்கலாம். எச்சவும்மை வருவிக்கப்பட்டது. வாலிழையார் என்றது சொகசுக் காரிகள் என்பதற்கு. (கக)

மாசு படினு மணிதஞ்சீர் குன்றாவாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசோடும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

(11-ரை.) மணி - இரத்தினங்கள், மாசுபடினும் - அழுக்குச்சே ர்ந்தாலும், தம் சீர் குன்று ஆம் - தம்முடைய ஒளி குறையா ஆகும்; பூசிக்கொளினும் - (ஒருவன்) கழுவிக்கொண்டாலும், இரும்பின் கண் - இரும்பில், மாசு ஓடும் - துருப்பாவும்; கீழ் - கீழ்மகன், தன் னைப் பாசத்துள் இட்டு - தன்னைத் தளையிலிட்டு, விளக்கினும் - அறிவு விளங்கச் செய்தாலும், மாசு உடைமை - (தான்) குற்ற முடையனு யிருத்தலை, காட்டிவிடும் - (பிறர்க்குக் காட்டாமலிரான்; (தளையிலிட்டு அறிவுவிளங்கச் செய்யாவிடினும் குற்ற முடையவனு யிருத்தலைக் காட்டாமலிரான்), எ-று.

(வி-ரை) அழுக்குப் பட்டாலும் ரத்தினங்களின் சிறப்புக்கெடாது; அதுபோல் யோக்கியனுக்கு வறுமை முதலிய நேர்ந்தாலும் அவன் சிறப்புக்கெடாது; இரும்பைச் சுத்திபண்ணிவைத்தாலும் அதில் மறுபடி துருவாகிய அழுக்கு ஏறுவதுபோலக் கீழ்மக்களுக்கு எத்தனை புத்தி சொல்லிவைத்தாலும் தம்மியற்கையான அயோக்கியதையையே மேற்கொள்வார்கள், அன்றியும், விலங்குமுதலானவைகளால் அவர்களை நிர்ப்பந்தித்துத் தடுத்தாலும் தம்மியற்கையையே காட்டுவார்களென்றபடி. 'மாசுபடினும்' என்பதற்கு முக்குணவயத்தால் யோக்கியருக்கு ஒருகுற்றம் நேர்பட்டாலும் உடனே அவர் அதை நீக்கிக்கொண்டு முன்போல் விளங்குவார்களெனவும் கருத்துக்கொள்ளலாம்.

இட்டு என்பது இட்டால் என்பதன் திரிபு. விளக்கினும் என்பதிலிருக்கும் உம்மையை இதனோடும் கூட்டிக்கொண்டு 'கீழ்தன்னை மாசுடைமை காட்டிவிடும்' என்பதோடு ஒருவாக்கியமாக்குக. இங்ஙனஞ் செய்யாமற்போனால் நான்குவிஷயம் ஏற்படா. முந்திய சில பாட்டுகளிலும் இப்படியே அறிக. "உயர்திணைதொடர்ந்த" என்கிற சூத்திரத்து உரையின்படி 'மணிதஞ் சீர்குன்றா' என முடிந்தது. 'மணிதன் சீர்' என்னும் பாடம். 'மாசொட்டும்' என்னும் பாடம்.

எண்ணொக்குஞ் சான்றோர் மரியாரிற் றீராமை
புண்ணொக்கும் போற்ரு ருடனுறைவு—பண்ணமைபல்
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொற் பாழொக்கும்
பண்புடையா ளில்லா மனை.

(ப-உ.) சான்றோர்-(கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்த அல்லது சற்குண நிறைந்த, மரியாரில் - விரும்பப்பட்டவர்களினின்று, நீராமை-(ஒருவன்) நீங்காதிருக்குங் கருத்து, எண் ஒக்கும்-ஆராய்ச்சியை ஒக்கும்; போற்ருருடன் - பகைவரோடு அல்லது விரும்பாத

வர்களோடு, உறைவு - வசித்தல், புண் ஒக்கும் - புண்போலத் துன்பம் செய்வதாகும்; நட்டார் - சிநேகர், கழறும் சொல் - இடித்துச் சொல்லுஞ் சொல், பண்ணிய - குறைவில்லா நரம்புக்கட்டமைந்த, யாழ் ஒக்கும் - யாழினிசைபோல (செவிக்கு) இனியதாகும்; பண்பு உடையாள் - நற்குணமுடைய மனைவி, இல்லா மனை - இல்லாத வீடு, பாழ் ஒக்கும் - பாழாகிய மனையை ஒத்திருக்கும், எ-று.

(வி-ரை.) நல்ல யோக்கியரைக் கைவிடாமல் சேர்ந்திருப்பது நல்லவிவேகஞ் சம்பாதிப்பதுபோலும், அதனால் விவேகம் வருமாதலால்; அறியாதவரோடு சேர்ந்திருப்பது தன் உடம்பில் புண்படுத்திக்கொள்வதுபோலாம், அதனால் துன்பம் வருமாதலின்; இஷ்டமானவர்கள் பேசும் பேச்சு, யாழின் இராகம்போல் காதுக்கு இனிப்பாயிருக்கும்; சற்குணநிறைந்த மனைவியில்லாத வீடு சுகத்திற்கு ஏதுவாகாமையால் பாழ்மனைபோலும் என்றவாறு.

எண் கருவிப்பொருள் விகுதிபுணர்ந்து கெட்டபெயர். 'அரியர் ஆ' என்றும், 'மரீஇயாரில்' என்றும் பாடம். மருவியார் 'மரியார்' என மருந்தது என்று கொள்ளவேண்டும்; மரியார் - சாகாதவர், அவராவார் தேவர்கள்; அவர்களோ டொத்தவர்கள் என்றுங் கொள்ளலாம். ஐந்தாம்வேற்றுமை நீக்கத்தில்வந்தது. இயல்-வினைத்தொகை. 'பண்ணியல்' என்றும் பாடம். (௧0௧)

ஏரி சிறிதாயி னீரருகு மில்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணறாஉ மேலைத்
தலைசிறி தாயின் வினையருகு மூருமு
புரஞ்சிறி தாயிற் பகை.

(ப-ரை.) ஏரி - (ஊரிலுள்ள) ஏரியானது, சிறிது ஆயின் - நீர்குறைந்ததானால், நீர் அருகும் - (அவ்வூர்க் கிணறு முதலியவற்றின்) நீர் குறையும்; இல்லத்து - இல்வாழ்க்கையில், வாரி - (கணவனுக்கு) வருவாய்ப்பொருள், சிறிது ஆயின் - குறைந்ததானால்,

பெண் - மனையாள், ஊரும் - (அவனை) மேற்கொள்வாள்; மேலைத் தவம்-முற்பிறப்பிற் செய்த நல்வினை, சிறிது ஆயின்-(ஒருவனுக்குக்) குறைந்ததானால், வினை ஊரும் - தீவினை (அவனை) மேற்கொள்ளும்; முரண் - (அரசனுக்குப் படை முதலான) வலி, சிறிது ஆயின் - குறைந்ததானால், பகை - பகைவர், ஊரும் - (அவ்வரசனை) மேற்கொள்வர், எ-று.

(வி-ரை.) வரி சிறியதாயிருந்தால் தண்ணீர் அற்பமாகி அதன் கரைமேற் புரளுவதுபோல் வரும்படி கொஞ்சமானால் போகங்களை அனுபவிப்பது கடினமானதைப்பற்றிப் புருஷனை மனைவி அலக்ஷி யஞ்செய்வாள்; ஓரரசனுக்குச் சேனைமுதலாகிய பலம் குறைவாயிருந் தால் அவனைப் பகைவன் மேற்கொள்ளுவதுபோல் புண்ணியம் குறைவாயிருந்தால் பாவம் மேலிடும் என்பது கருத்து.

அருகு என்னு முதனிலைக்குக் கிட்டுதல் என்கிற பொருளு முண்டாதலால் பின்வரும் உபமேயத்திற்கேற்பக் கரைமேற்புரளும் என்று கருத்துக்கூறப்பட்டது; சுருங்கும் எனப்பொருள்கொள்ளின் உபமேயத்தோடு பொருத்தமில்லையாம். 'வாரி' என்பது 'வரத்து, வரவு' என்பவைபோல் வா என்பதின்மேல் வந்ததோர் தொழிற்பெ யர் எனலாம். 'நீரூரும்' என்றும் பாடம். 'ஊரு, முரண்சிறி தாயிற் பகை' என்றும் பாடம். (கOஉ.)

வைததனா லாகும் வசையே வணக்கமது
செய்ததனா லாகுஞ் செழுங்குலம்—செய்த
பொருளினா லாகுமாம் போக நெகிழ்ந்த
அருளினா லாகு மறம்.

(ப-ரை.) வைததனால் - ஒருவனைத் திட்டினதனால், வசையே ஆகும் - தனக்கு நிந்தையேயுண்டாகும்; வணக்கமது செய்ததனால் -

வணங்கி உபசாரஞ்செய்ததனால், செழுங்குலம் - மேன்மையான வமிசம், ஆகும்—; செய்தபொருளினால் ஆகும் போகம்-தான்சேர்த்த திரவியத்தினால் சுகானுபவமுண்டாகும்; நெகிழ்ந்த அருளினால் - மனம் தளர்ந்த இரக்கத்தினால், அறம் - தருமம், ஆகும்—, எ-று.

(வி-ரை.) ஒருவனைத் தூஷிப்பதனால் பகையுண்டாமேயன்றி வேறுபயனில்லை;வணங்கிப்பேசினால் இவனுக்கேயன்றி இவன்குலத்துக்கும் பெருமையுண்டாம்; பொருளைச் செலவழிப்பதற்கேற்ற போகங்களுண்டாவதுபோல் அருள் மிகமிகத் தருமமும்மிகுந்துவருமென்பதாம்.

'நெகிழ்ந்த அருள்' என்பதனால் எவர்க்கு என்னசங்கடம் நேரிட்டபோதிலும் மனம் கல்லைப்போலிராமல் தனக்கு நேர்ந்ததுபோல் எண்ணிக் கரைவதே அருளென்று அருளின்தன்மையைக் காட்டியதாயிற்று. ஆம் - அசை. (கOரு)

ஒருவ னறிவானு மெல்லா மியாதொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமு ளானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில்.

(ப-ரை.) எல்லாம் அறிவான் ஒருவனும் - எல்லாவற்றையும் அறிந்தவனாகிய ஒரு புருஷனும், யாதொன்றும் அறியாதவன் ஒருவனும் - எதையும் அறியாத ஒருவனும், குணன் அடங்க-குணம் உள்ளடங்கிப்போக, குற்றம் உளான் ஒருவனும் - குற்றங்களுள்ளவனாகிய வொருவனும், கணன் அடங்க - குறைகள் அடங்கிப்போகும்படி, கற்றான் ஒருவனும் - கல்வி கற்றவனாகிய வொருவனும், இல் - (இவ்வுலகத்தில்) இல்லை, எ-று.

(வி-ரை.) எல்லாம் அறிந்தவனும் இல்லை; ஒன்றும் தெரியாதவனும் இல்லை; ஒருகுணமுமில்லாமல் குற்றங்களைமாத்திரம் உடை

யவனுமில்லை; கிஞ்சித்தும் சந்தேக விபரீதங்க ளில்லாமல் படித்த திருந்தவனுமில்லை என்பதாம்.

இதனால் உள்ளமட்டும் அறிவையும் குணத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டுமேயல்லது குறைவைக்கண்டு இகழலாகாதென்ற தாயிற்று. எல்லாம்றியாது என்கிறவிடத்தில் (மெய்யீறு - கு - ரு) னல் இகரச்சாரியை தோன்றியது. (௧0௪)

மனைக்கு விளக்கு மடவாள் மடவாள்
தனக்குச்சால் பாகும் புதல்வர்—மனைக்கினிய
காதற் புலவாக்குங் கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகழ்சா லுணர்வு.

(ப-ரை.) மனைக்கு விளக்கு மடவாள்-ஒருவன் வீட்டுக்கு மனைவியே விளக்குப்போலிருப்பவள்; மடவாள் தனக்கு - அந்த மனைவிக்கு, புதல்வர் - மக்கள், சால்பு ஆகும் - பெருமை ஆகும்; மனைக்கு இனிய-இல்வாழ்க்கைக்குப் பிரியமான, காதல் புதல்வர்க்கும் - ஆசையான புத்திரருக்கும், கல்வியே சால்பாகும்—; கல்விக்கும்—; ஓதில்-சொன்னால், புகழ் சால் உணர்வு - கீர்த்திமிகுந்த விவேகமானது, (சால்பாகும்—), எ-று.

(வி-ரை.) நல்ல மனைவியிருந்தால்தான் அந்தவீடு விளங்கும்; நல்ல பிள்ளைகளைப் பெற்றால்தான் அந்தப் பெண்ணுக்குப் பெருமை; அந்தப்பிள்ளைகளும் கல்வி கற்றால்தான் மேன்மை பெறுவார்கள்; அப்படிப் படித்திருப்பதும் சாரத்தைக் கிரகித்திருந்தால்தான்புகழ் பெறுமென்றபடி. இது ஏகாவலி என்னுமலங்காரம்.

'மடவாள்' மடமை அல்லது மடம்-பகுதி, ஆள்-விகுதி. சால்பு: சால் என்னு முரியடியாகப் பிறந்த தொழிற்பெயர். (௧0௫)

இன்சொலா னாகுங் கிழமை யினிப்பிலா
வன்சொலா னாகும் வசைமனம்—மென்சொலின்
நாவினா னாகு மருள்மன மம்மனத்தால்
வீவிலா வீடாய் விடும்.

(ப-ரை.) இன்சொல்லான் ஆகும் கிழமை-இனிமையானசொற்களால் ஒருவனிடத்து உரிமையுண்டாகும்; வன்சொலான் - கடினமான சொற்களால் வசை மனம் - பழிப்புள்ள இதயம், ஆகும்—, ['பகைமனம்' என்று மிருக்கலாம், அதற்குப் பகையுள்ளமனம் என்பது பொருள்]; மென்சொலின் - மெதுவான சொற்களுள்ள, நாவினான் - நாக்கினால், ஆகும் அருள் மனம் - கிருபையுள்ள மனம் உண்டாகும், அம்மனத்தால்—, வீவு இலா - நாசமில்லாத, வீடு ஆய் விடும் - மோக்ஷம் உண்டாகும், எ-று.

(வி-ரை.) நல்லபேச்சினால் எவனும் சொந்தமாவான்; கடினமான பேச்சினால் எவனுக்கும் மனதிற் பகையுண்டாம்; அன்றியும், எப்படிப்பட்ட கடினனிடத்தும் வணங்கி இனிமையாய்ப் பேசினால் அவனுக்கு இரக்கம் உண்டாம்; அப்படி ஒருவனுக்கு இரக்கமுண்டாகி உபகாரமுதலிய நற்செய்கைகளைச்செய்ய அதனால் மனமதெளிந்து மோக்ஷ காரணமாகு மென்றபடி.

வசைமனம் - அருள்மனம் என்று மனதைக் கூட்டிச்சொன்னது "வெளித்தோற்றத்துக்கு மாத்திரமல்ல, உண்மையாகவே" என்பதற்கு என்றறிக. வீவு-தொழிற்பெயர்; வீ - பகுதி, உ-விகுதி.

## நான்மணிக்கடிகை மூலமும் உரையும்
## முற்றுப்பெற்றது.

கடவுள துணை.

நான்மணிக்கடிகை

# செய்யுள் முதற்குறிப் பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அ. | |
| அஞ்சாமை | 33 |
| அந்தணரி | 41 |
| அலைப்பான் | 35 |
| ஆ. | |
| ஆசாரமென்பது | 102 |
| இ. | |
| இரும்பினிரும் | 42 |
| இரைசுடு | 58 |
| இளமைப் | 100 |
| இனிதுண்பா | 68 |
| இன்சொலா | 111 |
| இன்னாமை | 22 |
| ஈ. | |
| ஈத்துண்பா | 69 |
| ஊ. | |
| ஊர்ந்தான் | 80 |
| ஊழியும் | 81 |
| ஊனுண்டு | 75 |
| எ. | |
| எண்ணொக்குஞ் | 106 |
| எருதுடையான | 61 |
| எல்லாவிடத் | 101 |
| எள்ளற்க | 6 |
| எள்ளற்பொருள | 59 |
| என்றுமுள | 67 |
| ஏ. | |
| ஏதிலாரென்பா | 51 |
| ஏரிசிறிதாயி | 107 |
| ஒ. | |
| ஒருவனறி | 109 |
| ஒன்றாக்கல் | 83 |
| க. | |
| கடற்குட்டம் | 23 |
| கண்டதே | 47 |
| கண்ணிற் | 64 |
| கண்ணுள்ளுங் | 72 |
| கந்திற்பிணி | 16 |
| காப்பவர் | 46 |
| கல்லா | 91 |
| கல்லிற்பிறக் | 11 |
| கள்வமென்பார் | 13 |
| கள்ளாமை | 94 |
| கள்ளிவயிற்றி | 10 |
| கள்ளினிமிம் | 102 |
| கற்பக்கழி | 36 |
| கற்றூன்றளறி | 82 |
| கற்றன்னார் | 65 |
| கற்றார்முற் | 14 |
| கன்றாமை | 18 |
| கு. | |
| குழித்துழி | 37 |
| கை. | |
| கைத்திலார் | 77 |
| கைத்துடை | 74 |
| கொ. | |
| கொடுப்பி | 89 |
| கோ. | |
| கோனோக்கி | 36 |
| சா. | |
| சாவாத | 85 |
| சி. | |
| சிறந்தார் | 57 |
| சொ. | |
| சொல்லா | 87 |
| தி. | |
| திரியழ | 73 |
| திருவொக்குக் | 12 |
| திருவிற்றிற | 38 |
| திருவுந்தினை | 48 |
| தூ. | |
| தூர்ந்தொழி | 84 |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| தே. | | பறைநன்று | 20 | மழையின்றி | 5[illegible] |
| தேவரனையர் | 83 | பறைபட | 7 | மறக்களி | 4[illegible] |
| ந. | | பி. | | மறையறிப | 97 |
| நகையினிது | 45 | பிணியன்னர் | 40 | மனைக்காக்க | 25 |
| நகைநல | 32 | பிறக்குங்கா | 49 | மனைக்குப்பாழ் | 28 |
| நல்லார் | 91 | பின்னவாம் | 76 | மனைக்குவிளை | 110 |
| நலனுமிளமை | 90 | பு. | | மா. | |
| நன்றிசா | 53 | புகழ்செய் | 30 | மாசுபடினு | 105 |
| நா. | | புகைவித்தா | 39 | மாண்டவர் | 66 |
| நாக்கினறிப | 86 | பெ. | | மை. | |
| நாவன்றோ | 88 | பெருக்குக | 95 | மையாற்ற | 44 |
| நாற்றமுரை | 54 | பெற்றானதிர் | 26 | மொ. | |
| நி. | | பொ. | | மொய்சிதை | 29 |
| நிலத்து | 15 | பொய்த்த | 24 | யா. | |
| நீ. | | பொறிகெடு | 52 | யாறுளடங்கு | 60 |
| நீரான் | 92 | போ. | | யானையுடை | 63 |
| நெ. | | போதினு | 56 | வ. | |
| நெய்விதிர்ப்ப | 70 | போரறின் | 50 | வடுச்சொ | 108 |
| ப. | | ம. | | வளப்பாத்தி | 21 |
| படியை | 3 | மகனுரைக்கும் | 78 | வன்கண் | 99 |
| பட்டாங்கே | 98 | மடிமை | 96 | வா. | |
| பதிநன்று | 79 | மண்ணியறிப | 9 | வாலிழையார் | 104 |
| பல்லினு | 19 | மதிமன்னு | 1 | வை. | |
| பழியின்மை | 71 | மலைப்பினும் | 31 | வைததனு | 108 |


நான்மணிக்கடிகை செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.